# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
12 NOV 1966
MADRAS



கலைமகள்

மாலை 9] பராபவ-ஐப்பசி-நவம்பர், 1966 [மணி 2

சென்னை அரசாங்க அறநிலையப்

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 9] பராபவ-ஐப்பசி-நவம்பர், '66 [மணி 2


# சங்க நூல்களில் இராமாயணம்

**முன்னுரை:**

அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ் மொழியிலுள்ள நூல்களுள், பழமையும் பெருமையும் வாய்ந்தவை, சங்க நூல்கள் என்பனவாகும். அவைகள் இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது, அறிஞர்கள் ஆராய்ந்து கண்ட முடிபு. 'சங்கமலி செந்தமிழ்' என்று திருஞான சம்பந்தரும், 'சங்கத் தமிழ் மாலை' என்று ஸ்ரீ ஆண்டாளும், 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்று ஔவைப் பிராட்டியாரும் பிறரும் குறிப்பிட்டிருத்தலால், சங்க நூல்களின் அருமை பெருமைகளை யாவரும் இனிது உணரலாம்.

**சங்கச் சான்றோர்கள் :**

இத்துணைப் பழமையும் பெருமையும் வாய்ந்த சங்க நூல்களில், சைவம் வைணவம் முதலிய சமயங்களின், கருத்துக்களும் கொள்கைகளும் தத்துவங்களும் ஆங்காங்கே விரவிக் காணப்படுகின்றன. சங்க காலப் புலவர்கள், சமய உணர்வும் பண்பாடும் நிரம்பிய தலை சிறந்த பெரும் சான்றோர்களாக விளங்கி யிருந்தனர். அவர்கள் தெய்வத் தன்மை வாய்ந்த சிறந்த பெருங் கவிஞர்களாய், 'பொய்யடிமை இல்லாப் புலவர்கள்' எனப் பாராட்டப் பெறும்நிலையில் புகழ் பெற்று விளங்கியிருந்தனர். அத்தகைய தெய்வப் பெற்றிமை மிக்க சங்க காலத்துச் சான்றோர்கள் அருளிச் செய்த சங்க நூல்களில் பல சிறந்த சமய உண்மைகளும் வரலாறுகளும், ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிறப்புற எடுத்து விளக்கப் பெற்றிருப்பது, நம்மனோர் உணர்ந்து மகிழ்தற்குரிய செய்தியாகும்.

**இராமாயணம் :**

நம்முடைய பாரத நாட்டில் வழங்கி வரும் பலப்பல சிறந்த பண்டைய நூல்களுள், இராமாயணம் என்னும் இதிகாசம், ஈடும் எடுப்பும் அற்றது என்பதனை யாவரும் அறிவர். இராமபிரானின் இனிய வரலாறும், இணையற்ற சிறந்த தெய்விக இயல்புகளும், எவருள்ளத்தையும் கொள்ளை கொள்ள வல்லன. மிகவும் கற்றுணர்ந்த அறிஞர்கள், ஏதும் அறியாத பாமரர்கள் ஆகிய எல்லோருக்குமே, எல்லையில்லாச் சுவையும் இன்பமும் நல்கி, யாவராலும் மிகவும் விரும்பிப் போற்றப்படத் தக்கதாக 'இராமாயணம்' இலங்குகின்றது. எத்துணையோ பன்னெடுங்காலமாக, பற்பல நூற்றாண்டுகளாக, பல கோடிக் கணக்கான மக்களின் இதயங்களை எளிதில் கவர்ந்து, இணையற்று விளங்கி வருகின்றது

இராமாயணம்! நம் பாரத நாட்டுக் கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களில் எல்லாம் ஊடுருவித் தோய்ந்து ஒன்றி நின்று, பக்தி உணர்ச்சியினை வற்றாத பெரு வெள்ளம் எனப்பெருக்கெடுத்து ஓடச்செய்து வரும் பெருமைக்குரிய நூல்களுள், இராமாயணம் இணையற்றது என்பதற்குத் தடையும் உண்டோ?

**சங்க நூல்கள் :**

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படும் பழந்தமிழ்ச் சங்க நூல்களிலும் கூட, இராமாயணத்தைப் பற்றிய செய்திகளும் கதைகளும் குறிப்புகளும் விரவி அமைந்து காணப்படுகின்றன. சங்க காலப் புலவர்கள் தாம் பாடத் தலைப்பட்ட செய்திகளையும் கருத்துக்களையும் தகவுற விளக்குவதற்கு, இராமாயண நிகழ்ச்சிகளையும், கதைகளையும் ஆங்காங்கே அழகிய இனிய உவமைகளாக எடுத்துக் காட்டி விளக்கி யிருக்கின்றார்கள்.

எல்லோருக்கும் தெளிவுறத் தெரிந்தனவும், யாவரும் சுவைத்து உவந்து விரும்புவனவும் ஆகிய செய்திகளே, இலக்கியங்களில் உவமைகளாகப் புலவர்களாற் கையாளப்படும். இவ்வடிப்படையில் ஆராய்ந்தால், மிகப்பழங் காலத்திலேயே இராமாயண வரலாறு தமிழ் நாட்டில் நன்கினிது பரவியிருந்தமை புலனாகும். இவ்வுண்மையை விளக்கும் சங்ககால இலக்கியச் சான்றுகள் சிலவற்றை மட்டும், ஈண்டுக் கண்டு இன்புறுவோம் :

**அகநானூறு:**

1. இராமபிரான் சேதுபந்தனம் செய்து, இலங்கை செல்லத் தலைப்படும் முன்னர் ஒரு நாள் மாலை தன் துணைவர்களாகிய வானர வீரர்களுடன், மேலே நிகழ்தற்குரிய போர்ச் செய்திகள் குறித்து, தனுஷ்கோடியிலுள்ள கடற்கரையில், ஓர் ஆல மரத்தின்கீழ்த் தங்கியிருந்து ஆராய முற்பட்டார். அம் மாலைவேளையில், அவ்வால மரத்தின்கண் வாழ்ந்து கொண்டிருந்த பறவையினங்கள் தம் இயல்பிற்கேற்ப ஒன்று கூடிப் பேரொலிசெய்தன. அஃது இராமபிரான் வானர வீரர்களுடன் கலந்து நிகழ்த்திய ஆலோசனைக்குச் சிறிது தடையாக இருந்தது. அதனால் இராமபிரான் அப்பறவைகளை நோக்கித் தம் திருக்கை அமர்த்தினார். அவ்வளவில் அப்பறவைகள் சிறிதும் ஒலி செய்யாமல், அமைதியுற்றடங்கி நின்றன.

இந்த இராமாயண வரலாற்றுச் செய்தியினை, 'ஒரு தலைவனும் தலைவியும் தம்முட் காதலித்துக் களவொழுக்கம் மேற்கொண்டிருந்த பொழுது அலர் தூற்றிய அவ்வூர்ப் பெண்டிர்கள், பின்னர் அவ்விருவரும் முறைப்படி திருமணம் செய்து கொண்ட நிலையில், அலர் தூற்ற வாய்ப்பின்றி நாவடங்கி நின்றனர்' என்னும் கருத்தினை வற்புறுத்த, உவமையாக எடுத்துக் காட்டிக் கடுவன் மள்ளனார் என்னும் புலவர் பின்வருமாறு பாடுகின்றார்.

> வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
> முழங்கிரும் பவ்வம் இரங்கும் முன்துறை,
> வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
> பல்வீழ் ஆலம் போல,
> ஒலியவித் தன்று இவ்வழுங்கல் ஊரே.
>
> —அகநானூறு, 70.

**புறநானூறு:**

2. சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி என்னும் கொடைவள்ளல் ஒருவனிடம் சென்று, புலவர் ஒருவர் அவனைப் புகழ்ந்து பாடினார். அவ்வள்ளல், அவர்தம் புலமை நலனையும் பாடல் நலனையும் வியந்தினிது போற்றி மிகுந்த பரிசில்களை வழங்கினான்; ஏராளமான பொன் அணிகலன்களை அளித்தான். வறுமையிலேயே பெரிதும் உழன்று கிடந்த புலவரும், அவர் தம் சுற்றத்தாரும், இதற்கு முன்னர் அத்தகைய பொன் அணிகலன்களை என்றும் எங்கும் கண்டதிலர். அதனால் அவற்றைச் செய்வதின்ன தென்றறியாமல், விரலில் அணிவதைச் செவியிலும், செவியில் அணிவதை விரலிலும், இடுப்பில் தரிப்பதைக் கழுத்திலும், கழுத்தில் தரிப்பதை இடுப்பிலுமாகக் காண்

பார்க்கு நகைப்புண்டாகும் வண்ணம், மாற்றி மாற்றி யணிந்து கொண்டு மகிழ்ந்து நின்றனராம். இச் செய்தியினை ஊன்பொதி பசுங்குடையார் என்னும் அப்புலவர் தாமே குறிப்பிடுகின்றார்.

அங்ஙனம் குறிப்பிடுங்கால் அவர், 'இராவணன் சீதையைக் கவர்ந்து தேரில் ஏற்றிக்கொண்டு வான்வழியாகச் சென்றபொழுது, இருசியமூக மலையின் அருகில், சீதைப் பிராட்டி தன் அணி கலன்களை யெல்லாம் ஒவ்வொன்றாகக் கழற்றி எறிந்து கொண்டு சென்றாள். அவற்றை அங்கு வாழ்ந்து திரிந்து கொண்டிருந்த வானர சேனைகள் கண்டு எடுத்து, அவற்றின் ஒளியிலும் அழகி லும் மயங்கி, அவற்றைத் தாம் அணிந்து கொண்டு அழகு பார்க்க முற்பட்டன. ஆனால் அணிந்து கொள்ளும் முறை அறியாமையால், அவற்றை மாற்றி மாற்றிப் பிழைபட அணிந்து கொண்டு நகைச் சுவையைத் தோற்றித் திகைத்து மயங்கின' என்னும் இராமாயணக்கதை யினை எடுத்து உவமையாகக் காட்டிப் பாடி, உவகை விளைவிக்கின்றார்.

மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே; அதுகண்டு
இலம்பாடு உழந்தஎன் இரும்பேர் ஒக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்
அரைக்குஅமை மரபின மிடற்றுயாக் குநரும்
மிடற்றமை மரபின அரைக்குயாக் குநரும்
கடுந்தேர் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதர்அணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந் தாங்கு
அறாஅ அருநகை இனிதுபெற் றிகுமே

—புறநானூறு, 378.

**பரிபாடல் :**

(3) இராமாயணத்தில் தாடகை வதம் நிகழ்ந்த பின்னர், இராமன் அகலிகையின் சாபம் தீர்த்தருளிய செய்தியை யாவரும் அறிவர். இந்திரன் வஞ்சக வடிவம் கொண்டு வந்து அகலி கையினைப் புணர்ந்ததும், கவுதம முனி வர் வருதல் கண்டு பூனை வடிவம் கொண்டு மறைந்தோடியதும், கவுதம முனிவர் நிகழ்ந்த துணர்ந்து அகலிகை யினைக் கல்லாகும் வண்ணம் சபித்ததும் ஆகிய செய்திகள், இராமாயணத்தில் வருவன. இவற்றை ஆசிரியர் திருவள் ளுவர் தாமும், தம்முடைய திருக்குறள் நூலில்,

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி.

—திருக்குறள்.

என்று குறிப்பிட்டருளினர். இவ்விரா மாயண கதை பற்றிய குறிப்பு, பரி பாடல் என்னும் சங்கம் மருவிய நூலி லும் பயின்றுள்ளது.

பரிபாடலில் முருகனைப் பற்றிய பாடல்கள் பல வருகின்றன. அவற்றுள் திருப்பரங்குன்றம் பற்றிய பாடற் பகுதி ஒன்றில், அங்கேயுள்ள கோயிலில் அமைந் திருந்த சித்திர மண்டபத்தில், அகலிகை சாப விமோசனம் பற்றிய கதைச் சித்தி ரம் ஒன்றும் வரையப் பெற்றிருந்தது. கோயிலில் முருகனைத் தொழுவதற்கு வரும் அடியார்கள், அச்சித்திரத்தைக் கண்டு வியந்து மகிழ்கின்றனர்.

இந்திரன் பூனை; இவள்
அகலிகை; இவன்
சென்ற கவுதமன்;
சினன் உறக் கல்உரு
ஒன்றிய படிஇது;
என்றுரை செய்வோரும்

—பரிபாடல்:19, 50-53.

**கலித்தொகை :**

(4) சங்கத் தொகை நூல்களுள் மிகவும் புகழ் பெற்ற தொன்றாய்க் 'கற் றறிந்தார் ஏத்துங்கலி' என்னும் சிறப் பினைப் பெற்றுத் திகழ்வது, கலித் தொகை என்னும் நூல். அதன்கண் 'குறிஞ்சிக்கலி' என்னும் பகுதியைப் பாடிய நல்லிசைப் பெரும் புலவர்,

கபிலர் என்னும் கவிஞர் பெருமான். 'மலைநிலத்தில் வாழும் மதங்கொண்ட ஓர் யானையானது பூத்துப் பொலிவு எய்தி நின்ற வேங்கை மரத்தினைக்கண்டு, அதனைப் புலி என மயங்கி மருண்டு, கறுவு கொண்டு அதன்மீது வேகமாகச் சென்று மோதியது. அதனால் அவ் வேங்கை மரத்தின்கண் அதனுடைய தந்தங்கள் ஆழமாகச் சென்று புதைந்து பதிந்து விட்டன. தனது நீண்ட கூரிய தந்தங்களை மீண்டும் அம்மரத்தினின்று இழுக்க முடியாமல், அவ் யானையானது அலறிக் கதறி அழுது வருந்தி ஓலமிடு கின்றது'.

இவ்வியற்கை வருணனைச் செய்தியை விளக்கிப் பாடலுறும் கபிலர், 'இராவ ணன், சிவபிரான் உமைப் பிராட்டியுடன் எழுந்தருளி வீற்றிருக்கும் திருக்கயிலை மலையினைப் பெயர்த்தெடுக்க முயன்று முடியாமல், அதன்கீழ் அகப்பட்டுக் கொண்டு அலறிக் கதறி அழுது ஓல மிட்ட நிகழ்ச்சியினை உவமையாக எடுத் துக் காட்டிப் பாடி உவகை கூர்கின்றார்'.

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந்து உயர்மலை இருந்தனன் ஆக,
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ்ப்புகுத்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல;
உறுபுலி உருஏய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண்டு அதன்முதற் குத்திய மத யானை
நீடிரு விடரகம் சிலம்பக் கூஉய்த்தன்
கோடுபுய்க் கல்லாது உழக்கும் நாடகேள்.
—கலித்தொகை.

**மணிமேகலை :**

(5, 6) செந்தமிழ் மொழியிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் 'மணி மேகலை' என்பது ஒன்று. மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்ப வர், இதனை இயற்றி யருளினர். பௌத்த சமயக் கொள்கைகளைப் பரப்புதற் கென்றே, இந்நூல் தோன்றியது. இதன் கண்ணும் இராமாயணம் பற்றிய குறிப் புக்கள் அமைந்துள்ளன.

கோவலனுக்கும் மாதவிக்கும் மக ளாகப் பிறந்த 'மணிமேகலை' யானவள், அமுதசுரபி என்னும் அரும்பெறற் பாத்திரத்தைப் புத்தர் பெருமான் அவதரித்த வைகாசிப் பூர்ணிமை நாளில், மணி பல்லவத் தீவில், கிடைக்கப் பெறுகின்றாள். அஃது அள்ள அள்ளக் குறையாமற் பெருகும் அட்சய பாத்திரம். அதனைக் கொண்டு மணிமேகலை, 'காணார் கேளார் கால் முடப்பட்டோர் பேணுநரில்லோர் பிணி நடுக்குற்றோர்' முதலிய ஏழைகள் யாவ ருக்கும் உணவு வழங்கி உதவி செய்கின் றாள். விருச்சிகன் என்னும் முனிவராற் சபிக்கப் பெற்று, யானைத்தீ என்னும் தீராத பசி நோய் எய்திப் பன்னிரண்டு ஆண்டுகள் எங்கணும் வருந்தியுழன்ற காய சண்டிகை என்னும் கந்தருவப் பெண் ஒருத்தி, மணிமேகலை பாற் போந்து அவள் அமுதசுரபியினின்று வழங்கிய உணவை உட்கொண்டு, தீராத தன் நோய் தீரப் பெறுகின் றாள். இதற்கு முன்பெல்லாம் எத்துணை மலையளவு உணவையுண்டும் தன் பசி நோய் தணியாமல் இருந்த தன்மையினை மணிமேகலைக்கு அவள் கூறுங்கால், 'இராமபிரான் சேதுபந்தனம் செய்த பொழுது வானர சேனைகள் கொண்டு வந்து எறிந்த பெரிய பெரிய மலைக ளெல்லாம் கடலின் கண் சென்று ஆழ்ந்து மறைந்து நின்றது போல, மலைமலையாகத் தான் இதற்கு முன்பு உண்ட உணவெல்லாம் தன் வயிற்றுக் குள் சென்று மறைந்து அடங்கிப் பசி தணிக்காமல் ஒழிந்தன' என்று கூறிய தாகச் சீத்தலைச் சாத்தனார் பாடுகின்றார்.

யானைத் தீநோய் அகவயிற் றடக்கிய
காயசண் டிகைஎனும் காரிகை வணங்கி,
நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடலரு முந்நீர் அடைத்த ஞான்று
குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை எல்லாம்
அணங்குடை அளக்கர் வயிறுபுக் காங்கு,
இட்டது ஆற்றாக் கட்டழற் கடும்பசிப்
பட்டேன் என்றன் பழவினைப் பயத்தால்.
—மணிமேகலை: 17, 7-14.

மீட்சி என்பது இராமன்வென் றன்என
மாட்சியில் இராவணன் தோற்றமை மதித்தல்.
—மணிமேகலை: 27, 53-54.

எனப் 'பத்துவகை அளவைகள்' பற்றி விளக்குங்காலும் 'மீட்சி' அல்லது பாரி சேடம் என்னும் பிரமாணம் பற்றிய உதாரணம் காட்டும் இடத்தில், இராமன் வென்றதும் இராவணன் தோற்றதும் ஆகிய செய்தியைக் குறிப்பிட்டிருத்தலும் உணர்தற்குரியது.

**சிலப்பதிகாரம் :**

(7) இன்று தமிழ் மக்களிடையே பொதுவாக அனைவராலும் பாராட்டப் பெற்றுச் சிறந்து திகழ்வது, சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியம். இதனை இயற்றியவர் இளங்கோவடிகள் என்னும் தவநலஞ் சான்ற முனிவரர். அவரைச் சமண சமயம் சார்ந்தவர் எனவும் சிலர் கூறுவர். அப்பெருந்தகையார் இயற்றியருளிய சிலப்பதிகார காவியத்திலும், இராமாயணத்தைப் பற்றிய இனிய குறிப்புகள் சில வருகின்றன.

கோவலன் புகார் நகரத்தை விட்டு நீங்கி மதுரைமா நகர்க்குக் கண்ணகியுடன் புறப்படுகின்றான். அவன் புகார் நகரம் விட்டு நீங்கிய நிலையில்அந்நகரம், இராமனைப் பிரிந்த அயோத்தி போலப் பெரிதும் கலங்கி வருந்தியதாகக் கௌசிகன் என்னும் அந்தணன் கூற்றில் வைத்து இளங்கோவடிகள்பாடுகின்றார்:

பெருமகன் ஏவல் அல்லது யாங்கணும்
அரசே தஞ்சம்என் றருங்கான் அடைந்த

அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பேது உற்றதும்

—சிலப்பதிகாரம்.

(8) மதுரைமாநகர் நோக்கிப் புறப்பட்ட கோவலன், வழியிற் கவுந்தியடிகள் என்னும் சமண சமயத் தவமூதாட்டியாரைக் கண்டு வணங்குகின்றான்; வணங்கித் தனக்கு நேர்ந்த துயரநிலை பற்றிக் கூறி மனம் வருந்துகின்றான். அதுபோது கவுந்தியடிகள், 'இராமபிரானே தந்தையின் கட்டளைப்படி கானகம் சென்று, அங்கே தன் மனைவியாகிய சீதையினை இராவணனின் சூழ்ச்சியால் இழந்து வருந்திப் பலவகை இன்னல்களை அடைந்தனன் என்றால், நம்போலும் மனிதர் எம்மாத்திரம்' என்று கூறிக் கோவலனுக்கு ஆறுதல் உரைகள் பகர்ந்ததாக இளங்கோவடிகள்பாடுகின்றார்.

தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்

வேத முதல்வற் பயந்தோன் என்பது
நீ அறிந் திலையோ? நெடுமொழி அன்றே !

—சிலப்பதிகாரம்.

இராமனை 'வேதமுதல்வற் பயந்தோன்' என்றும்; இராமனது வரலாறாகிய இராமாயணம், மக்கள் அனைவராலும் அறியப்பெற்று நாடு முழுவதும் பரவியிருந்தமையின் 'நெடுமொழி' என்றும்; இராமன் 'தந்தைதாய் வாக்கிய பரிபாலனம்' செய்தற் பொருட்டுப் பல இன்னல்களையும் மேற்கொண்டு நின்றான் என்பதனை யுணர்த்தத் 'தாதை ஏவலின் மாதுடன் போகிக் கடுந்துயர் உழந்தோன்' என்றும் கூறியிருக்கும் நுட்பங்கள் நுனித்தறிந்து மகிழ்தற்குரியன.

(9) மேலும், சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டம் என்னும் பகுதியில், சேரன் செங்குட்டுவனுக்கும் கனக விசயர்களுக்கும் நிகழ்ந்த போர்த்திறம் பற்றிக்குறிப்பிடுகையில், 'தேவாசுரப் போர் 18 ஆண்டுகளும், இராம ராவணப் போர் 18 மாதங்களும், பாரதப் போர் 18 நாட்களும், செங்குட்டுவனும் கனக விசயனும் நிகழ்த்திய போர் 18 நாழிகைகளும் நடைபெற்று முடிவுற்றன' என இளங்கோ வடிகள் குறிப்பிடுதலும் காணலாம்.

செறிகழல் வேந்தன் தென்தமிழ் ஆற்றல்
அறியாது மலைந்த ஆரிய மன்னரைச்
செயிர்த்தொழில் முதியோன் செயிர்த்
தொழில் பெருக
உயிர்த்தொகை யுண்ட ஒன்பதிற் றிரட்டி
யென்று

யாண்டும் மதியும் நாளும் கடிகையும்
ஈண்டுநீர் ஞாலம் கூட்டி எண்கொள
வருபெருந் தானை மறக்கள மருங்கின்
ஒருபகல் எல்லை உயிர்த்தொகை யுண்ட
செங்குட்டுவன்.........

—சிலப்பதிகாரம்.

**தொல்காப்பிய மேற்கோள் :**

(10) இராமபிரான் தாடகைவதம் செய்து, அகலிகை சாபம் தீர்த்து, விசுவாமித்திர முனிவர் அழைத்துச் செல்ல மிதிலைமா நகர்க்குட் போகின்றார். அங்கே வீதியிற் போய்க் கொண்டிருக்குங்கால், தற்செயலாக இராமபிரான் அரசமாளிகையின் மேல்மாடியில் உலாவி நின்ற சீதைப் பிராட்டியினைக்காண்கின்றார். சீதையும் இராமபிரானைக் காண்கின்றார். இருவர் கண்களும் ஒன்றை ஒன்று சந்தித்தன; இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்திக் காதல் வயப்பட்டனர். இதனை,

எண்ணரும் நலத்தினாள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றையொன்
றுண்ணவும் நிலைபெறு துணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.

பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்.
—கம்பராமாயணம்.

எனக் கம்பநாடர் கவிதைச் சுவை பெருகக் கவின்மிகப் பாடுகின்றார். இராமன் ஜனகனின் சிவதனுசை முறித்த பின்பே சீதையைக் கண்டதாக வான்மீகி முனிவர் வடமொழியிற் பாடியிருக்கின்றார். ஆயினும், தமிழ் மொழியின் அகப் பொருள் இலக்கணம் வகுத்த முறையினைத் தழுவி, ஜனகனின் சிவதனுசை முறிப்பதற்கு முன்பே சீதை இராமபிரானைக் கண்டு காதல் கொண்டு விட்டதாகக் கம்பநாடர் பாடியருள்கின்றார். கவிச்சுவை யமையப் பாடும் கம்பரின் கற்பனைத் திறனுக்கு, இஃதொரு சிறந்த எடுத்துக் காட்டாகும் எனலாம்.

இங்ஙனம், கம்பநாடர் தாமே தம்முடைய மனம் சென்றவாறு பாடிவிட்டார் எனப் பிறரெவரும் குறைகூற இயலாதவகையில், அவர்க்கு ஆதாரமும் அடிப்படையுமாக அமையத்தக்கதொரு செய்யுள் ஒன்று, தொல்காப்பியப் பொருளதிகார நூற்பா ஒன்றின் மேற்கோளாக, ஆசிரியர் நச்சினார்க்கினியர் அவர்களால் எடுத்துக் காட்டப் பெற்றிருக்கின்றது.

ஆள்வினை முடித்த அருந்தவ முனிவன்
வேள்வி போற்றிய இராமன், அவனொடு

மிதிலை மூதூர் எய்திய ஞான்றே
மதியுடம் பட்ட மாக்கண் சீதை

கடுவிசை வில்ஞாண் இடியொலி கேளாக்
கேட்ட பாம்பின் வாட்டம் எய்தித்

துயிலெழுந்து மயங்கினள்......
—தொல். பொருள், 54 உரை.

**முடிவுரை :**

இதுகாறும் சங்க நூல்களில் காணப்படும் இராமாயணம் பற்றிய குறிப்புகள் சிலவற்றை இயன்றவரைஆராய்ந்து கண்டோம். இலக்கியங்களை ஒரு வகையில் 'துணுக்குகளின் துணுக்கு' என்று குறிப்பிடலாம்.* ஏனெனில், ஒரு நாட்டில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடை பெற்றாலும், அவைகள்அனைத்தையுமே பற்றி மக்கள் ஆராய்வதோ, பேசுவதோ இல்லை. ஒரு சில நிகழ்ச்சிகள் மட்டுமே மக்களால் மதிக்கவும் பேசவும் பெறும். அவைகளுள்ளும் மிகச் சிலவே எழுதிவைக்கப் பெறும். அவற்றுள்ளும் மிகமிகச் சிலவே நூல்களில் இடம் பெறும். அந்நூல்களினுள்ளும் ஏதோ ஒரு சிலவே இலக்கியங்களாக விளங்கும் மாண்பை எய்தும். அவைகள் தம்முள்ளும் ஒருசிலவே விரைவில் அழிந்து போகாமல் நிலைத்து நிற்க வல்லன. அங்ஙனம் நிலைத்து நிற்க வல்லனவற்றுள்ளும் இரண்டாயிரம் ஆண்டுகளாக நிலைத்து நின்று திகழக் கூடியவை, மாபெரும் சிறப்புடைய ஒரு சில நூல்கள் மட்டுமேயாகும். இம் முறையில் ஆராய்ந்து பார்த்தால், நம்முடைய பழந்தமிழ்ச் சங்க நூல்களில் அமைந்து காணப்படும், இராமாயணம் பற்றிய குறிப்புக்கள் எத்துணைச் சிறப்பும் விழுப்பமும் உடையவை என்பது தெற்றென விளங்கும். இத்தகைய இராமாயணம் என்னும் இதிகாசத்தினை நாம் அனைவரும் கற்றுப் போற்றி நலம் எய்துவோமாக!

—ஆசிரியர்.

---

* "Literature is a fragment of a fragment; of all that ever happened or has been said, but a fraction has been written, and of this but little is extant."

—GOETHE.

# திருமுருகாற்றுப்படை

( கருத்துச் சுருக்கம் )

**திருப்பரங்குன்றம் :**

உலகத்திலுள்ள உயிர்த் தொகுதிகள் அனைத்தும் மகிழும்படி எழுந்து, மேரு மலையை வலமாகச் சுற்றி வருபவன் சூரியன். அவனைப் பல சமயத்தவர் களும் புகழ்ந்து போற்றுவர். அத்த கைய சூரியன், கடலின்கண் உதயம் செய்தாற் போல, விளங்குபவன் முருகன்.

நீல நிறம் வாய்ந்தது கடல் ; அது போல முருகன் ஏறிவரும் மயில் நீலநிற முடையதாகத் திகழ்கின்றது. சூரியன் சிவந்த நிறம் உடையவனாக இருக்கின் றான்; அதுபோல, முருகனும் செந்நிறம் உடையவனாகத் திகழ்கின்றான். சூரியன் உலகின் புற இருளை நீக்குகின்றான்; அதுபோல முருகன் தன்னை வழிபடும் அடியவர்களின் அக இருளைப் போக்கி யருள்கின்றான். சூரியனுடைய கதிர்கள் ஒளியைத் தந்து உயிர்களுக்கு நலம் செய் கின்றன. அதுபோல முருகனின் திரு வருளும் உயிர்களுக்கு நலம் பல விளைத்துப் பாதுகாத்து அருள்கின்றது. சூரியனைப் பல சமயத்தவர்களும் போற் றுதல் போல, முருகனையும் பல சமயத் தவரும் விரும்பிப் போற்றுவர். இவ் வாற்றால், முருகன் உலகுக்கு ஒரு பெரும் ஞான சூரியனாகி, எங்கும் என்றும் நீக்க மின்றிப் பரவிச் சுடர் விடும் ஒப்பற்ற ஒளி வடிவமாய்த் திகழ்கின்றான்.

அவனுடைய திருவடிகள் அழகும் வலிமையும் உடையவை; தம்மை வந்து புகலடைபவர்களின் தீவினையையும் அறி யாமையையும் போக்கிக் காத்தருள் பவை. அவனுடைய திருக்கைகள் இடியைப் போலப் பகைவர்களை அழிக்க வல்லன. அவன் குற்றமற்ற கற்பினை யும், ஒளி பொருந்திய நெற்றியினையும் உடைய தெய்வயானையின் கணவன். வெண் கடம்ப மரத்தின் பூவால், தேர்ச் சக்கரம் போலத் தொடுக்கப் பெற்ற குளிர்ந்த உருண்ட மலர் மாலைகள், அவன் மார்பில் அசைந்து கொண்டிருக் கும். அவன் தன்னுடைய திருமுடியிற் காந்தட் பூக்களாலாகிய பெரியகுளிர்ந்த மாலைகளை அணிந்து கொண்டிருப்பான். அக் காந்தட் பூக்கள் வண்டுகள் மொய்க்கப் பெறாத சிறப்புடையவை.

அவனுடைய வேல், ஒளி மிகுந்தது; இலை வடிவானது; கூர்மை மிக்கு நீண் டிருப்பது; உலகில் பழமையாக உள்ள கடலும் நிலை குலையும்படி அதனுள்ளே புகுந்து, அங்கே ஒளித்துக் கொண்டி ருந்த சூரபதுமனை இரு கூறாகப் பிளந் தது; அதனால் குதிரைத் தலையும் மனித உடலும் ஆகிய இரண்டு பெரிய வடிவங் கள் ஒன்றாக அமைந்த அச்சூரபதுமனு டைய உடல், அறுபட்டு வேறு வேறு துண்டங்களாயின. கவிழ்ந்து தொங் கும் பூங்கொத்துக்களை உடைய மாமர மாகச் சூரபதுமன் வடிவெடுத்து வந் தான். அதுபோது முருகன், அவுணர் களின் மிக்க வலிமை அழியும்படியும், அவர்களுக்கு அச்சம் தோன்றும்படியும் போரிட்டு, மாமரமாக நின்ற சூரபது மனைத் தடிந்தான்.

அத்தகைய குற்றமற்ற வெற்றியினை யும், ஒருவராலும் அளந்தறியவொண் ணாத நல்ல புகழினையும், இரத்தக் கறை யால் சிவந்த வேல் ஆகிய படையையும் உடையவன் முருகன். அவன் மாடங் கள் மிக்க மதுரைக்கு மேற்கே உள்ள திருப்பரங்குன்றில் பெரிதும் விரும்பி எழுந்தருளி யிருக்கின்றான். அதுவும் அன்றி—

**திருச்சீரலைவாய் :**

முருகன், பிணிமுகம் என்னும் யானை யின் மத்தகத்தில், பொன்னரி மாலை யும் பட்டமும் கிடந்து அசையும்படி,

ஏறி அமர்ந்து இருப்பன். தாமம் முகுடம் பதுமம் கிம்புரி கோடகம் என்னும் ஐந்து வகை உறுப்புக்களையும், நிரம்பிய வேலைப்பாட்டினையும் உடைய அவனது திருமுடியில், வெவ்வேறு நிறங்களை உடைய அழகிய மணிகள் மின்னலைப் போல ஒளிவிட்டு அழகு படுத்தும். அவனுடைய திருமுகம் நிறை வெண்மதியைப் போன்றது. அவனது காதுகளில் அசைந்து ஒளிவிட்டு விளங்கும் பொற்குண்டலங்கள், நிறை வெண்மதியைச் சூழ்ந்து, அதன் அருகில் விளங்கும் விண்மீன்களைப் போன்று திகழ்கின்றன.

வருத்தங்களைப் பொருட்படுத்தாத கொள்கையுடன், தமது தவ ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கின்ற ஞானிகளின் உள்ளத்திற் பொருந்தி, முருகனது ஒளி மிக்க அழகிய திருமுகங்கள் தோன்றும். அம்முகங்களுள் ஒன்று, இருள் மிக்க இப்பெரிய உலகமானது குற்றமின்றி விளங்கும்படி பல ஒளிக் கதிர்களைத் தோற்றுவிக்கும்; ஒரு முகம், அன்பர்கள் துதிக்க, அவர்களுக்கு இணங்கி இனிதாகத் தோன்றி, அவர்கள் பால் உள்ள காதலால் மகிழ்ந்து, அன்போடு வரம் கொடுக்கும்; ஒரு முகம், மந்திரங்களை உடைய வேத விதிகளினின்று வழுவாத அந்தணர்களின் வேள்விகளுக்கு இடையூறு நேராதபடி கடைக்கண் நோக்கம் செலுத்தும்; ஒரு முகம், மக்களின் அறிவினுள் அகப்படாது எஞ்சி நின்ற பொருள்களை எல்லாம், உலகம் இன்புறும்படியாக உணர்த்தி, கலை நிரம்பிய முழு வெண் திங்கள் போலத் திசைகளை எல்லாம் ஒளிபெறச் செய்து கொண்டிருக்கும்; ஒரு முகம், பகைவர்களை அழித்து, அவர்கள் பிறர்மேற் செய்யும் போரைக் கெடுத்து, நீங்காத கோபம் கொண்ட நெஞ்சத்துடன் போர்க்களத்தை விரும்பும்; ஒரு முகம், கொடி போன்ற இடையை உடையவளும், குறவர்களின் அழகிய இளம் பெண்ணும் ஆக உள்ள வள்ளி அம்மையுடன் மகிழ்ச்சி யுற்றிருத்தலை விரும்பி இருக்கும். இங்ஙனம், முருகனின் ஆறு திருமுகங்களும் அவ்வவற்றிற்குரிய தொழில்களை முறைப்படச் செய்து கொண்டு வருகின்றன.

அவனது அழகிய பெரிய மார்பில் மாலைகள் தாழ்ந்து கிடக்கும்; உத்தம இயல்பிற்குரிய அடையாளங்களாகிய ரேகைகள், அம்மார்பில் தோள்கள் வரையிற் படர்ந்து நீண்டிருக்கும். அந்தத்தோள்கள் மிக்க வலிமை யுடையனவாய், ஒளி பொருந்திப் புகழ் நிறைந்து வளைந்தும் நிமிர்ந்தும் இருக்கும். அவன் கைகளில் ஒன்று, உயிர்களைச் சூரிய வெப்பத்தினின்று காப்பதற்காக வானத்திற் செல்லுகின்ற தெய்வ முனிவர்களுக்குப் பாதுகாவலாக ஏந்தியது; ஒருகை இடுப்பிலே வைத்தது; ஒரு கை, அழகிய ஆடை யணிந்த தொடையின் மேலே கிடப்பது; ஒரு கை, அங்குசத்தைப் பிடித்துச் செல்லுவது; ஒரு கை, கேடயத்தைப் பிடித்துள்ளது; ஒரு கை வேலைச் சுழற்றிக் கொண்டிருப்பது; ஒரு கை, மார்பிலே தங்கி விளங்குவது; ஒரு கை, மாலையோடு அழகுறத் தோன்றுவது; ஒரு கை கொடியோடு மேலே சுழன்று கொண்டிருப்பது; ஒரு கை, இனிய ஓசையுடன் ஒலிக்கின்ற மணியை மாறி மாறி ஒலிக்கச் செய்வது; ஒரு கை, மேகத்திலிருந்து மழைத் துளியைப் பொழியச் செய்வது; ஒரு கை, தெய்வ உலகப் பெண்களுக்கு மணமாலையைச் சூட்டுவது. இவ்வாறு முருகனின்பன்னிரண்டு திருக்கைகளும் தத்தமக்குரிய முறையில் தொழில் செய்து கொண்டிருக்கின்றன.

வான துந்துபி ஒலிக்கவும், ஊதுகொம்புகள் இசைக்கவும், வெண் சங்குகள் முழங்கவும், இடியேறு போன்ற முரசம் அதிரவும், மயிலானது வெற்றிக் கொடியின் மீது இருந்து அகவவும், வான வழியாக விரைவாகச் செல்லுதலை மேற்கொண்டு, முருகன் திருச்செந்தூரிலே வந்து தங்குவான். அதுவும் அன்றி—

**திருவாவினன்குடி :**

முருகன் குற்றமற்ற அருட் கற்பினை யுடைய தெய்வயானை அம்மையுடன்

ஆவினன் குடி என்னும் தலத்தில் சில நாள் தங்கியிருத்தலும் உரியன். அத் திருவாவினன்குடியில், நான்முகன் காரணமாக நேர்ந்த தங்கள் குறை தீரும் பொருட்டுத் திருமால் முதலியோர், முப்பத்து முக்கோடி தேவர்களோடும் பதினெண் வகைத் தேவகணங்களோடும் வான் வழியாக முருகனைக் காண வந்தார்கள். அவர்கள் தாமே முன் சென்று முருகனைக் காண அஞ்சி, முருகனின் அருளுக்குரிய சிறந்த முனிவர்களை முன்னே செல்லச் செய்தனர். அம்முனிவர்களை அடுத்து அன்பு நிறைந்த நெஞ்சையும் மென் மொழியையும் உடைய கந்தர்வர்கள் இனிய யாழை இசைத்துச் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து கந்தர்வப் பெண்கள் சென்றனர். இங்ஙனம் சிறந்த முனிவர்களும், கந்தர்வர்களும், கந்தர்வ மகளிரும், முன்னே செல்ல, அவர்களின் பின்னே திருமாலும், உருத்திரனும், இந்திரனும் இந் நிலவுலகிற்கு வந்தார்கள். இங்ஙனம் தேவர்களும் மூவர்களும் வந்து கண்டு வணங்கிக் குறை இரக்கும்படி, முருகன் திரு ஆவினன்குடியில் தங்கி யிருப்பான். அதுவும் அன்றி—

**திருவேரகம் :**

திருவேரகம் என்னும் தலத்திலும் எழுந்தருளியிருப்பதற்கு உரியவன் முருகன். திருவேரகத்தில் முருகனை இரு பிறப்பாளராகிய அந்தணர்கள், உரிய காலத்தைத் தேர்ந்து துதிப்பர். அவர்கள் தாய் வழியும் தந்தை வழியும் ஆகிய மரபு இரண்டும் நன்கு மதிக்கப்பட்ட பழம் பெரும் குடிகள் பலவற்றில் தோன்றியவர்கள். ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் தமக்குரிய ஆறு தொழில்களிலும் முறை பிறழாது ஒழுகுபவர்கள். நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமசரிய நெறியில் கழித்தவர்கள். அறத்தை வளர்க்கும் கொள்கை யுடையவர்கள். ஆகவனீயம் தட்சிணாக்கினி காருகபத்தியம் என்னும் முத்தீச் செல்வத்தை வளர்ப்பவர்கள். ஒன்பது இழைகளைக் கொண்டு முப்புரிகளாக அமைந்த நுண்ணிய பூணூலை உடையவர்கள். இவர்கள் ஈரமான ஆடை, உடம்பிலே கிடந்து உலரும்படி உடுத்திக் கைகளை உச்சியிற் குவித்து, ஆறு எழுத்தாகிய மந்திரத்தை வாய்க்குள்ளே உச்சரித்து, மணம் பொருந்திய நல்ல மலர்களைத் தூவி, முருகனைப் புகழ்ந்து வழி படுவார்கள். இவ்வந்தணர்கள் வழிபாட்டுக்கு மிகவும் மகிழ்ந்து முருகன் திருவேரகத்தில் தங்கி யிருப்பான். அதுவும் அன்றி—

**குன்றுதோறாடல் :**

முருகன் குறிஞ்சி நிலமாகிய குன்றுகள் தோறும் வேலனாக நின்று ஆடுதலையும் தனக்குரிய நிலைபெற்ற குணமாகக் கொண்டவன். குன்றுகளில் வேடுவர்கள் வில்லை ஏந்தி, மார்பில் மணமுள்ள சந்தனத்தைப் பூசி, மூங்கிலிலே விளைந்த கள்ளின் தெளிவைத் தங்கள் சுற்றத்தாருடன் கூடி உண்டு மகிழ்ந்து, தொண்டகம் என்னும் பறையைக் கொட்டிக் குரவைக் கூத்தாடுவார்கள். இவ் வேடர்களின் பெண் மக்கள் சுனையிற் பூத்த மலர்களைக் கண்ணியாகத் தொடுத்துத் தலையில் அணிந்திருப்பர். அவர்களின் கூந்தல் சேர்த்துக் கொண்டையாகக் கட்டப் பெற்றிருக்கும். மராமரத்தின் வெண் பூங்கொத்துக்களையும், கஞ்சங் குல்லையையும், இடையிடையே சேர்த்துக் கட்டிய தழை ஆடையை அரையில் உடுத்திருப்பார்கள். பலவகை மணி வடங்களையும் அணிந்திருப்பார்கள். இப் பெண்களும் குரவைக் கூத்தில் கலந்து கொண்டு குரவைக் கூத்தாடுவார்கள்.

வேடர்கள் ஆடும் குரவைக் கூத்தில் படிமத்தான் எனவும், தேவராளன் எனவும் கூறப்பெறும் வேலனும் கலந்து கொண்டு ஆடுவான். கோயிலில் பூசை செய்து கொண்டு, தெய்வ ஆவேசம் பெற்று ஆடி, குறி முதலியன சொல்லி வருதல், இவ்வேலனின் செயலாகும். வேலைக் கையிற் பிடித்துக் கொண்டு ஆடுவதனால், கோயிற் பூசகனாகிய இவனுக்கு வேலன் எனப் பெயர் ஆயிற்று. மலை நாட்டில் வேலன் என்ற பெயரோடு இன்றும் கோயிற் பூசகன் வழங்கப்படுகின்றான்.

குரவைக் கூத்தாடும் வேலன், பச்சிலைக் கொடியில் சாதிக் காயை இடையிடையே சேர்த்து, தக்கோலக் காயைக் கலந்து, காட்டு மல்லிகையுடன் வெண்தாளியைக் கட்டின கண்ணியை அணிந்திருப்பான். சிவந்த மேனியனுய்ச் செவ்வாடை தரித்திருப்பான். அவன் தன்னுடைய காதுகளில் அசோகம் தளிரைச் செருகி யிருப்பான். காலில் கச்சை கட்டிக்கழல் அணிந்திருப்பான். வெட்சி மாலை சூடியிருப்பான். குழலையும் கொம்பையும் ஊதிச் சிறிய இசைகளை உண்டாக்குவான். ஆட்டுக் கிடாயும் மயிலும் அவனுக்கு அருகில் இருக்கும். அவன் கோழிக் கொடியை ஏந்தி யிருப்பான். உயரமான வடிவத்தையுடைய அவன், தோளில் கடகத்தை அணிந்து, நிலத்தில் புரளும்படி ஆடை உடுத்தி யிருப்பான். நரம்பு ஒலித்தது போன்ற இனிய குரலிலே பாடும் பெண்களுடன், மான் பிணைகளைப் போன்ற இளம் மகளிரை முழவு போன்ற தன் தோள்களிலுலே தழுவி ஆடுவான்.

இங்ஙனம் வேடர்களும் வேட்டுவ மகளிரும் வேலனும் குரவைக் கூத்தாடி மகிழும் குன்றுகள் தோறும், முருகன் தானும் ஆடல் நிகழ்த்தி நிலைபெற்று விளங்குவான். அதுவும் அன்றி—

**பழமுதிர்சோலை :**

முருகன், எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பான். அவன்இல்லாத இடம் எதுவுமில்லை. உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி, அன்பினுல் தன்னை வழிபடும் அடியவர்கள் அனைவருக்கும் ஏற்ற பெற்றி அவன் அருள் புரிந்து உதவுகின்ருன். சிறிய தினை அரிசியைப் பூக்களோடு கலந்து பிரப்பரிசியாக வைத்து, ஆட்டை அறுத்துக் கோழிக் கொடியை நிறுத்தி, மலை நிலத்து ஊர்கள் தோறும் எளிய மக்கள் இயற்றும் சிறப்புடைய திருவிழாக்களிலும் அவன் எழுந்தருளியிருப்பான். அன்பர்கள் தன்னைத் துதிப்பதனுல், அவர்கள் விரும்பும் இடங்களில் எல்லாம் தங்கி நிலைபெறுவான். படிமத்தான் ஆகிய வேலன் இயற்றும் வெறியாடு களங்களிலும், காடுகளிலும் சோலைகளிலும், ஆறுகளிலும், குளங்களிலும், நாற்சந்தி முச்சந்திகளிலும், புதிய பூக்களையுடைய கடம்ப மரத்திலும், ஊர் நடுவில் உள்ள மரத்தின் அடியிலும், மக்கள் பலரும்கூடும் பொது இடமாகிய அம்பலங்களிலும், பசுக்கள் உராய்ந்து கொள்ளும் நடுதறிகள் உள்ள இடங்களிலும் முருகன் எழுந்தருளி விளங்குவான். அன்றியும் நாத்திகர்கள் அஞ்சுமாறு, தான் வந்து தோன்றும்படி ஆற்றுப் படுத்தப் பட்ட மலைக் கோயில்களிலும் முருகன் உறைவான்.

முருகன் இவ்வாறு ஆங்காங்கே பலவிடங்களிலும் தங்கி விளங்கி இருப்பான். அவ்விடங்களுள் பழமுதிர்சோலை என்னும் தலமும் ஒன்று. அங்குள்ள மலையினின்று பெருகும் அருவி, பலநிறம் பொருந்திய ஆடைகளைப் போல ஒடுங்கி அசைந்து வரும்; அகில் மரங்களைச் சுமந்து வரும்; சந்தன மரங்களை உருட்டிக்கொண்டு வரும்; மூங்கிற் கிளைகளைப் பறிக்கும்; மலைமேல் தொடுக்கப்பட்ட தேன் கூடுகளைச் சிதைக்கும்; ஆசினிப் பலாவின் முதிர்ந்த சுளைகளும், சுரபுன்னை மரத்துப் பூக்களும், அவ்வருவி நீரில் உதிர்ந்து விழும்; ஆணும் பெண்ணும் ஆகிய கருங் குரங்குகள் நடுங்கவும், யானைகள் குளிரால் ஒடுங்கவும், அவ்வருவி வெள்ளம் அலைவீசிச் செல்லும். பெரிய களிறுகளின் முத்துடைய தந்தங்களை வாரி எடுத்துப் பொன்னும் மணியும் கொழித்துக் கொண்டு, அருவி வெள்ளம் தாவிக் குதித்து ஓடும். அது போது, அருவி நீர்ப் பெருக்கு வாழை மரங்களைச் சாய்க்கும். தெங்கங் குலைகளை உருட்டும். கரடிகளும் பன்றிகளும் கோழிகளை அஞ்சிக் கற் பிளவாகிய குகைகளில் ஒளிந்து கொள்ளச் செய்யும். காட்டெருமைக் கிடாய்கள் கதறும்படி மிக உயரத்திலிருந்து 'இழும்' என்ற ஓசை உண்டாகும்படி மலைமேல் இருந்து அருவிகள் கீழே விழும். இத்தகைய அருவியை உடைய பழமுதிர் சோலை என்னும் தலத்திற்கு உரிமை உடையவன் முருகன்.

**ஆற்றுப்படுத்துதல்:**

இவ்வாறு திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திரு ஆவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர் சோலை என்னும் ஆறு தலங்களிலும் முருகன் எழுந்தருளியிருப்பான். அவனுடைய திருவடியை நினைவு கூர்ந்த நின் உள்ளம் செம்மல் உள்ளமாகும். நினைக்கத் தகாதவற்றை விடுத்து நினைக்கத் தக்கதை நினைக்கப் பெற்றதனால், அது சிறப்புடைய தாயிற்று. நன்மை பொருந்திய கொள்கையை விரும்பிய சிறந்த உள்ளத்துடன், நீ முருகனிடம் சென்று தங்கும் மெய்ஞ்ஞானப் பேற்றைப் பெற விரும்பினையாயின், நற்பண்புகள் பலவும் சேர்ந்து நன்மை பொருந்திய நின் நெஞ்சத்தில் உண்டான இனிய விருப்பம் கை கூடி நிறைவேறும். ஆதலின் நீ விரும்பிய அந்நற் பேற்றை அடைய இப்பொழுதே இம் முயற்சியை மேற்கொள்க. மேற்குறித்த ஆறு தலங்களிலோ, அல்லது வேறு பிற இடங்களிலோ சென்று, நீ முருகனை நேரிற் காணலாம். அங்ஙனம் காணும் பொழுது இனிய முகத்துடன் அவனை அன்புடன் துதித்துக் கையினால் தொழுது வாழ்த்தி, அவனது திருவடிகள் உனது தலையில் பொருந்தும்படி வணங்கிப் பின் வருமாறு புகழ்க:—

**புகழுரைகள்:**

''நெடிய பெரிய இமய மலையில், சரவணப் பொய்கையில் அக்கினித் தேவன் அங்கையில் ஏற்று விடுப்ப, அங்கே கார்த்திகைப் பெண்டிர் அறுவராலும் பாலூட்டி வளர்க்கப் பெற்று, ஆறு வடிவங்கள் ஒன்றாகச் சேர்ந்த செல்வனே! கல்லால மரத்தின் நிழலில் எழுந்தருளும் சிவபிரானின் புதல்வனே! மலைமகளின் புதல்வனே! பகைவர்களுக்குக் கூற்றுவனைப் போன்றவனே! போரில் வெற்றியைத் தரும் துர்க்கையின் சிறுவனே! அழகிய அணிகலன்கள் பல அணிந்த சிறப்பினையுடைய காடுகிழாளின் குழவியே! தேவர்கள் வணங்குகின்ற விற்படையை உடைய தலைவனே! மாலை யணிந்த மார்பனே! நூல்களை உணர்ந்த புலவனே! போரில் ஒப்பற்றவனே! போரில் வெற்றி மிக்க வீரர் வீரனே! அந்தணர்களுக்குச் செல்வமாக விளங்குபவனே! அறிஞர்கள் புகழ்கின்ற மலை போன்றவனே! வள்ளி தெய்வயானையின் கணவனே! வேலைக் கையில் ஏந்திய, சான்றாண்மைக் குணங்களாகிய செல்வம் மிக்கவனே! கிரவுஞ்சம் என்னும் மலையை அழித்த அழியாத வெற்றிப் புகழை உடையவனே! வானளாவிய பெரிய மலைகளையுடைய குறிஞ்சி நிலத் தலைவனே! புகழ் மிக்க புலவர்களுக்குத் தலைவனே! பெறுதற்கரிய சிறப்பினை உடைய வீடுபேற்றைத் தரும் முருகனே! விரும்பி வழிபடும் அடியவர்களுக்கு எல்லா இன்பங்களையும் நிறையக் கொடுக்கும் புகழ் மிகுந்தவனே! துன்புற்றவர்களுக்கு அருள் புரியும் வேந்தனே! அடியவர்களைத் தாங்குகின்றவனே! பகைவர்களுக்கு அச்சத்தை விளைவிப்பவனே! நெடுவேளே! பெரியவர்கள் எல்லாம் போற்றுகின்ற பெரும் புகழ் மிக்க இறைவனே! சூரபதுமனின் குலத்தை வேரோடு அறுத்த வலிமை மிக்கவனே! மதவலி என்ற பெயருடையவனே! போர் புரிதலில் எடுத்துக் காட்டானவனே! பெருந் தகையோனே!'' என்று பலவாறாக யான் கூறிய முறையில் நீ அவனை விடாது புகழ்க. ''பெருமானே! நின் சிறப்பை முழுதும் அளந்தறிதல் உயிர்களுக்கு இயலாது. ஆதலின் நின் புகழை முழுவதும் கூறுதற்கு எளியேன் வல்லன் அல்லேன். நினக்கு இணையானவர்கள் இல்லாத புலமை உடையவனே! நின் திருவடிகளை நினைந்து விரும்பி இங்கு வந்தேன்'' என்று முருகன்பால் நின் விண்ணப்பத்தைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்க.

**முருகன் அருள்புரிதல்:**

இங்ஙனம் நீ, நின் விண்ணப்பத்தைச் சொல்லி முடிப்பதற்குள், பல் வேறு வடிவம் கொண்ட சிறு பூதங்கள் பல அவ்விடத்தே பெருமை மிகத் தோன்றி ''இவன் தங்கள் அருளைப் பெறுதற்குத் தகுதியுடையவன்; அறிவு முதிர்ந்த சொல் வளமுடைய புலவனாகிய இவ்

விரவலன், தங்களின் செழும் புகழை நாடி இங்கே வந்திருக்கின்றான்'' என்று இனிய நல்ல சொற்களால் முருகனைப் பரவும். அப்போது தெய்வத் தன்மை நிரம்பியதாயும், வலிமை மிக்கதாயும், வானத்தை அளாவுகின்றதாகவும் உள்ள உயர்ந்த வடிவத்துடன் முருகன்தோன்றுவான். தோன்றி, அச்சம் தர வல்ல தனது பெருநிலையை உள்ளடக்கி மறைத்துக்கொண்டு, மணம் கமழ்வதும், தெய்வத்தன்மை யுடையதும் பழமை வாய்ந்ததுமான தனது இளமை நலத்தைக் காட்டி, ''நினது வரவை யானறிவேன். நீ அஞ்சற்க'' என்று அன்புள்ள நல்ல மொழிகளைப் பலகாலும் கூறி அருள் புரிவான். மேலும், உலகத்தில் நினக்கு ஒருவரும் ஒப்பில்லை எனும்படி பெறுதற்கரிய சிறந்த பல பரிசில்களையும் வழங்கியருள்வான் [என்பது திருமுருகாற்றுப் படையின் கருத்துச் சுருக்கம்].

—ஆசிரியர்.

---

## மதிப்புரைகள்

### 1. ஸ்ரீ பரார்த்த நித்திய பூஜா விதி :

இந்நூல் தேவகோட்டைச் சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தின் வெளியீடு. ஸ்ரீ அகோர சிவாசாரியர் அருளிய 'சிவாலய நித்திய பூஜா விதி' என்னும் நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. வியாகரண சிரோமணி திரு. கே. எம். சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களால் தமிழாக்கம் செய்யப் பெற்று, திரு. பொ. முத்தையா பிள்ளை அவர்களாலும், சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்களாலும் பரிசோதிக்கப் பெற்று, திரு. மு. ராம. சுப. சுவாமிநாதன் செட்டியார் அவர்களின் பொருளுதவியினால் பதிப்பிக்கப் பெற்றது. இந்நூல் பூர்வ பாகம், உத்தர பாகம் என்னும் இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. பூர்வ பாகத்தில் ஆசார்ய இலக்கணம், அவரது நாட் கடமை நியமங்கள், தர்ப்பணம், நியாசம், சந்தியா விதி, தியானம், மார்ஜனம், அகமர்ஷணம், காயத்ரி ஜபம் முதலிய பொருள்களும்; உத்தர பாகத்தில், பிராணாயாமம், சோஷணம், பிண்டீகரணம், பலவகை நியாசங்கள் முதலியவற்றின் விவரங்களும் தரப்பட்டுள்ளன. அடுத்து உஷக்கால பூஜை, திருமஞ்சனம், காலசந்தி, பலவேறு தெய்வங்கட்கு உரிய பூஜைகளின் விவரங்கள் முதலியன விரிவாகவும் விளக்கமாகவும் தரப் பெற்றிருக்கின்றன. நல்ல இனிய திருத்தமான தமிழ் நடையில் இந்நூல் அமைந்துள்ளது. சிவாசாரியர்களுக்கும், சிவதீட்சை பெற்றவர்களுக்கும், கோயில் வழிபாட்டில் ஈடுபாடு உடையவர்களுக்கும் பயன்படத் தக்க சிறந்த நூல். விலை ரூபா. 2/-. கிடைக்குமிடம்:சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை, இராமநாதபுரம் மாவட்டம்.

### 2. (அ) ஜோதி இராமலிங்கம்:
### (ஆ) மாணிக்க ஜோதி:

கவியோகி மகரிஷி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்களைத் தமிழ் நாடு நன்கறியும். அவர்கள் பல மொழிகள் பயின்றவர்கள்; பல நாடுகளுக்குச் சென்று கண்டறிந்தவர்கள்; பல கலைகளில் வல்லவர்கள்! எத்தனையோ பல அரிய நூல்களை இயற்றி அளித்து அரும் பெரும் தொண்டாற்றி வருபவர்கள்! இத்தகையதவஞானப் பெருந்தகையார், ஆகிய சுவாமி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் இராமலிங்க அடிகளார் பற்றியும், மாணிக்க வாசகப் பெருமானைப் பற்றியும் இயற்றி அளித்து உதவியுள்ள இனிய நல்ல நாடக நூல்களே இவை யிரண்டும் ஆகும். நூல்களின் பொருளும் நடையும் அமைப்பும் மிகச் சிறந்து விளங்குகின்றன. திருவருட்பாப் பாடல்களும், திருவாசகப் பாடல்களும் முறையே இவ்விரு நூல்களிலும் இடை யிடையே இனிது இணைத்து இயைக்கப் பெற்றிருத்தல், அனைவர்க்கும் பெரிதும் பயன்படும். ஆசிரியரின் நாடகக் கலை அறிவு முழுவதும், இந்நூல்களில் பயன்படுத்தப் பெற்றுள்ளது. கோயில்களில் விழாக் காலங்களில், சமய உணர்வு ஊட்டத்தக்க நிலையில், நாடகங்களாக நடிக்கப் பெறுவதற்கு இந்நூல்கள்மிகப் பெரிதும் பயன்படும். சமய உணர்வும், நாடகக் கலை ஆர்வமும் உடைய அனைவரும், பெற்றுப் படித்துப் பயன் பெறுதற்கு உரிய சிறந்த நூல்கள். விலை: தனித்தனியே ரூபா 2-00. கிடைக்குமிடம்: சுத்தானந்த நூலகம், யோக சமாஜம், சென்னை-20.

ஆசிரியர்.

# திருமுருகாற்றுப்படையின் சிறப்பு

**முன்னுரை :**

திருமுருகாற்றுப்படை தமிழ்த் தெய்வமாகிய முருகப் பெருமானின் துதி நூல்கள் பலவற்றுள், மிகவும் முதன்மை மையும் தொன்மையும் வாய்ந்தது. முருகன் அடியார்கள் அனைவருமே இதனைத் தொன்றுதொட்டுப் போற்றிப் பாராயணம் செய்து வருகின்றனர்.

**கச்சியப்பர் :**

இற்றைக்குச் சற்றேறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டு வாழ்ந்திருந்தவரும், முருகனின் வரலாறு கூறும் கந்த புராணம் என்னும் செந்தமிழ்ப் பெரு நூலைப் பாடியருளியவரும் ஆகிய கச்சியப்ப சிவாசாரியர், திரு முருகாற்றுப் படையினைப் பெரிதும் மதித்துப்போற்றி நாடோறும் பாராயணம் செய்து வந்தவர். திரு முருகாற்றுப் படையினை அருளிய ஆசிரியர் நக்கீரனார்பால் கச்சியப்ப சிவாசாரியர் பெரு மதிப்பும் பெரும் பக்தியும் கொண்டிருந்தார். கந்த புராணத்தின் தொடக்கத்தில் முருகனைப் பற்றித் துதிக்குங்கால், முருகனின் ஆறு படை வீடுகளின் பெயர்களைப் பெரிதும் போற்றி, அப்பெயர்கள் எதுகைத் தொடையில் அழகுற அமையும்படி சிறந்த துதிச் செய்யுட்களை அவர் அருளிச் செய்திருக்கின்றார். திரு முருகாற்றுப் படையினைப் பின்பற்றியே, கச்சியப்ப சிவாசாரியர் தமது கந்த புராணத்தில், முருகனின் ஆறு படை வீட்டுத் தலங்களைப் பற்றிய துதிப் பாடல்களை அமைத்தருளினார் என்பது தெளிவு.

மேலும், கந்த புராண நூலின் முடிவில் தமது பணிவுடைமை தோன்றக் கச்சியப்ப சிவாசாரியர் அருளிச் செய்திருக்கும் பின்வரும் கருத்தமைந்த பாடலும், இங்கு நாம் அறிந்து இன்புறுதற்குரியது. ''சிவ பெருமான், பிரமன் திருமால் ஆகியோர் செய்கின்ற பூசைகளை ஏற்றுக் கொள்ளுவது போலவே, அவர்களை நோக்க மிகவும் இழிந்தவர்களாகிய இவ்வுலகமக்களின், எளிய வழிபாட்டையும் வெறுக்காமல் விரும்பி ஏற்றுக் கொண்டு அருள் புரிகின்றார். அதுபோன்று, பொய்யற்ற ஆசிரியர் நக்கீரனார்போன்ற மாபெரும் புலவர்களின் துதிப் பாடல்களை யெல்லாம் ஏற்றுக் கொண்டருளிய முருகன், மிகவும் எளியவனாகிய என்னுடைய புலமையற்ற சிறு சொல்லாகிய இக் கந்த புராண நூலையும், வெறுக்காமல் விரும்பி ஏற்றுக் கொண்டு அருள் புரிவான்''.

பொய்யற்ற கீரன் முதலாம்
    புலவோர் புகழ்ந்த
ஐயற்கு எனது சிறுசொல்லும்
    ஒப்பாகும்; இப்பார்
செய்யுற்றவன் மால் உமை
    பூசைகொள் தேவ தேவன்
வையத்தவர் செய் வழிபாடு
    மகிழும் அன்றே.

இப்பாடலால், பெரும் கவிஞராகிய கச்சியப்ப சிவாசாரியர்க்குத் திருமுருகாற்றுப் படை பாடிய நக்கீரரிடம் எத்துணைப் பெருமதிப்பும் பக்தியும் இருந்தன என்று நாம் எண்ணி உணரலாம்.

**அருணகிரிநாதர் :**

இங்ஙனமே முருகன் அடியார்களுள் பெரு முதன்மை வாய்ந்தவரும், இற்றைக்குச் சற்றேறத் தாழ 500 ஆண்டுகட்கு முன்னர் விளங்கி யிருந்தவரும் ஆகிய அருணகிரி நாதரும், திரு முருகாற்றுப்படையினை வியந்து புகழ்ந்து தமது திருப்புகழில் பல இடங்களில் குறிப்பிட்டு அருளியுள்ளார்.

*வளவாய்மை சொற்பிரபந்தம்*
*உள கீரனுக்கு உகந்து*
*மலர்வாய் இலக்கணங்கள் இயல்போதி*
*அடிமோனை சொற்கு இணங்க*
*உலகாம் உவப்ப என்றுஉன்*
*அருளால் அளித்துகந்த பெரியோனே.*
*[1]*

*மருவு மாமதுரைக் கூடல்*
*மால்வரை வளைவுள் ஆகிய*
*நக்கீரர் ஓதிய வளமைசேர்*
*தமிழுக் காக நீடிய கரவோனே. [2]*

*கீதஇசை கூட்டி வேதமொழி சூட்டு*
*கீரர்இயல் கேட்ட க்ருபைவேளே.*
*[3]*

*—திருப்புகழ்*

*சிகைத் தோகை மாமயில் வீரா!*
*சிலம்பும், சிலம்பு அம்புரா*
*சி, கைத் தோகை மா மய்இல் வாங்கிப்*
*பொருது திசைமுகன், வா*
*சி, கைத்து ஓகை மாமய் இல் வானில்*
*வைத்தோய்; வெஞ்செரு மகள்வா*
*சி, கைத்தோ கைமா மயில் செல்வி*
*நற்கீரர் சொல்தித்தித்ததே.*

*—கந்தர் அந்தாதி, 51.*

'வாக்கிற்கு அருணகிரி' என்னும் மா பெரும் புகழ் பெற்ற அருணகிரி நாத சுவாமிகள் அவர்களே, தமது ஒப்புயர் வற்ற சந்த நலம் செறிந்த செந்தமிழ்த் திருப்புகழ்ப் பாடல்களில் திருமுருகாற் றுப்படையினை, 'வளவாய்மை சொற் பிரபந்தம்' என்றும்; 'வளமை சேர் தமிழ்' என்றும்; 'வேத மொழி' என் றும் மிக வுயர்த்துப் புகழ்ந்து, 'நக்கீரர் சொல் தித்தித்ததே' என்றும் அருளிச் செய்வாராயின், இந் நூலின் பெருமை யை அளவிட்டுக் கூறுதல் நம்மால் இய லுமோ ?

**சிவப்பிரகாசர் :**

இவ்வாறே வாழையடி வாழையாகத் தொன்று தொட்டு வந்த பெருஞ்சான் றோர்கள் ஆகிய முருகன் அடியார்கள் அனைவருமே, திரு முருகாற்றுப் படை யினைத் தலை சிறந்த தெய்வத் திருநூ லாகக் கொண்டு, ஓதி ஓதி உவந்தனர் என்பதில் ஐயமில்லை. முருகனைப் பற் றிய நூல்கள் எல்லாவற்றுள்ளும் பழ மையும் பெருமையும் முதன்மையும் வாய்ந்து விளங்குவது திரு முருகாற்றுப் படையே. இது பற்றித்தான் துறை மங்கலம் சிவப் பிரகாச சுவாமிகள் ''பாவுள் முன்னுற வந்து நிற்கும் முரு காற்றுப்படை'' என இதனைச் சிறந் தெடுத்துப் பாராட்டியுள்ளார். அதற் கேற்ப, இந்நூல் 'பத்துப் பாட்டு' என் னும் சங்கத் தொகை நூலில் முதலாவ தாக அமைந்துள்ளமையும், இங்கு நாம் நினைவு கூரத் தக்கது.

மேலும் அவர், திரு முருகாற்றுப் படையின் சிறப்பைப் பின் வருமாறு குறிப்பிடுகின்றார்: ''முருகன் தணியா அதி மோக தயாபரனாய், பணி யாஎன வள்ளி பதம் பணிந்து, அவ் வள்ளி யம்மையின் இனிய மொழிகளைச் செவி மடுப்பதில் அளவிலா ஆர்வம் கொண்டு திகழ்கின்றான். எனினும் யாரேனும் அன்பர் ஒருவர் எங்கேனும் இருந்து திரு முருகாற்றுப் படையினை ஓத முற்படுவா ராயின், முருகப் பெருமான் வள்ளியம் மையின் இனிய சொற்களையும் மறந்து புறக்கணித்து விட்டு, தன்னுடைய பன் னிரண்டு செவிகளையுமே ஒரு சேரக் குவித்து, அவ்வன்பரின் திருமுருகாற்றுப் படைப் பாராயணத்தினைக் கேட்டு மகிழ்ந்து அருள் புரிகின்றான். முருகனின் பன்னிரு செவிகளும் பருகும் அமுத மாகத் திரு முருகாற்றுப் படை திகழ் கின்றது. அதனை ஓதி வழிபடும் அடிய வர்கள் விரும்பி நினைப்பனவற்றை யெல் லாம் அவர்கள் நினைத்தபடியே, முருகன் விரும்பி நிறைவேற்றி யருளுகின்றான்'' எனச் சிவப்பிரகாசர் பாடுகின்றார்.

*இன்னன நினைந்து கீரன்,*
*இலங்கிலை நெடுவேற் செம்மல்*
*பன்னிரு செவியும் ஆரப்*
*பருகு அமுதாகி, ஓதின்*
*உன்னிய உன்னி யாங்கு, இங்கு*
*உதவுவ தாகிப் பாவுள்*
*முன்னுற வந்து நிற்கும்*
*முருகாற்றுப் படை, மொழிந்தான்.*

*பொன்அவிர் சுணங்கு பூத்த*
*புணர்முலைக் கருங்கண் வள்ளி*
*கன்னலும் அமுதும் தேனும்*
*கைக்கும்இன் தீஞ்சொல் மாற்றித்*
*தன்நிகர் புலவன் கூறும்*
*தமிழ், செவி தாழ்த்துக் கேளா*
*அந்நிலை மனம் களித்தான்;*
*அறுமுகம் படைத்த கோமான்.*

*—சீகாளத்திப் புராணம்.*

**பழம்பாடல் :**

ஆசிரியர் நக்கீரர் அருளிய திரு முருகாற்றுப் படையினை நாடோறும் ஓதி முருகனை வழி படுதலால், நாம் எல்லா நலங்களும் பெறலாம்; நம்முடைய கவலைகள் எல்லாம் நீங்கும்; முருகன் நமக்கு இரங்கி நம் முன் வந்து தோன்றிக் காட்சி தந்து அருள் புரிவான், இது பெரியோர்கள் பலரும் தம்முடையவாழ்வில் கண்ட அனுபவ உண்மை. இதனை ஒரு பழம் பாடல் இனிது தெளிவுறக் குறிப்பிடுகின்றது.

நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறும் 'சாற்றினால்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும்.

**முடிவுரை :**

எனவே இத்தகைய அரும் பெரும் சிறப்பு வாய்ந்த திருமுருகாற்றுப்படையினை நாம் அனைவரும் நாடோறும் ஓதி, முருகனை வழிபட்டு, அவன் அருளைப் பெற்று உய்ய முயலுவோமாக.

—ஆசிரியர்.

## செய்திச் சுருக்கம்

### 1. இந்து சமயப் பரப்புநர், விளக்குநர் பயிற்சி நிலையம் தொடக்க விழா :

சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீஸ்வரர் கோயில் கலியாண மண்டபத்தில், நமது சென்னை மாநில முதலமைச்சர் மாட்சிமிகு. திரு எம். பக்தவத்சலம், பி.ஏ., பி.எல்., அவர்களால், நமது அறநிலைய ஆணையர் திருமிகு. மா.சே. சாரங்கபாணி முதலியார், பி.ஏ. பி.எல். அவர்கள் தலைமையில் தொடங்கி வைத்தார்கள். ஆணையர் அவர்கள் தமது தலைமை உரையில், இந்து மதத்தின் அருமை பெருமைகளையும், அதனை நாம் போற்றி பயன் பெற வேண்டிய இன்றியமையாமையும் பற்றி விளக்கி வற்புறுத்தினார்கள்.

நமது முதலமைச்சர் அவர்கள், ''சமயம் நம் சிறந்த பொக்கிஷம். மனிதனுக்குப் பொருளும் விஞ்ஞான அறிவும் மட்டும் இருந்தால் போதாது. மனித இயல்பைப் பெறாமல், விஞ்ஞான அறிவை மட்டும் பெற்றால் அழிவுக்குத்தான் அது பயன்படும். மனித சுபாவம் இல்லாதபோது மிருகத் தன்மைதான் மேலிடும். மக்கள் வாழ்வு நலம் பெறச் சமய உணர்வு மிகவும் இன்றியமயாதது. நாம் நம் இந்து சமயத்தைப் பற்றி நன்கு இனிது தெரிந்து கொண்டு பயன் பெறவேண்டும். சமய உண்மைகளை விளக்கி எடுத்துக் காட்டும் சின்னங்களே நம்முடைய ஆலயங்கள். மக்களின் சமுதாய வாழ்விற்குப் பல துறைகளிலும் ஆலயங்கள் உதவி புரிந்து வருகின்றன. ஆலயங்களில் பல மண்டபங்கள் இருக்கின்றன. அவைகள் சமய நிகழ்ச்சிகள், சமயப் பிரசாரங்கள் நடைபெறுவதற்காகவே கட்டப் பெற்றன. அவைகளை நாம் மீண்டும் நல்ல முறையில் பயன் படுத்த வேண்டும்'' என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்துப் பயிற்சி நிலையத்தின் மேற்பார்வையாளராகத் திரு. கே. ஆறுமுக நாவலர் அவர்கள் இந்து மதத்தின் சிறப்பைக் குறித்துச் சிறு சொற்பொழிவு ஒன்று ஆற்றினார்கள். சென்னை துணை ஆணையர் திரு. ஆ. சிதம்பரம், பி.ஏ., பி.எல்., அவர்கள் பயிற்சி நிலையத்தின் பாடத் திட்டம், நடைமுறை ஆகியனவற்றை விளக்கி, வரவேற்புரையும், நன்றியுரையும் வழங்கினார்கள். *(6-10-1966).*

### 2. இராமேசுவரம் கோயில் திருப்பணிக் குழு :

சென்னையில் *18-10-1966* செவ்வாய் அன்று மாலை அறநிலைய ஆணையர் அவர்களின் அலுவலகத்தில் கூடியது. இராமநாதபுரம் அரசர் ஸ்ரீ ஆர். ஷண்முக ராஜேசுவர சேதுபதி, எம். எல். ஏ., அவர்கள் வரவேற்புரை கூறினார்கள். தமிழக முதலமைச்சர் திருமிகு. எம். பக்தவத்சலம், பி.ஏ., பி.எல்., அவர்கள் தொடக்கவுரை ஆற்றினார்கள். செட்டி நாடு அரசர் திரு. டாக்டர் ராஜாசர் முத்தையா செட்டியார், எம். எல். சி., அவர்களும், அறநிலைய ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்களும் சிறப்புரை நிகழ்த்தினார்கள். தேவகோட்டை திரு. அள. அரு. சோமநாதன் செட்டியார் அவர்கள் நன்றியுரை நவின்றார்கள்.

—ஆசிரியர்.

# திருமுருகாற்றுப்படையின் சுவை நலம்

தமிழிலுள்ள பிரபந்தங்கள் தொண்ணூற்ருறுவகைப்படும்என்பர். அவற்றுள் ஆற்றுப்படை என்பதும் ஒன்று. ஆற்றுப்படை என்னும் சொல், வழிப்படுத்துதல், வழி கூறி அனுப்பி வைத்தல் எனப் பொருள் படும். (ஆறு—படு—ஐ). சிறுபான்மை வருவித்தல் எனவும் அதற்குப் பொருள் உண்டு. 'முருகு ஆற்றுப் படுத்த உருகெழு வியன் நகர்' என்னும் வரி, முருகனே வரும்படி வழிப்படுத்தின அச்சம் பொருந்திய அகன்ற நகரம், (கோயில்) எனப் பொருள்படுதல் காணலாம்.

ஆற்றுப்படை என்னும் நூல் வகையானது, புலவர் ஆற்றுப்படை, பாணர் ஆற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, விறலி ஆற்றுப்படை என நான்கு வகைப்படும். ஓர் அரசன் அல்லது வள்ளலிடம் சென்று பரிசு பெற்றுத் திரும்பி வரும் புலவன் ஒருவன், வழியில் தன்னே ஒத்த மற்ருெரு புலவனேச் சந்தித்து, 'யான் இன்ன வள்ளலிடம் சென்றேன்; இன்ன இடத்தில் அவனேக் கண்டேன்; அவனே இவ்விவ்வாறு பாடினேன்; அவனுடைய இயல்புகள் இத் தகையவை; இத்துணேப் பொருள்களே அவன் எனக்குப் பரிசிலாக வழங்கினுன்; நீயும் அவனிடத்துச் சென்று பாடினுல், பரிசில் வழங்கப் பெறுவாய்' என்று, அவ்வள்ளலேச் சென்று காண்பதற்குரிய வழி முதலிய விவரங்களே யெல்லாம் விளக்கமாகக் கூறி அனுப்புவதாகப் பாடப் பெறுவது, புலவர் ஆற்றுப் படை எனப்படும். இவ்வாறே பாணர், பொருநர், விறலியர் என்பவரும், தமக்குள் ஒருவர் மற்ருெருவரை ஆற்றுப் படுத்திக் கொள்ளும் முறையில் பாடப் பெறும் நூல்கள், அவரவர்களின் பெயர்களால் வழங்கும்.

> கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
> ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
> பெற்ற பெருவளம் பெருஅர்க்கு அறிவுறீஇச்
> சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கம்

என்பது, ஆற்றுப்படை நூல்களுக்குத் தொல்காப்பியப் புறத்திணே இயல் வகுக்கும் இலக்கணம் ஆகும்.

ஆற்றுப்படை நூல்கள் பலவற்றுள்ளும் தலே சிறந்தது திரு முருகாற்றுப் படை எனலாம். ஆதல் பற்றியே, பத்துப் பாட்டு என்னும் சங்கத்தொகை நூலில், பிற எல்லாப் பாடல்களுக்கும் முன்னதாக, முதற்கண் திருமுருகாற்றுப்படை அமைக்கப் பட்டுள்ளது. இது புலவர் ஆற்றுப்படை எனப் பெயர் வழங்குதற்குரியதே. ஆயினும், பொருளின் முதன்மையும் சிறப்பும்பற்றி முருகாற்றுப்படை யெனவே தொன்று தொட்டு வழங்கி வருகின்றது. நம்மை அனேய அரசனே அல்லது வள்ளலோ ஆகிய மனிதரிடத்து ஆற்றுப்படுத்தும் முறையில் பாடாமல், எல்லாம் வல்ல இறைவனிடத்தில் ஆற்றுப் படுத்தும் நிலேயில், இதனே முதன் முதலாகப் பாடியருளிய ஆசிரியர் நக்கீரர் பெருமானின் கவிதைத் திறம், ஒரு சிறந்த புரட்சிப் புதுமைச் செயல் எனப் போற்றிப் புகழ்தற் குரியதாகும். சங்கத் தமிழ்த் தலேமைப் புலவராகிய நக்கீரரின் தமிழ்ப் புலமைக்கும், தலே சிறந்த சமய உணர்வுக்கும்,இந்நூல் ஒப்புயர்வற்ற சான்ருக இலங்குகின்றது.

*(1)* முருகன் அருளேப் பெற்ற அருளாளன் ஒருவன், அதனேப் பெருதான் ஒருவனுக்குப் பெறும் இயல்பும் முறையும் கூறி, அவனே முருகனிடத்து வழிப் படுத்தும் முறையில், இந்நூல் பாடப் பெற்றுள்ளது.

எய்யா நல்லிசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு,
நலம்புரி கொள்கைப் புலம்புரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின், பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே.

(61-65)

எனவரும் வரிகளும்,

ஆண்டுஆண்டு ஆயினும் ஆகக் காண்தக
முந்துநீ கண்டுழி முகனமர்ந்து ஏத்திக்
கைதொழுஉப் பரவிக் காலுற வணங்கி...
(250-253)
குறித்தது மொழியா அளவையில் குறித்து
டன்
வேறுபல் உருவிற் குறும்பல் கூளியர்
நூறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்துஎன
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்
தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி
அஞ்சல் ஓம்புதி அறிவல்நின் வரவுஎன
அன்புஉடை நன்மொழி அளைஇ விளிவுஇன்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகித் தோன்ற விழுமிய
பெறல்அரும் பரிசில் நல்கும்மதி...

எனவரும் வரிகளும், ஆற்றுப்படை இலக்கணத்தை ஒட்டி, அதனை விளக்கும் முறையில் இந்நூலின் கண் அமைந்திருத்தல் காணலாம்.

(2) இந்நூலின் தொடக்கம், உலகம் என்னும் மங்களச் சொல்லுடன் சிறப்புறத் தொடங்குகின்றது. சேக்கிழார், கம்பர் முதலிய பெருங் கவிஞர்களும், உலகம் என்னும் மங்கலச் சொல்லைத் தத்தம் நூல்களில் முதற்கண் அமைத்தமை இவரைப் பின்பற்றியே போலும் எனலாம்.

(3) முருகனை நீல நிறக் கடலில் தோன்றும் செந்நிற ஞாயிற்றோடு ஒப்பிட்டு இவர் பாடியிருக்கும் சிறப்புப்பெரிதும் போற்றுதற்குரியது. அதன்கண், ஞாயிறு இருளைக் கெடுக்குமாறு போலத் தன்னை மனத்தாற் நோக்குவோர்க்கு முருகன் மாயையைக் கெடுக்கின்றான் எனத் தொழில் உவமையும்; கட்புலனால் நோக்குவோர்க்குக் கடலின் பசுமையும், ஞாயிற்றின் செம்மையும் போல, தனது மயிலின் பசுமையும், திருமேனிச் செம்மையும் தோன்றுமாறு முருகன் விளங்குகின்றான் என வண்ண உவமையும் அமைந்திருப்பது, எண்ணி உணருந்தோறும் இன்பம் தருவதாகும். இவ்வுவமையின் அருமையையும் பொருத்தத்தையும் வியந்து,

உததியிடை கடவும்மர கதஅருண குலதுரக
உபலளித கனகரத சதகோடி சூரியர்
கள்
உதயம்என அதிகவித கலபகக மயிலின்மிசை
யுகமுடிவின் இருள்அகல ஒருசோதி
வீசுவதும்.
—திரு வகுப்பு.

என அருணகிரி நாத சுவாமிகள் போன்ற பெரியோர்கள், இக்கருத்தைத் தழுவித் தத்தம் நூல்களில் பாடியுள்ளனர்.

(4) முருகன், ஒளி வடிவினனாதலை 'ஓஅற இமைக்கும் சேண் விளங்கு அவிரொளி' என்றும்; முருகனின் திருவடிகள் தம்மை அடைந்தோரை ஏற்றுக் காத்து அவர்களின் அறியாமையைப் போக்கி அருளுதலை, 'உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்' என்றும்; அவனுடைய திருக்கைகள் பகைவரை அழித்தலில் இடியைப் போன்ற வலிமை மிக்கவையாதலைச், 'செறுநர் தேய்த்த செல் உறழ் தடக்கை' என்றும் கூறி யிருத்தல் சீரியதாகும். இதனால் செவ்வியோர்க்கு அளித்தலில் திருவடிகளும், கொடியோர்த் தெறுதலில் கைகளும், முருகனுக்குச் செயலாற்றுவதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இதனால் துட்ட நிக்கிரகமும், சிட்ட பரிபாலனமும் கூறியவாறு காணலாம்.

(5) தெய்வயானையை 'மறுவில் கற்பின் வாள்நுதல்' என்றும், முருகனை அவள் கணவன் என்றும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். முருகன், படைத்தற்கும் காத்தற்கும் உரிமை உடையவன் என்பது

தோன்ற, ஆசிரியர் இங்ஙனம் அருளிச் செய்தார் என்பது நச்சிஞர்க்கினியர் தரும் விளக்கம்.

*(6)* முருகனுக்குப் போகத்திற்கு உரியது, செங்கடம்பம் பூ; அடையாளப் பூ காந்தட் பூ என்பது நச்சிஞர்க்கினியர் விளக்கவுரை.

**கவிஞர் இயல்பு :**

கவிஞர்கள் கருத்து வளமும் கற்பனை உள்ளமும் மிக்கவர்கள்; சொல்லையும் பொருளையும் திறம்பட ஆராய்ந்து வழங்க வல்லவர்கள்; அவர்கள் அமைக்கும் ஒவ்வொரு சொல்லும் பொருள் நலம் சிறந்து, பல குறிப்புக்களை உடையதாக விளங்கும்; நம்மைப்போல அவர்களுக்குச் சொற் பஞ்சமோ, அச்சொற்கள் கொண்டு உணர்த்தும் கருத்துப் பஞ்சமோ நேர்வதில்லை; 'எனைவைத்தி எனைவைத்தி எனச் சொற்கள் இடையிடை நின்று இரந்து' அவர்களை வேண்டிக் கொள்ளும்; கருத்துக்களோ ஒன்றினென்று முந்திக் கொண்டு அடுக்கு அடுக்காகப் பொங்கி யெழுந்து, தங்கு தடையின்றிக் கரை புரண்டு ஓடி வரும்; அவர்கள் ஒரு பொருளைப்பற்றிச் சொல்ல நினைக்கும் போதே, அதன் தொடர்புடைய எத்தனையோ பல வகையான சார்புக் கருத்துகள் (Association of ideas) ஏராளமாக இனிது எளிவந்து நிற்கும். இத்தகைய இயல்புகள் நல்லிசைப் புலவர்கள் அனைவருக்குமே உரிய தனிப்பெரும் சிறப்பியல்பாகும். ஆதலின் அவ்வியல்பை ஆசிரியர் நக்கீரனரின் திருமுருகாற்றுப் படையில் மிகுதியாகக் காண்கின்றோம்.

**சார்புக் கருத்துக்கள்:**

முருகன் வண்டுகள் மொய்க்காத, ஒளி மிகுந்த காந்தட் பூக்களாலாகிய கண்ணியினைத் தலையின்கண் அணிந்திருக்கின்றான் என, நக்கீரர் குறிப்பிட விரும்புகின்றார். காந்தட் பூவை நினைத்த அவர்க்கு, ஒரு பெரும் சோலையே நினைவுக்கு வருகின்றது. அது வந்ததும், அச்சோலை மரமேறுதலில் பயிற்சி மிகுந்த குரங்குகளும் ஏறி அறியாத மிக உயர்ந்த நெருங்கி வளர்ந்த சோலை என்றும்; தெய்வப் பெண்களாகிய சூரர மகளிர் விளையாடி மகிழ்கின்ற சோலை என்றும் குறிப்பிடுகின்றார். சூரரமகளிரைப் பற்றிய நினைவு வந்ததும், அவர்கள் முருகனின் கோழிக் கொடியை வாழ்த்திப் பாடுதலும், அதனால் அச்சோலையைச் சூழ்ந்த மலை நிலப் பகுதிகளில் எதிரொலி கேட்பதும் பற்றி அவர் குறிப்பிடுகின்றார். இவ்வாடல் பாடல் நிகழ்ச்சிகளைக் கற்பனை உணர்வாகிய மனக்கண்கள் கொண்டு எதிரிட்டுக் காணும் அவர், அச் சூரரமகளிர் அழகு விளங்கவும், கலைத்திறன் தோன்றவும், தம்மைப் பல வகைகளில் ஒப்பனை செய்து கொண்டுள்ள திறங்களை, மிக நுணுகி ஆராய்ந்து விளக்குகின்றார். அவ் வியப்புணர்வால், அச்சூரரமகளிரின் ஒப்பனைக் கலைத் திறனை, மிக விரிவாக எடுத்து விளக்கிப் பல வரிகளில் (12-44) பாடலுறுகின்றார்.

இப் பகுதியானது பொதுவாகக் காண்போர்க்குப் புலவர் தாம் எடுத்துக் கொண்ட முதன்மைப் பொருளை விடுத்து, வேறொரு அயன்மைப் பொருளை வெற்றெனத் தொடுத்திருப்பது போலத் தோன்றக் கூடுமாயினும், ஒருவகையில் புலவரின் கற்பனைக் கருத்து வளனையும், கூர்ந்து நோக்கும் நுண் அறிவினையும், கூர்ந்து நோக்கி உணர்ந்ததனை உள்ளவாறே குறையற நிரல்பட எடுத்துக் கூறி விளக்கவல்ல அரும் பெரும் திறனையும், பிறவற்றையும் அறிவிப்பதாகும் எனலாம். இங்ஙனம் பாடிச் செல்லுதல் ஒரு வகைக் கவிதைக் கலைத்திறனே யாகும்.

அரியணை வீற்றிருக்கும் அரசனைச் சுற்றி, அவன்தன் அமைச்சர் முதலிய பல்வகை அரசியற் சுற்றத்தினர் அமர்ந்திருப்பது போல, ஒரு கவிதையின் கண் கருக் கொண்ட முதற் பொருளானது, எனைப்பல சார்பு பொருள்கள் தன்னைச் சூழ்ந்து சிறப்பித்து நிற்கும் வகையில் விளங்கும். வான் மீன்கள் பல சூழ இருந்தால் அல்லாமல், பான்மதி விளக்கம் பெற்றுச் சிறவாமை போல, சார்பு

பொருள்கள் இன்றி ஒரு கவிதையின் முதற் பொருள் சிறப்புறுதல் இயலாது. அதனால்தான், ஆசிரியர் நக்கீரர் தான் கூற முற்படும் ஒரு கருத்தோடு, அதற்குத் தொடர்புடைய வேறு பல கருத்துக்களையும் சேர்த்தியைத்துப் பாடி யருள்கின்றார். ஜான் மில்ட்டன் போன்ற மேலை நாட்டுப் பெருங் கவிஞர்களிடத்திலும் இவ் வியல்பைக் காணலாம்.* இம் முறையில் திருமுருகாற்றுப்படையில் பல சுவையான பகுதிகள் இணைந்து இயைந்து வருகின்றன. அவைகள் வருமாறு:

## சூரரமகளிரும் சோலையும் :

பெரிய மூங்கில்கள் ஓங்கி வளரும் வானளாவிய மலையில், ஒரு சோலை உள்ளது. அங்கே தம் தெய்வத் தன்மையால் அச்சத்தை விளைவிக்கின்ற வானுலகப் பெண்கள் பலரும் கூடுவர். அழகு விளங்கும் மலை இடமெல்லாம் எதிரொலி எழும்படியாகப் பாடி ஆடுவர். அவர்கள் கிண்கிணி சூழ்ந்த ஒளி பொருந்திய சிவந்த சிறிய பாதங்களையும், திரண்ட கால்களையும், வளைந்து ஒடுங்கிய இடையையும் உடையவர்கள். அவர்களின் தோள்கள் மூங்கிலைப் போன்றிருக்கும். அவர்களின் மெல்லிய பூந்துகில், இந்திர கோபப் பூச்சியின் நிறத்தைப் போல இயல்பாகவே சிறந்து விளங்கும். அது செயற்கையாகச் சாயம் தோய்க்கப் பெறாமல், இயற்கையாகவே செந்நிறம் வாய்ந்தது. பல மணிகள் கோத்ததும், ஏழு வடங்கள் கொண்டதும் ஆகிய மேகலையை அவர்கள் அரையில் அணிந்திருப்பார்கள். அவர்களின் அழகு இயற்கையாகவே அமைந்ததாகும். எவருடைய கையினாலும் ஒப்பனையினால் செயற்கையாகச் செய்யப்பட்டதன்று அது. அவர்களால் அணியப் பெற்ற ஒளி மிகுந்த அணி கலன்கள் சாம்பூநதம் என்ற பொன்னால் இயன்றவை. அவர்களின் மேனி குற்றமற்றது. அதன் மினுமினுப்பும் ஒளியும் நெடுந் தூரத்தைக் கடந்து செல்லும் தன்மை யுடையன.

இச் சூரர மகளிர்க்குத் துணை செய்யும் தோழிப் பெண்கள் சிலருளர். அவர்கள் கோதி வகிர்ந்து கடைகுழன்று பளபளப்பு மிக்க சூரர மகளிரின் கூந்தலில் வெட்சிப் பூக்களை விடு பூவாகத் தூவுகின்றனர்; அதற்கு நடுவே குவளைப் பூவின் இதழ்களைக் கிள்ளி இட்டு முடிக்கின்றனர்; சீதேவி என்னும் தெய்வ உத்தியையும், வலம்புரிச் சங்கு வடிவாகச் செய்த அணிகலனையும் தலையில் வைத்தற்குரிய இடத்தே வைக்கின்றனர்; நெற்றியிலே மணங் கமழும் திலகம் தீட்டுகின்றனர்; அதன்கண் வந்து தங்கும்படி சுறா மீனின் திறந்த வாயைப்போல அணிகலனை வைக்கின்றனர்; நன்றாக முடித்த கொண்டையில் செண்பகப் பூவைச் செருகுகின்றனர். அதன்மேல் மருதமலர்க் கொத்துக்களை இடுகின்றனர்; அதற்கும் மேலே செந்நிற அரும்புகளைச் சேர்த்துக் கட்டிய மாலையை வளைவாகச் சூட்டுகின்றனர்; அசோகம் தளிர்களைத் திருத்திக் காதுகளில் தரிக்கின்றனர்; அத்தளிர்கள் மார்பிற் படிந்து அழகுற அசைந்து விளங்கும்; அம் மார்பில் சந்தனக் குழம்பை நிறையப் பூசி, அதன் மீது வேங்கை மலரின் மகரந்தத்தை அப்புவர்; விளா மரத்தின் சிறிய தளிரைக் கிள்ளி ஒருவர் மேல் ஒருவர் தெறித்து அழகுற விளையாடுவர்; முருகனின் கோழிக் கொடி ஓங்கி நிலை பெறுக என்று கூறி வாழ்த்துவர்.

இத்தகைய சூரர மகளிர் விளையாடும் சோலையிலுள்ள காந்தட் பூக்களாலான மாலை, முருகனின் திரு முடியில் விளங்கிக் கொண்டிருக்கும்.

## பேய்மகளின் துணங்கைக் கூத்து:

முருகனின் வேற்படை, கடலின் உள்ளே பாய்ந்து சென்று அங்கே ஒளிந்து நின்ற சூரபதுமனைத் தடிந்தது. மேலும், போரில் முனைந்து சென்று அவனது

*"The most striking characteristic of the poetry of MILTON is the extreme remoteness of the association by means of which it acts on the reader"

—THOMAS BABINGTON MACAULAY MILTON.

துணைவர்களாகிய அவுணர்களை யெல்லாம் தோல்வியுறச் செய்து அழித்தது. அங்ஙனம் போர் நிகழ்ந்த களத்தில் பேய்கள் பல கூடிப் பிணங்களைத் தின்று களித்துத் துணங்கைக் கூத்து ஆடுகின்றன; அப்பெண் பேய்கள் காய்ந்த தலை மயிரை உடையன; வரிசையற்றுப் பிறழ்ந்த பற்களை உடையன; அவைகளின் வாய் பெரியதாய்த் திறந்திருக்கும்; அவற்றின் விழிகள் சுழன்று கொண்டு ஊன் வடிந்து, கொடும் பார்வை வாய்ந்திருக்கும்; அவற்றின் காதுகள் நீண்டு மார்பு வரையில் தொங்கி யிருக்கும்; அக் காதுகளில் பிதுங்கிய கண்களை உடைய ஆந்தையும், நச்சுத் தன்மை மிக்க பாம்புகளும் தொங்கிக் கொண்டு கிடக்கும்; இரத்தம் படிந்து, வளைந்து கூர்மையான நகங்களை உடைய விரல்களினால், இறந்து பட்ட அவுணர்களின் பிணத் தலைகளில் உள்ள கண்களைத் தோண்டிப் புசிக்கும்; பின்னர் அத் தலைகளைத் தம் கைகளில் ஏந்தி அவற்றின் நிணத்தைத் தின்னும்; அங்ஙனம் தின்ற மகிழ்வால் அச்சமும் அருவருப்பும் தோன்றும்படி தம்முடைய தோள்களை அசைத்துக் கொண்டு வெறி மிகுத்துத் துணங்கை என்னும் இழிந்த பேய்க் கூத்தை ஆடி அவைகள் இன்புறும்.

இங்ஙனம் பிணம் தின்னும் பேய்கள் மகிழ்ந்து துணங்கைக் கூத்து ஆடும்படி, முருகன் சூரபதுமனைப் போர்க் களத்தில் வென்றான்.

**கூடலும் குன்றமும் :**

மதுரைக்குக் கூடல் என்று ஒரு பெயர் உண்டு. அக்கூடல் மாநகரம் மதில் சூழப் பெற்றது. அம் மதில்களைச் சேண் உயர்ந்து ஓங்கும் நெடுங் கொடிகள் அணி செய்கின்றன. அவைகள் போரிற் பெற்ற வெற்றிக்கு அறிகுறியாகவும், போரைப் பெற விரும்புதற்கு அறிகுறியாகவும் எடுக்கப் பெற்றவை. அந் நகரின் மதில் வாயில்களில், போருக்கு வரும் பகைவர்களை ஏளனம் செய்யும் முறையில், அவர்களைப்பெண்கள்போலக் கோலம் கொள்ளச் செய்து, பெண்களின் நிலையில் அவர்கள் விளையாடும் பொருட்டு, நூலால் செய்யப் பெற்ற பந்தும் பொம்மைகளும் தொங்க விட்டு வைக்கப் பெற்றிருக்கும். எதிர்த்துப் போர் செய்வதற்குத் துணிவுடைய பகைவர்கள் எவரும் கிடைக்காமையினால், போரில்லாத மதில் வாயில்களை யுடையது அக்கூடல் மாநகர். மேலும், அந் நகரில் கடைத் தெருக்கள் பல உண்டு. அக்கடைத் தெருக்களில் களவு பொய் ஏமாற்றம் முதலிய குற்றங்கள் நிகழ மாட்டா. செல்வப் பெருக்கமும், பணப் புழக்கமும் மிகுதிப் பட்டுச் சிறந்து விளங்குகின்றன. அதனால், திருமகளே அரசு வீற்றிருப்பது போன்ற சிறப்பை உடையன அக் கடைத் தெருக்கள். பல வளங்கள் கூடி யிருத்தலாலும், சங்கப் புலவர்கள் கூடித் தமிழை ஆராய்ந்ததனாலும், அந்நகருக்குக் கூடல் என்று பெயர் அமைந்தது. அந்நகரின் தெருக்கள் மிக நீண்டனவாய் விளங்கும். அவற்றில் பெரிய மாட மாளிகைகள் நிறைந்திருக்கும்.

இத்தகைய கூடல் மா நகரின் மேற்குத் திசையில் திருப்பரங் குன்றம் உள்ளது. அதனைச் சுற்றிச் சேறு நிறைந்த வயல்கள் உள்ளன. அங்கே தாமரை, நெய்தல் முதலிய மலர்கள் அழகுறப் பூத்துள்ளன. வண்டின் கூட்டங்கள் நாளெல்லாம் தாமரை மலரில் தேனை உண்டு களித்து மயங்குகின்றன. அதனால் மாலைக் காலத்தில் சூரியன் மறையுங்கால் தாமரை மலர்கள் குவியத் தொடங்குவதனை அறியாமல், அவற்றிலேயே மயங்கி விழுந்து கிடக்கும் வண்டுகள், இரவெல்லாம் அம் மலர்களிலேயே உறங்க நேருகின்றது. மறுநாள் வைகறையில் தாமரை மலர்கள் மீண்டும் மலரத் தொடங்கும்போதே அவ்வண்டுகள் வெளியில் வர முடிகின்றது. அப்போது அவைகள் வெளி வந்து, அவ் வைகறையில் அருகே உள்ள நெய்தற் பூக்களிலும், சுனைப் பூக்களிலும் சென்று ஊதி இன்புறுகின்றன. இத்தகைய வளப்பம் சான்றது திருப்பரங்குன்றம்.

**பிணி முக வேழம் :**

முருகன் திருச்செந்தூரில் கஜவாகனர் என்னும் நிலையில், பிணிமுகம் என்னும் யானையை ஊர்தியாகக் கொண்டு ஒரோ வழி விளங்குகின்றான். அவ் யானையின் நெற்றியானது வரிகளை உடையது. அங் குசத்தால் குத்தப் பெற்று ஆழ்ந்து வடுக் களை உடையது. வாடாத பொன்னரி மாலையும், ஓடை என்னும் நெற்றிப் பட்டமும், அதன் மத்தகத்தில் அசைந்து கொண்டிருக்கின்றன. அதன் இருபக் கங்களிலும் மாறி மாறி ஒலிக்கும் மணிகள் தாழ்ந்து கிடக்கின்றன. அது காற்றெழுந்தாற் போன்ற வேகமான நடையை உடையது. எதிர்க்க முடி யாத கூற்றுவனைப் போன்ற ஆற்றல் உடையது.

**துனியில் காட்சி முனிவர் :**

திருவாவினன்குடியில் தேவர்கள் முரு கன்பால் குறையிரந்து கொள்ள வரு கின்றனர். அவர்கள் முருகன்பால் தாமே முன்னர்ச் செல்ல அஞ்சி, முருகன் அருளுக்குரிய முனிவர்களை முன்னே விடுத்து, அவர்களின் பின்னர் இசை பாடி முருகனின் முனிவைத் தீர்க்கவல்ல கந்தர்வமகளிரை அனுப்புகின்றனர். முனிவர்கள் மரவுரியைத் தைத்து உடை யாக அணிந்தவர்கள். வலம்புரிச் சங்குபோல அழகாய் முடிக்கப்பட்ட வெண்மையான நரைத்த முடியை உடை யவர்கள். மாசற்ற ஒளிமிகுந்த மேனியை உடையவர்கள். மான் தோலைப் போர்த் திருப்பவர்கள். தசை இல்லாத மார் பினையும், எலும்புகள் மேலெழுந்து தோன்றுகின்ற உடம்பையும் உடைய வர்கள். விரதமிருந்து பலநாட்களுக்கு ஒரு முறை உணவு கொள்ளும் இயல் புடையவர்கள். பகையும் கோபமும் நீங்கிய மனத்தினர். எல்லாவற்றை யும் கற்றவரும் அறிந்தறிய முடியாத பேரறிவை உடையவர்கள். கற்றவர் களுக்கெல்லாம் எல்லையாய் இருக்கும் தலைமைப்பாடு வாய்ந்தவர்கள். காமத் தையும் கடுஞ்சினத்தையும் நீக்கிய தவம் மிக்கவர்கள். எவரையும் எதனையும் வெறுக்காத அருளாளர்கள்.

*சீரை தைஇய உடுக்கையர்; சீரொடு*
*வலம்புரி புரையும் வால்நரை முடியினர்;*
*மாசற இமைக்கும் உருவினர்; மானின்*
*உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்*
*என்புஎழுந்து இயங்கும் யாக்கையர்; நன்பகல்*
*பலவுடன் கழிந்த உண்டியர்; இகலொடு*
*செற்றம் நீக்கிய மனத்தினர்; யாவதும்*
*கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத்*
*தாம்வரம்பு ஆகிய தலைமையர்; காமமொடு*
*கடுஞ்சினம் கடிந்த காட்சியர்; இடும்பை*
*யாவதும் அறியா இயல்பினர்; மேவரத்*
*துனியில் காட்சி முனிவர்......*

**கந்தர்வ மகளிர் :**

முனிவர்களுக்குப் பின்னால், அன்பு நிறைந்த நெஞ்சமும் மென்மையான மொழியும் உடைய கந்தர்வர்கள் இனிய யாழை வாசித்துச் சென்றார்கள். அவர் கள் முகையவிழ்ந்த மாலையை மார்பில் அணிந்திருந்தார்கள். செவியினாலே சுரு தியை அளந்து அமைத்த நரம்புகளையும், வார்க்கட்டினையும் உடையது அவர் களுடையயாழ். இக் கந்தர்வர்களோடு, கந்தர்வமகளிரும் விளங்கித் தோன்றி னர். அவர்கள் நோயின்றி அமைந்த உடலை உடையவர்கள். மாந்தளிரைப் போன்ற நிறமுடையவர்கள். பொன் னிறம் விளங்கும் அடிவயிற்று வரிகளை உடையவர்கள். கண்ணுக்கினிய பதி னெண் கோவைமேகலையை அணிந்த அரையை உடையவர்கள். மாசற்ற வர்கள்.

**நான்முகற் சுட்டிக் காண்வால் :**

இவ்வாறு இவர்கள் உடன்வர கொடிய பாம்புகளை அழிக்கின்ற கரு டனைக் கொடியாக உடைய திருமாலும்; வெள்ளேற்றுக் கொடியை உயர்த்தி உமாதேவியை இடப்பாகத்தில்கொண்டு முக்கண்களை யுடையவனாய், முப்புரங் களை அழித்த வலிமை மிக்க உருத்திர னும்; ஆயிரம் கண்களை உடையவனாய், நூறு வேள்விகளைச் செய்து முடித்துப் பகைவர்களை அழித்த வெற்றி மிக்கவ னாய், நான்கு தந்தங்களை யுடைய ஐரா வதம் என்னும் யானையின் பிடரியில் அமர்ந்துவரும் செல்வம் மிக்க இந்திர னும்; நான்கு திக்குப் பாலகர்களும், வான் வழியாக ஆவினன் குடிக்கு வந்து முருகனை வணங்குகின்றனர்.

முருகப் பெருமான் சூர பதுமனை வென்று, தேவர்களைச் சிறை விடுவித்து, இந்திரன் மகள் தெய்வயானையை மணந்த பொழுது, தம் கையில் உள்ள வேற் படையை நோக்கி ''நமக்கு எல்லாம் தந்தது இவ்வேல்'' என்று கூறினார். அப்போது அண்மையிலிருந்த பிரமன், 'இவ்வேலுக்கு இத்தகைய சிறப்பினை யானே அளித்தேன்'' என்றான். அது கேட்ட முருகப்பிரான், ''நம் கை வேலுக்கு ஆற்றல் அளிப்பவன் நீயோ?'' எனச் சினந்து, ''இங்ஙனம் செருக்குற்றுக் கூறிய நீ மண்ணுலகம் சென்று பிறந்து மாழ்குக'' என வெஞ்சொற் கூறினர். இங்ஙனம் பிரமதேவன் காரணமாக நேர்ந்த குறை தீரும் பொருட்டே தேவர்கள் அனைவரும் திருவாவினன்குடிக்கு முருகன் பாற் குறையிரந்து கொள்ள வணங்கச் சென்றனர்.

**சுவைமிகு பகுதிகள் :**

இவ்வாறே திருவேரகம் பகுதியில் வரும் அந்தணர்களின் இயல்பு விளக்கமும், குன்றுதோறாடல் என்னும் பகுதியில் வரும் வேலனின் வெறியாடல் பற்றிய செய்திகளும், பழமுதிர்சோலை என்னும் பகுதியில் வரும் குறிஞ்சி நில மக்களின் வழிபாட்டுத் திறன்களும், அதன் இறுதியில் வரும் அருவி வருணனையும், மிக்க சுவை யுடையனவாகும். அவைகள் கருத்துச் சுருக்கத்தில் ஓரளவு விவரிக்கப் பட்டுள்ளன.

முருகனின் ஆறு திருமுகங்களின் இயல்பை நக்கீரர் விளக்கியுள்ளவாறே அருணகிரி நாதர் திருப்புகழிலும், குமர குருபரர் கந்தர் கலிவெண்பாவிலும் தழுவிப் பாடியுள்ளனர். முருகனின் பன்னிரு கைகளும் செய்யும் செயல்களை நக்கீரர் விளக்கியிருப்பதனைத் தழுவி,

ஐயருக்கு ஏந்தி, உக்கம் சேர்த்தி,
ஊரு அமைத்து, ஒளிர் அங்குசம் கடாவி,
வையிலை எஃகமும் வட்டமும் திரித்து,
மார்பொடும் அமைந்து, தாரோடு
தையுறப் பொலிந்து, மீமிசைச் சுழன்று,
தடமணி இரட்டி, வான் பொழிந்து,
தெய்வமங் கையர்க்கு வதுவைசூட் டயர்ந்து,
திகழும்பன் னிருகர! போற்றி.

எனக் கச்சியப்ப முனிவர் அருளிச் செய் திருக்கும் பாடல் ஈண்டு அறிந்து இன்புறுவதற்கு உரியது.

**அருஞ் சொற்கள் :**

திருமுருகாற்றுப் படையின் பலதிறச் சிறப்புக்களுக்கு அதன்கண் இடை இடையே அமைந்து வரும் அரிய நல்ல சொற்களும் ஒரு காரணமாகும். துணங்கை, குடந்தம், பிரப்பு என்னும் சொற்கள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன எனலாம். ''பழுப்புடை இரு கை முடக்கி அடிக்கத் துடக்கிய நடையது துணங்கையாகும்''. ''நால்விரல் முடக்கிப் பெருவிரல்நிறுத்தி நெஞ்சிடை வைப்பதுகுடந்தம் ஆகும்''. பிரப்பு என்பது, தெய்வத்தின் முன்பு குறுணிக் கணக்கில் தகுந்த கொள் கலன்களில் நிவேதனமாகப் பரப்பி வைக்கும் அரிசி முதலிய பலவகைத் தானியங்கள். ஆடகம் சாதரூபம் கிளிச்சிறை சாம்பூநதம் என்னும் நால்வகைப் பொன்களுள், சாம்பூநதம் என்னும் பொன்னாற் செய்யப் பெற்ற அணிகலன்களை ''நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர் இழை' என நக்கீரர் குறிப்பிட்டிருப்பது, பிறமொழிச் சொற்பொருளைத் தமிழில் விளக்கும் திறனுக்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும். இத்தகைய பல அருஞ் சொற்களும் நாம் இனிதறிந்து போற்றுதற்குரியன.

**தோத்திரப் பகுதி :**

முருகனைப் பற்றிய துதியாக வரும் பின்வரும் வரிகள் (253-280), தூய இனிய தமிழில், தோத்திர முறையில், பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அமைந்திருப்பது, வியந்து போற்றி மகிழ்தற் குரியது.

நெடும்பெரும் சிமயத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ!
ஆல்கெழு கடவுள் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழைஅணி சிறப்பிற் பழையோள் குழவி!
வானோர் வணங்கு வில்தானைத் தலைவ!
மாலை மார்ப! நூல்அறி புலவ!

செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொல்
மலே!
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக!
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபேர் ஆள!
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண்
சேஎய்!
மண்டுஅமர் கடந்தநின் வென்றுஆடு அகலத்
துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்!
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்!
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி!
போர்மிகு பொருந! குரிசில்... (253-276)

## திருவாசக மேற்கோள் :

ஆசிரியர் நச்சினார்க்கினியர், இந்நூற்குத் தாம் வகுத்த உரையில் இறைவனின் திருவடியே வீடு பேறு ஆதலைத் ''தென்னன் பெருந்துறையான் காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டித் தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி'' என வரும் திருவாசகம் (அம்மானை-6) கொண்டும்; வள்ளியம்மையோடு முருகன் நகையமர்தல் உலகில் இல்வாழ்க்கை நடத்தற் பொருட்டே என்பதனைத் ''தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன் பெண்பால் உகந்தான் பெரும் பித்தன் காணேடி—பெண்பால் உகந்திலனேல் பேதாய் இரு நிலத்தோர் விண்பால் யோகெய்தி வீடுவர் காண் சாழலோ'' என்னும் திருவாசகம் கொண்டும்; கந்தழியாவது, ஒரு பற்றும் அற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள் என்பதனை, 'உற்ற ஆக்கையில் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம் போல் பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்'' என வரும் திருவாசகம் கொண்டும் (அதிசயம், 9)மேற்கோள் காட்டி விளக்கி யிருப்பது, சிவநெறி உணர்வினர்க்குச் சிறந்த பெரு விருந்தாகும்.

திருமுருகாற்றுப்படை, ஒரு பாராயண நூலாக மட்டும் இல்லாமல், பண்டைய நாட் செய்திகளையும், பழக்கவழக்கப்பண்பாடுகளையும்கூட அறிந்து கொள்ளுதற்கு உரிய ஒரு கருவியாகத் திகழ்கின்றது. பண்டைக் காலத்தில் ஒரு சில உயர்ந்த பெருமக்களால் பிரமசரிய ஒழுக்கமானது ''அறுநான்கு இரட்டி'' (48) ஆண்டுகள் வரையில் கூடக் கடைப்பிடிக்கப் பெற்றிருந்ததாகத் தெரிகின்றது.

அறுநான்கு இரட்டி இளமை நல்யாண்டு
ஆறினில் கழிப்பிய அறன்நவில் கொள்கை.

என்னும் வரிகள், பிரமசரிய நிலையைக் குறிப்பனவாகத் திருவேரகம் பற்றிய பகுதியில், அந்தணர்களின் இயல்பைக் குறித்து விளக்குங்கால், திருமுருகாற்றுப்படையில் வந்துள்ளன.

இங்ஙனம் பிரமசரிய நிலைக்கு 48 ஆண்டுகள் வரையறுத்தமை எற்றுக்கு என்பது நமக்குப் புலனாகவில்லை. ஆயினும் நூல்களின் மூலமாக அன்றி, வாய்மொழி (oral recitation) மூலமாகவே நடைபெற்று வழங்கி வந்த வேதப் பாடல்களுள், ஒரு வேதத்தினை நன்கினிது ஓதி முழுவதும் பயின்று மனனம் செய்து கொள்ள வல்லனாதற்கு 12 ஆண்டுகள் ஆகும் என்றும்; அங்ஙனம் நான்கு வேதங்களையும் பயின்று புலமை நிறைவும் வித்தகமும் பெறுவதற்கு 48 ஆண்டுகள் ஆகும் என்றும்; அங்ஙனம் நான்கு வேதமும் பயின்ற நல்லறிஞரே 'சதுர்வேதிகள்' எனப்படுவர் என்றும்; அத்தகையவர்களுக்கு வழங்கப் படுவனவே 'சதுர்வேதி மங்கலங்கள்' என்றும் ஒரு வகையில் நாம் கொள்ளலாம்.

இனி, வேதநூல் ஆராய்ச்சிகளில் மிகவும் தலை சிறந்த பேரறிஞராக விளங்கியிருந்த சுவாமி தயானந்தர் அவர்கள், ''உத்தமம் ஆகிய பிரமசரியம் என்பது 48 வயது வரை கடைப்பிடிக்கப் படுவதாகும். அங்ஙனம் 48 ஆண்டுகள் வரையில் எவன் பிரமசரிய ஒழுக்கம் கடைப்பிடிக்கின்றானோ, அவன் ஆற்றல் மிகவும் வாய்ந்து, எல்லாக் கலைஞானத் திறங்களையும் கற்றுணரும் வல்லமை பெறு

வான்''* என்று குறிப்பிட்டிருத்தலும் ஈண்டு நாம் அறிந்து மகிழ்ந்து பயன் கொள்ளத்தக்கது.

**முடிவுரை :**

இன்னேரனைய பல பெருஞ்சிறப்புக்கள் உடைய திருமுருகாற்றுப் படையினை, நாம் அனைவரும் 'சொல்லிய பாட்டின் பொருளை உணர்ந்து' சொல்லித் துதித்து, முருகனின் நல்லருளைப் பெற்று உய்ய முயலுவோமாக.

—ஆசிரியர்.

* "The highest class of Bramacharys, third in number, is upto the age of forty-eight. Just as the Jagati metre consists of forty eight syallables, similarly whoever keeps celibacy upto the age of forty-eight comes to possess his vital airs quite capable of acquiring all knowledge."

—SWAMI DAYANANDAR.

---

## செய்திச் சுருக்கம்

**ஆரம்பப் பள்ளி :**

மதுரை மாவட்டம் அழகர் கோவிலில் ஸ்ரீ கள்ளழகர் தேவஸ்தானத்தாரால் 29-9-1966 ஆம் தேதி ஒரு ஆரம்பப்பள்ளி துவங்கப்பட்டு நன்முக நடத்தப்பட்டு வருகிறது. பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவச புத்தகங்கள் வழங்கப் பட்டுள்ளன. தினந்தோறும் நண்பகலில் இலவசமாக உணவும் கொடுக்கப்பட்டு வருகிறது. சீருடை வழங்கவும் முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

**கோடி அருச்சனை :**

சிக்கல் ஸ்ரீ சிங்கார வேலவருக்கு 4-2-66 முதல் தொடர்ந்து நடைபெற்று வந்த கோடி அருச்சனை 31-10-1966 அன்று சிறப்புற நிறைவெய்தியது.

---

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் அவா

நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆரம்ப பள்ளியிலுள்ள ஐந்தாம் வகுப்பு குழந்தைகள் ஒவ்வொருவர் கையிலும் திருப்பாவை—திருவெம்பாவை நூல்களை கொடுத்து, வரும் மார்கழி மாதத்திற்குள் மனப்பாடம் செய்விக்கும் பணியில், பள்ளி ஆசிரியர்கள் ஈடுபடக் கேட்டுக் கொள்கிறோம்.

மார்கழி மாதம் முழுவதும் விடியற்காலையில் குழந்தைகள் பாவை பாசுரங்களை பாராயணம் செய்து கொண்டு, ஆங்காங்குள்ள திருக்கோயில்களை வீதிவலம் வரவேண்டுமென ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அபிப்பிராயப் படுகிறுர்கள்.

இந்நோக்கம் நிறைவேற தேவஸ்தானங்களில் டிரஸ்டிகள், நிர்வாக அதிகாரிகள், பக்கங்களிலுள்ள ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை தொடர்பு கொண்டு மாணவ மாணவிகள் பாவை பாசுரங்களை மனப்பாடம் செய்விக்கும் பணியில் ஈடுபட செய்யவேணுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

ஆரம்பப் பள்ளி ஐந்தாம் வகுப்பு குழந்தைகளுக்குத் தேவையான பாவை புத்தகங்கள் உள்ளூரில் கிடைக்காவிடில்அடியிற்கண்ட விலாசத்திற்குப் போதுமான தபால் வில்லைகளுடன் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

காரியதரிசி, திருப்பாவை—திருவெம்பாவை
மத்திய குழு,
19, பெரிய கடைத் தெரு,
மாயூரம்.

CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973



ஸ்ரீ ரங்கநாதசுவாமி, ஸ்ரீரங்கம்

# திருச்சந்த விருத்தம்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

வண்டு உலாவு கோதை மாதர்
காரணத்தினல் வெகுண்டு
இண்ட வாணன் ஈரைஞ்ஞூறு
தோள்களைத் துணித்தநாள்
முண்டன் நீறன் மக்கள் வெப்பு
மோடி அங்கி ஓடிடக்
கண்டு நாணி வாணனுக்கு இரங்கினன்
எம் மாயனே.

பொழிப்புரை: வண்டுகள் உலாவுகின்ற மலர் மாலைகளை அணிந்த உஷையின் நிமித்தம், சினம் கொண்டு எதிர்த்து வந்த வாணன் என்னும் அசுரனுடைய ஆயிரம் தோள்களையும் வெட்டிய காலத்தில், மொட்டைத் தலையனாய் நீறு பூசினவன் ஆகிய உருத்திரனும், அவனுடைய புதல்வர்களும், வெப்பு நோய்க் கடவுளும், பிடாரியும், அக்கினி தேவனும் புறமுதுகு காட்டி ஓடிப்போக, அதனைக் கண்டு, இத்தகைய கோழைகளுடனே நாம் போர் செய்யப் போந்தோம் என்றுவெட்கப்பட்டு, அவர்களால் பாதுகாக்கப் பெறுமல் கைவிடப் பட்ட வாணுசுரனுக்கு அருள் புரிந்தவன், எங்களுடைய மாயவனேயாவான்.

குறிப்புரை: வாணன் என்னும் அசுரனின் மகள் உஷை. கண்ணனின் பேரன் அநிருத்தன். அநிருத்தனும் உஷையும் ஒருவரை ஒருவர் காதலித்து, களவில் தழுவி இன்புற்று வந்தனர். அதனை அறிந்த வாணன், அநிருத்தனைப் பிடித்துச் சிறையிலிட்டான். அநிருத்தனைச்சிறையிலிருந்துவிடுவிக்கக் கண்ணபிரான், வாணுசுரனின் மீது படையெடுத்துப் போர் செய்யப் போந்தார். அது கண்டு, வாணனுக்குத் துணையும் காவலுமாக இருந்த உருத்திரன் முதலிய தெய்வங்கள் அஞ்சிப் புறமுதுகு காட்டி ஓடி ஒளிந்தன. அந்நிலையிலும் தயங்காது, தன்னை எதிர்த்த வாணனை மன்னித்துக் கண்ணபிரான் அவனுக்கு நான்கு தோள்களையும் உயிரையும் கொடுத்து அருள் புரிந்தான். காப்பதாக உறுதி கூறி உருத்திரன் கைவிட, எதிர்த்த வாணனுக்கு இரங்கி இன்னுயிர் அளித்த கண்ணபிரானே, உண்மையில் காக்கும் கடவுளாவான் என்பது இப்பாடலின் கருத்து. இண்ட—எதிர்க்க; துணித்த-வெட்டிய; மோடி—துர்க்கை, பிடாரி; எம் மாயன்—எங்களுடைய மாயன், எங்களுடைய ஆயன் (கண்ணன்). (71)

போதின் மங்கை பூதலக் கிழத்தி
தேவி அன்றியும்
போது தங்கு நான்முகன்
மகனவன்மகன் சொலில்
மாது தங்கு கூறன் ஏறதூர்தி
என்று வேதநூல்
ஓது கின்றது உண்மை அல்லது
இல்லை மற்று உரைக்கிலே.

பொழிப்புரை: மலர் மகளான இலக்குமியும், மண் மகளான பூமிப் பிராட்டியும் நினக்குத் தேவிமாராவர். மேலும், தாமரைமேல் வீற்றிருக்கும் நான்முகனுகிய பிரமன் நின் புதல்வனுக விளங்குகின்றான். மற்றும் சொல்லத் தலைப்பட்டால், ஒரு பக்கத்தில் பார்வதியை உடையவனுய் எருதை வாகனமாக உடைய சிவன் நினக்குப் பேரனுகத் திகழ்கின்றான் என்று வேத நூல்கள் கூறுவது உண்மையே யாகும். இவ்வாறு அல்லாமல் வேறு வகைகளில் கூற முற்பட்டால், அவைகள் உண்மை யல்லாதவையே யாகும்.

குறிப்புரை: திருமாலின் பரத்துவ ஏதுவான பெருமைகளை, ஆழ்வார் பாடலில், குறிப்பிட்டுள்ளார். மகனவன் மகன்—பேரன். 'மாது தங்கு கூறன்', 'ஏறு அது ஊர்தி' என்னும் தொடர்கள் சிவபிரானைக் குறித்தன. (27)

மரம் பொதச் சரம் துரந்து
வாலி வீழ முன்ஓர்நாள்
உரம் பொதச் சரம் துரந்த
உம்பர் ஆளி எம்பிரான்
வரம் குறிப்பில் வைத்தவர்க்கு அலாது
வானம் ஆளிலும்
நிரம்பு நீடு போகம்
எத்திறத்தும் யார்க்கும் இல்லையே.

பொழிப்புரை: முன்னொரு காலத்தில் ஏழு மராமரங்கள் துளைபடும்படி அம்பைச் செலுத்தியும், வாலி இறந்துபட அவனது மார்பில் துளைகள் உண்டாக அம்பைச் செலுத்தியும் அருளிய தேவாதிதேவனான எம்பெருமான், தன்னுடைய சிறந்த திருவுள்ளத்தில் ஏற்றுக் கொள்பவர்களைத் தவிர, மற்றையோர்களுக்கு அவர்கள் வானுலகம் ஆளுபவர்களாக இருந்தாலும், அல்லது வேறு எத்தகையவர்களாயினும், நிரம்பிய நிலையான சிறந்த இன்ப நுகர்ச்சியானது எவ்வழியாலும் எக்காலத்தும் கிடைக்க மாட்டாது.

குறிப்புரை: எம்பெருமானின் திருவுள்ளத்தில் இடம் பெற்றவர்கள் மட்டுமே இன்ப நுகர்ச்சிகளைப் பெறுதல் இயலும்; ஏனையோர்க்கு ஒரு சிறிதும் இயலாது என்பது கருத்து. பொத—பொத்துப்பட, துளை உண்டாக; சரம்—அம்பு; உம்பர் ஆளி—தேவர்களை ஆளும் தலைவன். (73)

அறிந்து அறிந்து வாமனன்
　　அடியிணை வணங்கினால்
செறிந்து எழுந்த ஞானமோடு
　　செல்வமும் செறிந்திடும்
மறிந்து எழுந்த தெண்டிரையுள்
　　மன்னும் மாலை வாழ்த்தினால்
பறிந்து எழுந்து தீவினைகள்
　　பற்று அறுதல் பான்மையே.

பொழிப்புரை: வாமனன் ஆகிய உலகளந்த பெருமாளினுடைய திருவடிகளை, உபாயம் என்றும் உபேயம் என்றும் தெரிந்து கொண்டு பணிந்தால், நிரம்பித் ததும்பிய மெய்யுணர்வாகிய ஞானமும், பக்தியாகிற செல்வமும் குறைவிலா நிறைவாய்க் கிடைக்கும். மீண்டும் மீண்டும் எழுகின்ற தெளிந்த அலைகளையுடைய திருப்பாற் கடலிலே நிலைபெற்று வாழ்கின்ற திருமாலைத் துதித்தால் நம்மைப் பற்றிக் கொண்டு ஓங்கி வளர்ந்து வருகின்ற கொடிய பாவங்கள் எல்லாம், வேரோடே பறிக்கப்பட்டு இருந்த இடமும் தெரியாமல், அழிந்துபோதல் நிச்சயமே யாகும்.

குறிப்புரை: இறைவன் தன்னுடைமையாகிய நம்மைப் பெறுவதற்குத் தானே யாசகனாய் நிற்பவன். அடியார்களை ஆட்கொள்ளுங்கால், உயர்வு தாழ்வு கருதாமல் எல்லோரையும் ஒக்க நோக்கி ஆட்கொள்ளுபவன். இதனை நூல்முகமாகவும் குருமுகமாகவும் உணர்ந்து, இறைவனை வணங்கி வந்தால், ஞானச் செல்வமும் பக்திச் செல்வமும் நிரம்பக் கிடைக்கும். எம்பெருமானின் திருநாமங்களை வாயாற் சொல்லித் துதித்து வந்தால், நம்முடைய பாவங்கள் யாவும் அழிந்தொழிந்து போம் என்பது இப்பாடலின் கருத்து. (74)

ஒன்றி நின்று நற்றவம் செய்து
　　ஊழி ஊழிதோறு எலாம்
நின்று நின்று அவன் குணங்கள்
　　உள்ளி உள்ளம் தூயராய்
சென்று சென்று தேவ தேவர்
　　உம்பர் உம்பராய்
அன்றி எங்கள் செங்கண் மாலை
　　யாவர் காண வல்லரே.

பொழிப்புரை: மனம் ஒருமைப்பட்டு நிற்க, நல்ல தவத்தைப் பற்பல பிறவிகளிலே தொடர்ந்து பல ஊழிக் காலங்களாகச் செய்து, அப்பெருமானுடைய திருக் குணங்களை, இடைவிடாமல் ஈடுபட்டுத் தியானித்து, உள்ளம் தூய்மையுடையவர்களாக ஆகப் பெற்று, முத்தி நெறியில், கேட்டல் சிந்தித்தல் முதலிய மேன்மேற் படிகளிலே ஏறிப்போய், பரபக்தி பரஞானம் பரமபக்தி என்னும் இவற்றையெல்லாம் அடையப் பெற்றவர்களாக ஆனால் அல்லது, தேவதேவர்களாக இருந்தாலும் எங்களுடைய செங்கண் மாலை எவரும் காண வல்லவர்கள் அல்லர்.

குறிப்புரை: இறைவனை முறைப்படி வழிபட்டு வரும் அடியவர்களைத் தவிர, மற்றையவர்கள் காண்டல் இயலாது. இப்பாடலில் எங்கள் பெருமானை என்றோ, அல்லது எங்கள் ஈசனை என்றோ அருளிச் செய்யாமல், ''எங்கள் செங்கண் மாலை யாவர் காண வல்லரே'' என்று அருளிச் செய்தது, இறைவன்பால் உண்டாகும் தொடக்கநிலை ஈடுபாடு முதல், மிக மேலான பரமபக்தி ஈறாக உள்ள, அனைத்தும்

ஆன்மாக்களின் முயற்சியால் அன்றி இறைவனின் சிறந்த பெருங் கருணையினுல்தான் விளையக்கூடும் என்பதனை உணர்த்துகின்றது (75)

புன்புல வழி அடைத்து
அரக்கு இலச்சினை செய்து
நன்புல வழி திறந்து
ஞான நற்சுடர் கொளீஇ
என்பில் எள்கி நெஞ்சுருகி
உள்கனிந்து எழுந்ததோர்
அன்பில் அன்றி ஆழியானை
யாவர் காண வல்லரே?

பொழிப்புரை: இழிந்த நுகர் பொருளிலே செல்லுகின்ற பொறிகளின் வழியை அடைத்து, அவற்றிற்கு அரக்கினுல் முத்திரை யிட்டு, நல்ல நுகர் பொருள்களில் செல்லுகின்ற வழியினைத் திறந்து விட்டு, ஞானமாகிய நல்ல ஒளி விளக்கினைக் கொளுத்தி, எலும்பினுல் இயன்ற வீடாகிய உடம்பும் நெகிழ்ந்து, நெஞ்சம் கரைந்து, மனமானது கனிபோலப் பழுத்துப் பக்குவமடைந்து மேலே பொங்கியெழுந்த ஒப்பற்ற அன்பினுல் அல்லாமல், சுதர்ஸனம் என்னும் சக்கரத்தை ஏந்திய திருமாலைத்தம்முடைய முயற்சியினுல் யாவர்தான் காணவல்லவர்கள் ஆவர்.

குறிப்புரை: 'சென்றவிடத்தாற் செலவிடா தீதுஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு' எனத் திருவள்ளுவர் அருளியது போல, நாம் புன்புலன்களின் வழியை அடைக்கவும், நன் புலன்களின் வழியைத் திறந்து விடவும், அறியாமை நிறைந்த நம் உள்ளத்தில் ஞான நற்சுடர் ஒளிவிட்டுத் திகழப் பெறுதல் வேண்டும். என்பு எள்கி, நெஞ்சு உருகி, உள் கனிந்து இறைவன்பால் அன்பு எழப் பெறுதல் வேண்டும். அப்போதுதான் நாம் இறைவனைக் காண முடியும் என்பது இப்பாடலின் கருத்து. உயிர்களாகிய நம்மிடம் இருவகையான பவாங்கள் உள்ளன. ஒன்று இறைவனைத் தவிர்ந்த புல்லிய புறப்பொருள்களில் ஈடுபடுவதற்கான பாவம்; மற்ருென்று இறைவன் திறத்தில் ஈடுபடாமல், அவன்பாற் கருத்தின்றிப் புறக்கணித்துக் கெடுவதற்கு உரிய பாவம். இவ்விரண்டு பாவங்களையும் இரு துண்டமாக வெட்டி எறிந்து, பெருமான் கையும் திருவாழியும் சேர்ந்த சேர்த்தியைக் காட்டித் தன்பால் பக்தியை நமக்கு வளரும்படி செய்தருள்கின்ருன் என்பது, ஆழியான் என்னும் சொற்குறிப்பால் புலனுகின்றது. இலச்சினை—முத்திரை.

(76)

எட்டும் எட்டும் எட்டுமாய்
ஓர்ஏழும் ஏழும் ஏழுமாய்
எட்டும் மூன்றும் ஒன்றும் ஆகி
நின்ற ஆதி தேவனை
எட்டின் ஆய பேதமோடு
இறைஞ்சி நின்று அவன்பெயர்
எட்டு எழுத்தும் ஓதுவார்கள்
வல்லர் வானம் ஆளவே.

பொழிப்புரை: இருபத்து நான்கு தத்துவங்கள், ஏழு தீவுகள், ஏழு உலகங்கள், ஏழு கடல்கள், பன்னிரண்டு சூரியர்கள் ஆகிய அனைத்தையும் படைத்து நடத்துபவனுய் உள்ள தேவர்களுக்கு எல்லாம் தேவனுகிய திருமாலை, எட்டு வகை உறுப்புக்களும் நிலத்திற்படிய விழுந்து வணங்கி, அவனது திருப்பெயராகிய எட்டெழுத்து மந்திரத்தை இடைவிடாமல் ஓதி வழிபடுபவர்கள், பரமபதமாகிய வைகுண்டத்தை ஆள வல்லவர்கள் ஆவர்.

குறிப்புரை: வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்னும் கன்மேந்திரியங்கள் ஐந்தும், சோத்திரம் துவக்கு சட்சு சிங்நுவை ஆக்கிராணம் என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும், சப்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னும் தன்மாத்திரைகள் ஐந்தும், நிலம் நீர் தீ வளி விசும்பு என்னும் பூதங்கள் ஐந்தும், மனசு மகான் அஹங்காரம் பிரகிருதி என்னும் நான்கும் ஆகிய இவை இருபத்து நான்கு தத்துவங்கள் எனப்படும்.

நாவலந்தீவு, சாகத்தீவு, குசத்தீவு, கிரவுஞ்சத்தீவு, சான்மலித் தீவு, கோமேதகத் தீவு, புட்கரத் தீவு என்பன ஏழு தீவுகள்.

உவர்க்கடல் பாற்கடல் தயிர்க்கடல் நெய்க்கடல் கருப்பஞ்சாற்றுக்கடல் மதுக்கடல் சுத்த நீர்க்கடல் என்பன ஏழு கடல்கள்.

பூலோகம் புவலோகம் சுவலோகம் மகலோகம் சனலோகம் தவலோகம் சத்தியலோகம் என்பன ஏழு உலகங்கள்.

அம்சன் தாதா இந்திரன் சவிதா விச்சுவா பகவன் பருச்சனி துவஷ்டா மித்திரன் விஷ்ணு வருணன் பூடா என்பவர் பன்னிரண்டு சூரியர் கள்.

தலை (1), கைகள்(2) காதுகள்(2) நெற்றி (1) கால்கள்(2) ஆக எட்டு உறுப்புக்களும் நிலத்திற் பொருந்துமாறு வணங்குதல். 'எட்டினுய பேதமோடு இறைஞ்சிநிற்றல்' ஆகும்.

சோர்வு இலாத காதலால்
தொடக்கு அறு மனத்தராய்
நீர் அராவணைக் கிடந்த
நின்மலன் நல்அம் கழல்
ஆர்வ மோடு இறைஞ்சி நின்று
அவன்பெயர் எட்டு எழுத்தும்
வாரம் ஆக ஓதுவார்கள்
வல்லர் வானம் ஆளவே

பொழிப்புரை: திருப்பாற் கடலிலே, ஆதிசேடனுகிய படுக்கையிலே பள்ளி கொண்டு அருளுகின்ற எம்பெருமானு டைய நல்ல திருவடிகளை அன்புடன் அடைந்து தொழுது, தளர்ச்சி யில்லாத பக்தியாகிய பெரும் காதலினுல் இடை யருத ஒருமைப்பாடுடைய மனம் உடை யவர்களாய், எம்பெருமானுடைய திருப் பெயராகிய எட்டெழுத்து மந்திரத்தை அன்பு மிகுதிப் பட ஓதி வழிபடுபவர் களே, பரமபதம் ஆகிய வைகுந்தத்தை ஆளுவதற்குத் தகுதி உடையவர்கள் ஆவர்.

குறிப்புரை: இறைவன்பால் நமக்கு அன்பு மிகுந்து காதலாக வளர்தல் வேண்டும். அது தானும் இடையில் தளர்ச்சி யடையாத, சோர் விலாத காதலாக விளங்குதல் வேண்டும். அதற்கு நம்முடைய மனம் பிற பொருள்களில் ஈடுபடாமல் இவைனிடத்திலேயேஇடையறுமல் ஈடுபடும் ஒருமைப் பாடுடையதாக விளங்க வேண்டும். அதன் பொருட்டு நாம் இறைவனை ஆர்வமுடன் இறைஞ்சவும், அவன் திருப்பெய ராகிய எட்டெழுத்தை அன்புடன் ஓதி வழி படவும் வேண்டும். அங்ஙனம் வழிபட்டால் நாம் பரமபதம் அடைந்து உய்ந்து உயரலாம் என்பது கருத்து. வாரம்—அன்பு, பற்று.

(78)

பத்தி னோடு பத்துமாய்
ஓர் ஏழினோடு ஓர் ஒன்பதாய்
பத்து நால் திசைக்கண் நின்ற
நாடு பெற்ற நன்மையாய்
பத்தின் ஆய தோற்ற மோடு
ஓர் ஆற்றல் மிக்க ஆதிபால்
பத்தராம் அவர்க்கு அலாது
முத்தி முற்றல் ஆகுமே.

பொழிப்புரை: பத்து திசைகளுக்கும், பத்து திசைகளின் காவலர்களுக்கும், ஏழு ஸ்வரங்களுக்கும், ஒன்பது வகைச் சுவைகளுக்கும் தலைவனுய், பதினன்கு வகைப்பட்ட உலகங்களில் உள்ளவர்க ளும் பெறக்கூடிய நன்மையின் பொரு ட்டு, பத்து வகையானதோற்றங்களிலே வெளிப்பட்டு ஆற்றல் நிறைந்த ஒப்பற்ற ஆதி முதல்வனுகிய திருமாலினிடத்தில், பக்தி யுடையவராய் வாழ்பவர்களுக்கு அன்றி வீடுபேறு அடைதல் என்பது இயலுமோ?

குறிப்புரை: எட்டுத் திசைகளுடன் மேல் கீழ் என்ற திசைகளைக் கூட்டத் திசைகள் பத்தா கும். ஏழு ஸ்வரங்களாவன:—குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் (சரிகம பதநி) என்பன. நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை நடுவுநிலை என்பன, ஒன்பது வகைச் சுவை களாகும். பூலோகம் புவலோகம் சுவலோகம் மகலோகம் சனலோகம் பவலோகம் சத்திய லோகம் அதல விதல சுதல மகாதல தராதல ரசாதல பாதல என்பன பதினன்கு உலகங்கள். இறைவன் திறத்தில் பக்தியுடையவர்களுக்கே யன்றி ஏனையோர்க்கு வீடுபேறு எய்துதல் இயலாது. (79)

வாசி ஆகி நேசம் இன்றி
வந்து எதிர்ந்த தேனுகன்
நாசம் ஆகி நாள் உலப்ப
நன்மைசேர் பனம் கனிக்கு
வீசி மேல் நிமிர்ந்த தோளின்
இல்லை ஆக்கினுய் கழற்கு
ஆசையாம் அவர்க்கு அலால்
அமரர் ஆகல் ஆகுமே.

பொழிப்புரை: தேனுகன் என்னும் அசுரன், கோவேறு கழுதையின் வடிவம் கொண்டு அன்பில்லாதவனாக வந்து எதிர்ப்பட, அவனுடைய வாழ்நாள் அழிந்து முடிவடையும்படி மேலே உயரமாக நிமிர்க்கப்பட்ட தோளினால் அவனை அழகிய பனம் பழங்களின் மேலே தூக்கி எறிந்து அழித்து ஒழித்த நின்னுடைய திருவடிகளை விரும்பிநேசிப்பவர்களே அல்லாமல், மற்றையவர்கள் நித்திய சூரிகளோடு ஒப்புடையராதல் கூடுமோ?

குறிப்புரை: கண்ணபிரானைக் கொல்லக் கம்சனின் கட்டளைப்படி கழுதை வடிவம் கொண்டு வந்தவன் தேனுகன் என்னும் அசுரன். கண்ணபிரான் அவனது கால்களைப் பற்றித் தூக்கி எறிந்து அவனைக் கொன்றொழித்தான் என்பது வரலாறு. வாசி—கோவேறு கழுதை; இல்லையாக்கினாய்—அழித்தாய்; அமரர்—நித்திய சூரிகள்.

தேனுகாசுரனைக் கொன்ற வரலாறு, இறைவன் ஆச்ரித விரோதி நிவர்த்தகன் என்னும் உண்மையை உணர்த்தும். (80)

—ஆசிரியர்.

(தொடரும்)

---

## கோயில் நிகழ்ச்சிகள்

**பெருந்திருவிழா :**

1. ஸ்ரீஅருணாசலேஸ்வரர் தேவஸ்தானம், திருவண்ணாமலை (15-11-66 முதல் 1-12-66)

**மண்டலாபிஷேக விழா :**

1. திரிசிரபுரம் மலைக்கோவில் ஸ்ரீ மட்டுவார் குழலம்மை சமேத ஸ்ரீ தாயுமானேஸ்வரர் தேவஸ்தானம்.

**நவராத்திரி விழா :**

1. ஸ்ரீ கல்யாண பசுபதீஸ்வர சுவாமி தேவஸ்தானம், கருவூர்.
2. காஞ்சிபுரம் ஸ்ரீ காமாட்சியம்மை சமேத ஸ்ரீ ஏகாம்பரநாதர் தேவஸ்தானம்
3. ஸ்ரீ கங்காதரேஸ்வரர் வகையறு தேவஸ்தானம், புரசைவாக்கம், சென்னை-7.
4. திருவண்ணாமலை தொகுதி ஸ்ரீ அருணாசலேசுவரர் தேவஸ்தானம்.
5. ஸ்ரீ திருக்கண்மாலீஸ்வர சுவாமி தேவஸ்தானம், கிருஷ்ணராயபுரம்.
6. சென்னை ஸ்ரீ காமாட்சியம்பாள் சமேத ஏகாம்பரேஸ்வரர் தேவஸ்தானம்.
7. திருவெண்காடு ஸ்ரீ சுவேதாரண்யேசுவர சுவாமி தேவஸ்தானம்.
8. ஸ்ரீ சௌந்தரவல்லி சமேத ஸ்ரீ சௌந்திரராஜப் பெருமாள் தேவஸ்தானம்.
9. இளையாத்தகுடி ஸ்ரீ கைலாசநாத சுவாமி மற்றும் நித்தியகல்யாணி அம்மன் கோவில்
10. மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில்.
11. சென்னை ஸ்ரீ சென்னமல்லீஸ்வரர் ஸ்ரீ சென்னகேசவப் பெருமாள் தேவஸ்தானம்.
12. ஸ்ரீ ஆதிபீடா பரமேஸ்வரி காளிகாம்பாள் தேவஸ்தானம், காஞ்சிபுரம்.
13. ஸ்ரீ அரங்கநாதீஸ்வர சுவாமி தேவஸ்தானம், மடவாளம், திருப்பத்தூர் வட்டம், வட ஆற்காடு மாவட்டம்.
14. ஸ்ரீ திரிசூலநாத சுவாமி தேவஸ்தானம், திரிசூலம், பல்லாவரம், சென்னை.

**ஐப்பசி விசுத் திருவிழா :**

1. திருக்குற்றாலம், திருக்குற்றாலநாத சுவாமி கோயில்.

# ஞான சித்தர்களும் சித்த மருந்தும்

(திரு. வி. பலராமையா அவர்கள், பி. ஏ., பி.எல்.,

பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8)

தல விருட்சங்கள் என்பன, சித்தர் வசித்து வந்த மாளிகைகள் என்பதைப் பற்றியும், அம் மரங்களைக் கொண்டே மக்களுடைய பல பிணிகளை நீக்கி வந்தனர் என்பதைப் பற்றியும், அவ் விடங்களிலேயே சித்தர்கள் சமாதியடைந்து மக்களுக்கு அவைகளை அருள் இடமாக அமைத்தனரென்பதையும், அவ்விடங்களிலேயே மக்கள் பெரிய பெரிய ஆலயங்களை அமைத்து அந்த சித்தர்களையே வழிபடலாயினர் என்பதையும், நாளடைவில் உருவ வழிபாட்டின் பெருமை முக்கியத்துவம் பெற்று அந்தச் சித்தர்களின் பெருமையை மக்கள் மறந்து விட்டனர் என்பதைப் பற்றியும் முன் கட்டுரையில் எழுதியிருந்தோம்.

அப்படிப்பட்ட மகான்களின் கிருபை பொருந்திய தலங்கள் பின்வருமாறு:

| | மகான்களின் பெயர்கள் | அடங்கிய தலங்கள் |
|---|---|---|
| 1. | அகத்தியர் | அனந்தசயனம் |
| 2. | கும்பமுனி | கும்பகோணம் (கும்பேசுரர் ஆலயம்) |
| 3. | புலத்தியர் | பாபநாசம், ஆவுடையார் கோவில் |
| 4. | திருமூலர் | சிதம்பரம், திருமூலவர்க்கம், நெடுங்குன்றம் |
| 5. | திருமூலர் நோக்கம் | மேலை சிதம்பரம் |
| 6. | சட்டமுனி | சீர்காழி, சீரங்கம் |
| 7. | கோரக்கர் | திருக்கோணமலை |
| 8. | கருவூரார் | திருக்காளத்தி |
| 9. | பதஞ்சலி | அழகர் மலை |
| 10. | அழுகண்ணர் | நாகப்பட்டணம் |
| 11. | நாரதர் | திருவிடைமருதூர், கருவை நல்லூர் |
| 12. | இராமதேவர் | அழகர் மலை |
| 13. | மச்சமுனி | திருப்பரங்குன்றம், மயிரேசகம், திருவானைக்காவல் |
| 14. | மார்க்கண்டர் | கருவை நல்லூர் |
| 15. | கொங்கணர் | திருப்பதி, கோடித்துறை, திருக்கணங்குடி |
| 16. | பாம்பாட்டி சித்தர் | திருஞ்ஞாலம், துவாரகை |
| 1'7. | புண்ணாக்கீசர் | நண்கணாசேர் |
| 18. | காசிபர் | ருத்ரகிரி |
| 19. | வரதர் | தென்மலை |
| 20. | கன்னி சித்தர் | பெருங்காவூர் |
| 21. | தன்வந்திரி, வசிட்டர் | வைத்தீஸ்வரன் கோவில் |
| 22. | கோரக்கர், போகர் | திருக்கழுக்குன்றம் |
| 23. | நந்தி, விசுவாமித்திரர் | காசி, திருவாவடுதுறை, காளாங்கி |
| 24. | கடுவெளி சித்தர் | திருக் காஞ்சிபுரம் |
| 25. | இடைக்காடர், கௌதமர் | திருவருணை, சேது, திருவிடைமருதூர் |
| 26. | கமலமுனி, சுந்திரானந்தர் | மதுரை, ஆரூர், திருவாஞ்சியம் |

| | | |
|---|---|---|
| 27. | சுந்தரர் | வாரிக்ஷும் |
| 28. | காளாங்கி | திருக்கடவூர், திருப்பனந்தாள் |
| 29. | வால்மீகி, அகப்பை சித்தர் | எட்டிக்குடி, திருவையாறு |
| 30. | போக நாதர் | பழநி, கதிர்காமம், திருச்செந்தூர், திருத்தணிகை, திருப்பரங்குன்றம் |

இவ்வித அரும் பெரும் தலங்களிலாவது, தல வரலாறுகளிலாவது மேற்படி சித்தர்களைப் பற்றி, ஒன்றிரண்டு ஆலயங்கள் தவிர, மற்றவைகளில் இந்த ஞான சித்தர்களைப் பற்றி ஒரு குறிப்பும் காணப்படவில்லை. சைவ சித்தாந்தத்திற்குச் சித்தர்களின் தத்துவங்கள் முரண்பாடுடையதாகக் கருதுவதா லுண்டாகும் கோளாறின் பயனாக, அவ்விதப் புறக்கணிப்பு இருக்கலாமென ஒருசாரார் கொள்கை.

எது எப்படி இருப்பினும், அரசாங்கமும் அறநிலையப் பாதுகாப்பாளர்களும், இது விஷயமாய் முக்கிய கவனம் செலுத்தி, அந்தந்தத் தலங்களில் அந்தந்தச் சித்தர்களின் நாமத்தை, மக்கள் அறியுமாறு வேண்டியன செய்ய வேண்டுமென்பது எனது தாழ்ந்த கருத்து: தல வரலாறுகளிலும் இந்தச் சித்தர்களைப் பற்றிக் குறிப்பிடுவது மிக மிக முக்கியம்.

(தொடரும்)

---

## செய்திச் சுருக்கம்

### பாராட்டு விழா :

ஸ்ரீ தாயுமானவர் மட்டுவார் குழலம்மை திருப்பணிக் குழுவின் சார்பில், 9-10-1966-அன்று, ஷெ கோயிலின் திருப்பணி நிறைவுத் திருக்குட முழுக்கு விழா நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றுச் சிறப்புற நடத்தித் தந்த தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்குப் பாராட்டு விழா, திருச்சி மாவட்ட ஆட்சித் துறைத் தலைவர் உயர்திரு கே. சொக்கலிங்கம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்புற நடைபெற்றது. திரு ஏ. முத்துக் குமரன், திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார், திரு டாக்டர் வி. கே. ரங்கநாதன், தஞ்சைத் துணை ஆணையர், திரு எ. மார்க்கண்டவேல் ராஜன், திருக்குறள் வேள் திரு. கு. வரதராஜப் பிள்ளை, திரு. எல். எஸ். பார்த்தசாரதி ஐயர், திரு. டி.வி. கைலாசம் முதலிய பெருமக்கள் பலர் விழா நிகழ்ச்சியிற் கலந்து கொண்டனர். திருப்பணிக் குழுவின் சார்பில் பாராட்டு மடலும் பொன்னாடையும் வழங்கிச் சமர்ப்பிக்கப் பெற்றன. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் அருளுரையும் ஆசியுரையும் வழங்கினார்கள். திருப்பணிக் குழுவின் செயலாளரும் பொருளாளரும் ஆகிய நிர்வாக அதிகாரி திரு. எஸ். மகாராஜன், பி.ஏ., பிடி., அவர்கள் அனைவருக்கும் நன்றியுரை நவின்றார்கள்.

### வெளியீட்டு விழா :

தேவகோட்டைச் சிவாகம பரிபாலன சங்கத்தின் சார்பில் 25-9-1966 மாலை அகோர சிவாசாரியார் அருளிச் செய்த ''பரார்த்த நித்திய பூஜா விதி'' தமிழ்மொழி பெயர்ப்பு நூல், சைவப் புரவலர் திரு. சி.ச. அருணாசலம் பிள்ளை அவர்கள் தலைமையில், நமது அறநிலைய ஆணையர் திரு. மா. சே. சாரங்கபாணி முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்களால் வெளியிடப் பெற்றது. திருவாளர்கள்: முத்து. கரு. அரு. கரு. அருணாசலம் செட்டியார், வழக்கறிஞர் எஸ் சிவசுப்ரமண்யம், ம. ஆறுமுகம் பிள்ளை (ஆர்.டி.ஓ.), இராமச்சந்திரபுரம், பழ. சண்முகம் செட்டியார், தத்புருஷ தேசிகர், சுப. சிவராமன் செட்டியார் முதலிய பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர். இந்நூல் வெளியீட்டுக்கு மு. இராம. சுப. வேங்கடாசலம் செட்டியார், சுவாமிநாதன் செட்டியார் ஆகியோர் பொருளுதவி புரிந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

—ஆசிரியர்.

# "கருணை மலை"

### முன்னுரை :

தமிழ் மொழிக்குப் பலதிறப் பெருஞ் சிறப்புக்கள் உண்டு. தமிழுக்கே தனிச் சிறப்பாக உரிய பலவகைப் பேறுகளுள் அதன் சீரிய இலக்கண அமைப்பும் ஒன்றாகும், அது பற்றியே

கண்ணு தற்பெருங் கடவுளும்
கழகமோடு அமர்ந்து
பண்ணுறத்தெரிந்து ஆய்ந்தஇப்
பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணி டப்படக் கிடந்ததா
எண்ணவும் படுமோ?

என ஆசிரியர் பரஞ்சோதி முனிவர், தமிழ் மொழியின் சீரிய இலக்கண அமைப்புத் திறன் குறித்துப் பாராட்டி உரைப்பாராயினர்.

### கால்டுவெல் :

"தமிழ் மக்களைப் போல இலக்கணத்தினை அன்பும் ஆர்வமும் கொண்டு, திட்ப நுட்பம் செறிய, மிகவும் நுணுகிக் கற்றுணர்ந்து இன்புற்றவர்கள் உலகிலேயே வேறு பிறர் இல்லையெனலாம். மொழியின் இலக்கண அமைப்புக்களை நுணுகி நுணுகி மிகவும் ஆராய்ந்து பயின்றுவந்ததனால், தமிழ் மக்களின் அறிவு மிகக்கூர்மை அடைந்து வளர்ந்ததுடன், அவர்களுடைய மொழியும் திருத்தமுற்றுச் செம்மை எய்தித் திகழ்வதாயிற்று" எனப் பேரறிஞர் திரு. கால்டுவெல் அவர்கள் பாராட்டி உரைக்கின்றார் (1).

### தமிழ்க் கவிஞர்கள் :

இங்ஙனம் தமிழில் இலக்கணம் சிறப்புற அமைந்திருப்பதனாலும், தமிழ் மக்களுக்கு இலக்கணத்தில் மிகுந்த ஆர்வமும் அன்பும் இயல்பாகவே நிறைந்திருப்பதனாலும், சிறந்த தமிழ்க் கவிஞர்கள் தம்முடைய கவிதைகளில் இடையிடையே இலக்கணக் குறியீடுகளும் விரவி வருமாறு தமது புலமைத் திறம் தோன்றப் பாடுவதுண்டு. மேலும் அவர்கள் ஒரு தொடரையே பலவேறு பொருள்கள் அமையும் வண்ணம், தமது நுண்மாண் நுழை புலனாலும்,இலக்கணப் புலமையின் வல்லமையாலும், அறிவிற்குப் பெரு விருந்தாக அமையும்படி கவிதைகள்இயற்றுதலை, ஒரு பெரும் கலைத்திறனாகக் கொண்டு கடைப்பிடிப்பர்.

### சிவப்பிரகாசர் :

இத்தகைய புலவர்களுள் மிகவும் சிறப்புடையவராகக் குறிப்பிடத் தக்கவர், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவர். இவர், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் விளங்கியவர். பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகளின் மைத்துனர். மைலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ பாலய்ய சுவாமிகள் அவர்களின் திருவருள் பெற்றவர். பிரபுலிங்க லீலை முதலிய சிறந்த பல நூல்களை அருளிச் செய்தவர். 'கற்பனைக் களஞ்சியம்' எனவும், 'கவிசார்வ பௌமர்' எனவும் அறிஞர்களாற் போற்றப்படும் பெருமை வாய்ந்தவர். இவர் இயற்றிய நூல்களுள், நால்வர் நான்மணிமாலை சோணசயில மாலை என்பன, பலரும் போற்றிப் பயின்று மகிழும் நூல்களாகும். சோணசயில மாலைப் பாடல் ஒன்றில், திருவண்ணாமலையின் சிறப்பினைச் சிவப்பிரகாச சுவாமிகள் தமது இலக்கணப் புலமை நலமும், கவிதைத் திறமும் விளங்கக் கற்பனைச் சுவை நலம் பெருக அழகுறப் பாடியருளியுள்ளார். அதன்கண், தமிழிலக்கணத்தில் மிகவும் சிறப்புடைய அன்மொழித் தொகை, வேற்றுமைத் தொகை என்னும் இலக்கணக் குறியீடுகளை எழில் மிகக் கையாண்டருள்கின்றார்.

### வேற்றுமைத்தொகை :

தமிழில் வேற்றுமைத் தொகை, வினைத் தொகை,பண்புத் தொகை,உம்மைத் தொகை, அன்மொழித்தொகை உவமைத் தொகை,

(1) "Educated Tamilians have studied Tamil with an earnestness and assiduity which are highly creditable to them, and which never have been exceeded in the history of any of the languages of the world.

One result of this long-continued devotion to grammatical studies has been the development of much intellectual acuteness; another result has been the progressive refinement of the language itself".

DR. ROBERT CALDWELL.

எனத் தொகை நிலைத் தொடர்கள் ஆறு வழங்கப்படும். நிலத்தைக் கடந்தான், கல்லால் எறிந்தான், கொற்றனுக்கு மகன், மலையின் வீழ் அருவி, சாத்தனது கை, குன்றத்தின்கண் கூகை என வருதற்குரிய தொடர்கள்—நிலம் கடந்தான், கல்லெறிந்தான், கொற்றன் மகன், மலைவீழ் அருவி, சாத்தன் கை, குன்றக் கூகை என முறையே ஐ ஆல் கு இன் அது கண் என்னும் இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழாம் வேற்றுமைக்கு உரிய உருபுகள் மறைந்து தொக்கு வருவது, வேற்றுமைத் தொகை எனப்படும்.

## அன்மொழித் தொகை :

இவற்றுள் அன்மொழித் தொகை என்பது மேற்குறித்த வேற்றுமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத்தொகை, உம்மைத் தொகை என்னும் ஐந்தனடியாகவும் தோன்றும். ''ஐந்தொகை மொழிமேல் பிற தொகல் அன்மொழி'' என்பது நன்னூல். ஒரு தொடரின் கண் உள்ள சொல் அல்லாத வேறொரு சொல்தொக்கு வந்து பொருள்தருவது அன்மொழித் தொகையாகும். பூங்குழல் என்னும் தொடர், பூவை அணிந்த கூந்தல் என்று மட்டும் பொருள் தரின், அது இரண்டாம் வேற்றுமைத் தொகை எனப்படும். அதுவே, பூவை அணிந்த கூந்தலை உடையாள் எனப் பொருள் தரின், அது இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை எனப்பெறும். பூங்குழல் என்னும் தொடரில் உள்ளது அல்லாத 'உடையாள்' என்னும் சொல் தொக்கு நின்று பொருள் தந்தமையால், இஃது அன்மொழித் தொகை யாயிற்று. இவ்வாறே பொற்றொடி என்பது பொன்னாலாகிய தொடியினை உடையாள் எனவும்; கவி இலக்கணம் என்பது கவிக்கு இலக்கணம் சொல்லப்பட்ட நூல் எனவும்; பொற்றாலி என்பது பொன்னினாலாகிய தாலியினை உடையாள் எனவும்; கிள்ளிகுடி என்பது கிள்ளியினது குடியிருக்கும் ஊர் எனவும்; கீழ் வயிற்றுக் கழலை என்பது கீழ் வயிற்றின்கண் எழுந்த கழலை போல்வான் எனவும் விரியும். இவைகள் முறையே மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைகள் எனப்படும்.

இனி, இவையே யன்றி வினை பண்பு உவமை உம்மை என்னும் வேறு பிற தொகைகளின் அடியாகவும் அன்மொழித் தொகைகள் தோன்றும். தாழ்குழல் என்பது, தாழ்ந்த குழலினை யுடையாள் எனவும்; கருங்குழல் என்பது, கருமையாகிய குழலினையுடையாள் எனவும்; துடியிடை என்பது, துடி போலும் இடையினை உடையாள் எனவும்; தகர ஞாழல் என்பது, தகரமும் ஞாழலும் கலந்து உண்டாகிய சாந்து எனவும் விரியும். இவைகள் முறையே வினை பண்பு உவமை உம்மை என்னும் தொகைகளின் அடியாகப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

தமிழிலக்கணத்தில் அன்மொழித் தொகை என்பது, ஒரு முதன்மையான இலக்கணச் செய்தியாகும். அன்மொழித் தொகைக்கும் ஆகுபெயர்க்கும் பெரிதும் இயைபு உண்டு. தம் பொருள் உணர்த்தாது, பிறிது பொருள் உணர்த்துதல் வகையான் இரண்டும் தம்முள் ஒக்கும். இது பற்றிச் சிலர் இடைத் தெரிவு இன்றி ஒன்றை மற்றொன்றாகப் பிறழக் கருதி மயங்குவதும் உண்டு. ஆகுபெயர் அன்மொழித் தொகை பற்றி அரசஞ் சண்முகனார், யாழ்ப்பாணம் கணேச அய்யர், அம்பலவாண நாவலர், மறைமலை அடிகள் போன்ற புலவர் பெருமக்களிடையில் ஒரு பெரும் ஆராய்ச்சிச் சொற்போரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செந்தமிழ் வெளியீடு என்னும் இதழில் இற்றைக்கு ஏறத்தாழ ஐம்பது—அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்துள்ளது.

''அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கணங்குழை மாதர்கொல் மாலும் என் நெஞ்சு'' என்னும் திருக்குறளிற் பயின்றுள்ள, 'கணங்குழை' என்பதனைப் பரிமேலழகர் ஆகு பெயர் என்றனர். சிவஞான முனிவர் 'இலக்கண விளக்கச் சூறாவளியில் அதனை மறுத்து 'அன்மொழித் தொகை' என்பர். ''பாயினமேகலை (திருக்கோவையார்:282) என்னும் சொற்கள் ஒரு சொல் நீர்மைப் படுதலின், ஆகுபெயர் எனப்படும்'' என்பர் பேராசிரியர். ''பெயரெச்சம் நிறுத்த சொல்லும் குறித்து வரு கிளவியும் ஆகப் புணர்ந்தது நோக்காமையின் அவ்வாறு உரைத்தார்'' எனப் பிரயோக விவேகநூல் (சமாச படலம்:7) ஆசிரியர், அதனை மறுத்துக் கூறி அன்மொழித் தொகையாகக் கொள்வர். ''அருந்திறல் பிரிந்த அயோத்தி போல'' (13:65) என்னும் சிலப்பதிகார வரியில், 'அருந்திறல்' என்பது அன்மொழித்

தொகையாகு பெயர் என்றனர் அடியார்க்கு நல்லார். இவ்வாற்ருல் ஆகு பெயர் அன் மொழித்தொகைகள் பற்றி,அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் பல இருத்தல் உண ரலாம்.

எனினும், இரண்டினையும், பொதுவாகப்பின் வருமாறு பகுத்துணர்ந்து கொள்ளலாம். ஆகு பெயர் நியதிப் பெயராகவே வரும். அன் மொழித்தொகையோ,செய்யுள் இயற்றுவோன் ஒருவரை வியப்பு முதலியவற்ருல் தன் கூற்ரு யும் பிறர் கூற்ருயும் புனைந்துரைப்புழிப் போத ரும். ஆகுபெயர் ஒன்றன் பெயரான் அத னேடுஇயைபுபற்றிய பிறிதொன்றனை யுணர்த்தி ஒரு மொழிக்கண்ணதாக வரும். அன்மொழித் தொகையோ இயைபு வேண்டாத இருமொழி யும் தொக்க தொகையாற்றலாற் பிறிது பொருள் உணர்த்தி இருமொழிக் கண்ணதாக வரும். வேற்றுமை வினை பண்பு உவமை உம் மை என்னும் ஐவகைத் தொகைநிலைத் தொடர் மொழிகளின் புறத்தே, அவையல்லாத பிற மொழிகளாகிய உருபுகள் தொக வருவது அன் மொழித் தொகை எனப்படும் (தொல், சொல்: 418).

**சோணசயில மாலை :**

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ''சோண சயில மாலை'' என்னும் நூலில், 'அன்மொழித் தொகை' 'வேற்றுமைத் தொ கை' என்னும் இலக்கணக் குறியீடுகளை அழ குறச் சுட்டுகின்ருர்.

எழுபசும் புல்லும் புனலும்எவ் விடத்தும்
இருந்திட, நினைத்த அவ் விடத்தே
விழைவொடு வந்து தோன்றும் நீ இருப்ப,
வீணில்மா னிடர்பிறந் துழல்வார்!
மொழிதரு கருணை மலைஎனும் பெயர் அன்
மொழிஒரீஇ, வேற்றுமைத் தொகை
யைத்
தழுவுற நின்று வளர்ந்திடும் சோண
சயிலனே! கயிலைநா யகனே!

இறைவன் கருணையுடையவன். மலை போன்ற பெருமையுடையவன். ஆதலின் அவனைக் 'கருணை மலை' எனச் சான் ருேர்கள் போற்றுவர். ''மன்னிய திருவருள் மலையே போற்றி'' என்று மணிவாசகர் போற் றுதல் காணலாம். சோண சயிலம் என்பது திருவண்ணுமலைக்குப் பெயர். சோணம்—சிவப்பு; சயிலம்—மலை. அருணுசலம் என்ப தற்கும் அதுவே பொருள். அருணம்—சிவப்பு. அசலம்—மலை. இறைவனே ஒரு காலத்தில் அம் மலையாகத் தோன்றி யருளினுன். அதற்கு முன்பெல்லாம் இறைவனைப் பொதுவாகக் குறிக்கும் 'கருணை மலை' என்னும் தொடர், 'கருணையாகிய மலையை யுடையவன்' எனப் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகையாக வேனும், 'மலை போலும் கருணை யுடையவன்' என உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாக வேனும், பொருள் கொள்ளக் கிடந்தது. இறைவனுக்குரிய பேரும் நாடும் ஊரும் ஆறும் மலையும் முதலியனவாகக் கூறப் பெறும் பொருள்களுள், கருணை என்பது மலை யாக உருவகம் செய்து போற்றப்படும். திரு வாசகத்திற் கீர்த்தித் திருவகவல், திருத்தசாங் கம் என்பன காண்க.

**முடிவுரை :**

ஆனுல் அத்தொடரே 'கருணையை யுடைய மலை' என இரண்டாம் வேற்றுமைத் தொகை யாகப் பொருள் படுமாறு, இறைவன் ஒரு காலத்தில் சோண சயிலம் ஆகத் தோன்றி யருளினுன் எனத் திருவண்ணுமலையின் சிறப்பை விளக்கியருள்கின்ருர், சிவப்பிரகாசர்! பிற மலைகளைப் போல இல்லாமல், இறைவனே இங்கு மலையாகத் திருவுருவம் கொண்டு திகழ் கின்ருன் என்பது கருத்து. தமது கற்பனைத் திறனுல் தாம் கூறக் கருதும் கருத்தினை இலக் கணக் குறியீடுகள் கொண்டு விளக்கியருளிய சிவப்பிரகாசரின் சிறப்பும், அவரால் இங்ஙனம் புகழ்ந்து போற்றப் பெற்ற திருவண்ணுமலை யின் சிறப்பும், நம்மனேர் பெரிதும் வியந்து பணிந்து மகிழ்தற்குரியனவாகும்.

—ஆசிரியர்.

# விடை தெரியுமா?

1. 'இந்து' என்னும் சொல்லின் வரலாறும், பொருளும் பற்றிச் சிறு குறிப்புத் தருக.

2. 'உபநிஷத்' என்னும் சொல்லின் பொருள் யாது? உபநிடதங்களின் சிறப்பையும், பெயர்களையும் குறிப்பிடுக.

3. ''முப்பத்து முக்கோடி தேவர்கள்'' என்போர் யார்?

4. ''பதினெண் கணங்கள்'' எனப்படுவன யாவை?

5. ஆணவ மலம் என்பது யாது? அதன் செயல் வகைகள் என்னென்ன?

6. இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள சம்பந்தங்கள் எத்தனை வகைப்படும்?

7. நம்மாழ்வார் அவயவி யாகவும், ஏனைய ஆழ்வார்கள் அவயவங்களாகவும் கூறப் படும் முறையினைக் குறிப்பிடுக.

8. ஆசாரியர்கள் எத்தனை வகைப்படுவர்? விவரிக்க.

9. ஸ்ரீ ராமாயணத்திற்கு ஸ்வாபதேசார்த்தம் போல முதலியாண்டான் பணித்த சில வார்த்தைகள் யாவை?

10. ''பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று......''
எனவரும் திருப்பாவை வரிகளின் சிறப்பு நுண்பொருளைப் புலப்படுத்துக.

—(விடை மறுபுறம் காண்க)

# விடை விளக்கம்

(1) ஒரு சொல்லின் பொருளை விளக்குதலில் பொதுவாக இருவகை முறைகள் உண்டு. அவைகள் முறையே: உண்மை கூறல், பொருந்தக் கூறல் எனலாம். பாரசிகர்கள், கிரேக்கர்கள் முதலிய பிற நாட்டார், சிந்து நதியையும் அதனைச் சார்ந்த நிலப் பகுதியையும் (Indus, India, Hindu) இந்து என்று வழங்கி வந்தனர் * அதுவே பின்னர்ப் பாரத தேசம் முழுமைக்கும், அதன் கண் வாழும் மக்கள் தொகுதியினர்க்கும் அவர்களின் பழக்க வழக்கம் பண்பாடு சமயம் ஆகிய வற்றிற்கும் நாளடைவில் வழங்குவதாயிற்று. முதலில் நிலப் பரப்பைக் குறிக்கும் பெயராகவே இருந்த இந்து என்னும் சொல், இந்தியா என வழங்கப்படும் நம் பாரத நாடு முழுவதற்கும் பொதுவாக உரிய சமயப் பண்பாட்டு நெறியினைக் குறிப்பதாக விளங்கி வருகின்றது. இச் சொல் அண்மைக் காலத்திலேயே பெருவழக்குப் பெற்றது எனினும், இதனால் குறிக்கப்படும் சமய நெறி தொன்மை வாய்ந்ததாகும் (The name is recent, but the thing is ancient). இது உண்மை கூறல் என்னும் உத்தியாகிய நூல் வழக்காறு.

இனி, பொருந்தக் கூறல் என்னும் உத்தி வகையினால், இந்து என்னும் சொல்லுக்கு அறிஞர்கள் பல புதிய பொருள் விளக்கங்களையும் அறிவிற்குப் பொருந்துமாறு ஆராய்ந்து கூறுவ துண்டு. அம்முறையில் பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(அ) இந்து என்னும் சொல் நம்முடைய பழைய வேதாகம உபநிடதங்கள் முதலியவற்றில் யாண்டும் வரப் பெறவில்லை. ஆயினும், இன்று நம் பாரத தேசத்திலுள்ள சைவம் வைணவம் சாக்தம் சமணம் புத்தம் வேதாந்தம் சித்தாந்தம் முதலிய பல வேறு சமய நெறிகளையும் ஒன்று சேர்த்துத் தொகுத்துப் பொதுவாகக் குறிப்பிடுதற்குரிய ஒரு குழூஉப் பெயராக (collective noun) இந்து மதம் என்னும் சொல் பெரு வழக்காக நிலவி வருகிறது. ஆதலின் பொருந்தக் கூறல் என்னும் உத்தி பற்றி, அறிஞர்கள் இந்து மதம் என்பதற்குப் பின்வருமாறு பொருள் விளக்கங்கள் கூறுவர்.

(1) ''ஹிம்ஸாயாம் தூ யதே ய: ஸ: ஹிந்து
இத்யபி தீயதே''.

என்றபடி (ஹிம்—ஹிம்சையில், து—துக்கிக்கிறவன்; ஹிந்து) ''ஓர் உயிர் எந்தக் காரணத்தி னாலாவது வருந்துவதாய் இருந்தால், அதற்காக மிகவும் துக்கித்து, அவ்வுயிர்க்கு நேர்ந்த துன்பத்தைத் தனக்கு வந்ததாகக் கருதி, அதனை அகற்றுவதற்கு எவன் ஒருவன் பணி புரிகின் றானோ, அவனே ஹிந்து ஆவான்; அவனது சமயமே இந்து மதம்'' என்று அறிஞர்கள் சிலர் இதற்குப் பொருள் கூறுவர்.

(ஆ) இனி, மற்றும் சில அறிஞர்கள் இதற்கு வேறொரு பொருளும் கூறுவர். 'சப்த கல்பதரு' என்னும் புகழ் பெற்ற வடமொழி இலக்கண நூல், 'ஹேயம் நிந்தாதி இதி ஹிந்து' எனக் கூறுதலால், நினைவிலும் சொல்லிலும் செயலிலும் எத்தகைய இழிவும் பிழையும் நேராமல் கருத்தாகப் புறக்கணித்து ஒழுகுபவன் எவனோ, அவனே இந்து; அவனுடைய மதமே இந்து மதம் என்பது மற்றொரு வகை விளக்கம் †

இவ்விருவகைப் பொருள்களும், இந்து மதத்தைப் பின்பற்றி ஒழுகும் மக்களாகிய நாம் அனைவரும் கடைப்பிடிப்பதற்குரிய உயரிய சிறந்த குறிக்கோளை உணர்த்துவனவாகத் திகழ் கின்றன. ஆதலின் இப்பொருள் விளக்கங்கள் நாம் பெரிதும் போற்றிப் பாராட்டுவதற் குரியனவாகும்.

---

* The Hindu Civilization is so called, since its original founders or earliest followers occupied the territory drained by the Sindhu (The Indus) river system corresponding to the North-West Frontier province and the Punjab. The people on the Indian side of the Sindhu were called Hindu by the Persian and the latter western invaders.

The term 'Hindu' had originally a territorial and not a credal significance. It implied residence in a well-defined geographical area.

—*Dr. S. Radhakrishnan.*

† *Sabdha Kalpa Tharu*, the standard *Sanskrit* Dictionary, derives the word Hindu as '*heyam Nindati Iti Hindu*'. Is derivation makes it clear that the word " Hindu is so worded because, It scorns whatsoever is ignoble or unworthy in thought, speech and action ......................."

—Sri K. *Panchapagesan.*

''இந்து மதத்தின் மூலமாகவே தெளிவும் இன்பமும் அமைதியும் அடைய முயலுதலைத் தவிர, இவ்வுலகில் எனக்கு வேறு பிறிதொரு விருப்பமும் இல்லை'' எனக் காந்தியடிகள் கூறியருளி யுள்ளார் என்பது இங்கு நாம் அறிந்து இன்புறத்தக்கது. அன்னிபெசன்ட் அம்மையார், ஆல்டஸ் அக்ஸ்லி போன்ற எத்தனையோ பல அயல் நாட்டுப் பேரறிஞர்கள், இந்து மதத்தையும் அதன் உயர்ந்த தத்துவக் கோட்பாடுகளையும் வியந்து போற்றிப் பாராட்டியுள்ளனர் என்பதும், நாம் பெரிதும் சிந்தித்து மகிழ்தற்குரியது.

(2) 'உபநிஷத்' என்னும் சொல் உப—நி—ஷத் என்னும் முப்பகுதிகளைக் கொண்டது. உப—அருகில்; நி—பக்தியுடன்; ஷத்—உட்கார்தல். சிறந்த ஞானசிரியர் ஒருவருடைய அருகில், அவருடைய திருவடியின்கீழ் அமர்ந்து பக்தியுடன் பணிந்து கேட்டுக் கொள்ளத்தக்கவை யாதலின், இந்நூல்களுக்கு உபநிஷத் (உபநிஷதம், உபநிடதம்) எனப் பெயர் வழங்கலாயிற்று. மாணவனின் தகுதியறிந்து ஞானசிரியரால் மறை பொருளாக அருகிருத்தி உபதேசிக்கப் பெற்றவை யாகலின், உபநிஷத் என்னும் சொல்லுக்கு இரகசியம், குஹ்யம் (மறைவு, மறைக்கத் தக்கது) என்னும் பொருளும் நாளடைவில் ஏற்படுவதாயிற்று* சங்கரர் முதலிய பேருரை யாளர்கள் அறியாமையை அழிப்பது; பிரமத்தின்பால் அழைத்துச் செல்வது எனவும், உப நிஷத் என்னும் சொல்லுக்குப் பொருள் விளக்குவர். ஒருவகையில் இவ்வாறெல்லாம் கூறுவது வலிந்துரையும் நலிந்துரையுமே ஆகுமாயினும், உபநிடதங்களின் இயல்பையும் குறிக்கோளையும், இவைகள் உணர்த்துகின்றன எனலாம். 'ஷோபனேர்' (Schopanauer) முதலிய மேலை நாட்டு அறிஞர்கள் பலர், உபநிடதங்களின் உயரிய கருத்துக்களைப் போற்றிப் பாராட்டி வியந்துள்ளனர். ''இந்து மதத்தின் பிற எல்லாப் பிரமாண நூல்களும் அழிந்து போய், ஈசாவாஸ்ய உபநிடதத்தின் முதற் செய்யுள் ஒன்று மட்டுமே இந்து மக்களின் நினைவில் எஞ்சி நிற்பினும், அஃதொன்றனை வேயே இந்து மதம் என்றென்றும் நிலைபெற்று வாழ்ந்து வரும்'' எனக் காந்தியடிகள், ஈசா வாஸ்ய உபநிடதத்தினைப் பெரிதும் வியந்து போற்றி யருளியுள்ளார். உபநிஷதங்கள் என்னும் பெயரால் விளங்கி வருவன ஏறத்தாழ இருநூறுக்கு (200) மேற்பட்டனவாக உள்ளன. எனினும் பெரும்பாலும் உபநிடதங்கள் நூற்றெட்டு (108) என்று அறிஞர்கள் கூறுவர். இவைகளிலும் மிகவும் முதன்மை வாய்ந்தவை, சங்கரர் உரை வகுத்த பத்து (10) உபநிடதங்கள் மட்டுமே யாகும் என்பர். அவையாவன:

| | |
|---|---|
| 1. பிருக தாரண்யகம் | 6. கேனம் |
| 2. சாந்தோக்யம் | 7. ஈசம் |
| 3. தைத்திரீயம் | 8. கடம் |
| 4. ஐதரேயம் | 9. முண்டகம் |
| 5. கவுஷீதகி | 10. சுவேதாசுவதரம். |

பிருகதாரண்யகம் அசுவமேத யாகத்தின் நுண்பொருளை விளக்குவதும், சாந்தோக்யம் சோம யாகத்தின் பொருளை விவரிப்பதும் அறிந்து மகிழத் தக்கவை. மாண்டூக்கியம் பிரணவத்தின் பொருளைச் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் என்னும் நிலைகளாகக் குறிப்பிடுகின்றது. தைத்திரீயம், அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் ஆனந்தமயம் என்னும் ஐந்து கோசங்களின் இயல்பை விளக்குகின்றது. இறைவனின் அருளை யின்றி எவரும் வீடு பேறு அடைதல் இயலாது என விளக்கும் சுவேதாசுவதர உபநிடதத்தின் கருத்தினைக் கச்சி யப்ப சிவாசாரியரும், சிவஞான சுவாமிகளும் தமது நூல்களில் அழகுற அமைத்துப் பாடி யுள்ளனர்.

மானிடன் விசும்பைத் தோல்போற்
சுருட்டுதல் வல்லோன் ஆயின்
ஈனமில் சிவனைக் காணாது
இடும்பைதீர் வீடும் எய்தும்;
மானமார் சுருதி கூறும்
வழக்கிவை ஆத லாலே
யான்அமர் இறையைக் காணும்
உபாயமே அறிதல் வேண்டும்.

—காஞ்சிப் புராணம்.

* "The etymological meaning of the term Upanisad is 'to sit' (*sad*) close by (*Upa*), devotedly (*ni*)—thus indicating the manner in which the Upanisads were first learnt. Since the teaching is about the highest reality and therefore calls for competency in the student, in course of time the meaning 'secret' came to be attached to the term Upanisad (ef.) expressions like 'the secret teaching' (guhya adesah)' the supreme secret' (paramam guhyam).

The meaning given by commentators like *Sankara*, that the Upanisad is what 'destroys' ignorance or what 'leads' to Brahmam—though perhaps etymologically far-fetched, however, correctly defines the scope and aim of the Upanisads.'

—Prof. *T.M.P. Mahadevan.*

பரசிவன் உணர்ச்சி யின்றிப்
பல்லுயிர்த் தொகையும் என்றும்
விரவிய துயர்க்கீ றெய்தி
வீடுபேறு அடைதும் என்றல்,
உருவமில் விசும்பிற் றோலை
உரித்துடுப் பதற்கொப் பென்றே
பெருமறை பேசிற் றென்னில்
பின்னும்ஓர் சான்றும் உண்டோ?

—கந்த புராணம்.

''பிரியா நண்பினை உடைய இரு பறவைகள் ஒரே மரத்தில் இயைந்துள்ளன; அவற்றுள் ஒன்று இனிய பழத்தை உண்கின்றது; மற்றது உண்ணாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றது'' எனவரும் முண்டகோப நிடதக் கருத்து,

இருபருந்து உள; உடன்பிறந்து
உடன்வளர்ந்து இசைவு கூர்வன; அந்த
இரு பருந்துமாய் ஒருபெருந் திருமரம்
இயைந்தன; ஒருபோதே
ஒரு பருந்து அந்த ஓங்கிய திருமரத்து
உறுபயன் உவந்து உண்ணும்;
ஒரு பருந்து ஒன்றும் உண்டல் செல்லாது;
அதன் ஒளியும்நல் ஒளியாமே.

—பேரொளி விளக்கம்.

இந்த உடம்புறை சீவ பரங்கள்
எனப்படும் அன்னம்இரண்டு;
அந்த இரண்டினும் ஒன்று
வினைப்பயன் அங்கு நுகர்ந்திடுமாம்;
தொந்தம் அறும்பரம் ஒன்றும் உணாது;
சொலப்படு பேதமில் வான்
வந்த கடத்தின் அகப்படு
பேதம் எனப்படும் மாயையினால்.

—சொரூபானந்த சித்தி.

எனத் தமிழ் நூல்களில் பயின்று வந்திருத்தல், அறிந்து மகிழ்தற்குரியது. இவைகளால் உப நிடதங்களின் சிறப்பினை நாம் ஓரளவு இனிதுணரலாம்.

(3) முப்பத்து முக்கோடி தேவர்களை ''நால்வேறு இயற்கைப் பதினொரு மூவர்'' எனத் திருமுருகாற்றுப்படை குறிப்பிடும்.

| | | |
|---|---|---|
| 1. | ஆதித்தர் | 12 |
| 2. | உருத்திரர் | 11 |
| 3. | வசுக்கள் | 8 |
| 4. | மருத்துவர் | 2 |
| | | 33 |

(4) தேவ கணங்கள் பதினெட்டு என நூல்கள் கூறும். ''பிறைநுதல் வண்ணம் ஆகின்று; அப்பிறை பதினெண் கணனும் ஏத்தவும் படுமே'' என்பது புறநானூறு. இத்தேவ கணங்கள்

பதினெட்டையும், ''ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறிஇயர்'' எனத் திரு முருகாற்றுப்படை குறிப்பிடும். இப்பதினெண் கணங்களின் பெயர்களும் பின்வருமாறு:

1. தேவர்
2. அசுரர்
3. தைத்தியர்
4. கருடர்
5. கின்னரர்
6. கிம்புருடர்
7. இயக்கர்
8. விஞ்சையர்
9. இராக்கதர்
10. கந்தர்வர்
11. சித்தர்
12. சாரணர்
13. பூதர்
14. பைசாசர்
15. நாகர்
16. ஆகாய வாசிகள்
17. போக பூமியினர்
18. தாரா கணங்கள்

(5) ஆணவ மலம் என்பது கண்ணை மறைக்கும் இருள் போல, உயிர்களின் அறிவை மறைத்து நிற்பது. உயிர்களின் எல்லாவகைத் துன்பங்களுக்கும் மூல காரணமாக இருத்தலால், இதனை மூல மலம் என்பர். நெல்லுக்கு உமியும், செம்பிற்குக் களிம்பும் போல உயிர்களோடு விரவி உடனாக நிற்றலின், சகச மலம் எனவும், இது வழங்கப்படும். உயிர்களின் வியாபகத்தைத் தவிர்த்து அவற்றை அணுத்தன்மைப் படுத்தும் செயலால், இதற்கு ஆணவ மலம் எனப் பெயர் அமைந்தது. ஆணவ மலத்தின் செயல்கள் ஏழு வகைப்படும். அவையாவன: மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்பன.

1. மோகம்:—கொள்ளற்பாலது இது, நீக்கற்பாலது இது என நூல் முகத்தாற் உணர்ந்திருந்தும், உலக நுகர்ச்சிகளில் மயங்குதற்கு ஏதுவாக இருப்பது.

2. மதம்:—தன்னால் எய்தப்படும் பொருளைத் தானே மிகவும் கொண்டாடிப் புகழ்ந்து, இதனின் மேற்பட்ட பொருள் உலகத்தில் இல்லை என மதித்தற்கு ஏதுவாவது.

3. அராகம்:—அப் பொருளின்பால் மேன்மேலும் ஆசை மிகுதற்கு ஏதுவாவது.

4. கவலை:—ஊழ்வலியால் அப் பொருளை இழந்தவழிக் கண்ணீர் விட்டு அழுது பெரிதும் துன்பமுற்றுக் கவலுதற்கு ஏதுவாவது.

5. தாபம்:—பொருளை இழந்த கவலையால் உள் வெதும்பித் தபித்து வருந்துவதற்கு ஏதுவாவது.

6. வாட்டம்:—அங்ஙனம் தபித்து வெதும்புதலால் மூர்ச்சையுற்று உள்ளமும் உடம்பும் வாடுதற்கு ஏதுவாவது.

7. விசித்திரம்:—தான் பெற்ற உலக வாழ்க்கையை உன்னுந்தோறும் இவர் எமக்கு உண்மைச் சுற்றத்தார், இவள் எனக்கு உரிமை உடைய அழகிய மனைவி, ஆடை அணி பொன் முதலிய செல்வங்களில் யான்குறையிலேன், மனை கழனி முதலிய செல்வங்களும் நிரம்பப் பெற்றுள்ளேன். ஆதலால் யான் இனிப் பெறக்கடவது என்னை? என்னின் மிக்கார் யார்? எனப் பலவேறு வகைப்படச் சிந்தை செய்து செருக்கு உறுதற்கு ஏதுவாவது.

(6) இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள சம்பந்தம் ஒன்பது வகைப்படும் என வைணவ நூல்கள் கூறும். அவையாவன:—

1. பிதா புத்திர சம்பந்தம் —தந்தை மகன் தொடர்பு
2. ரக்ஷக ரக்ஷ்ய சம்பந்தம் —காப்பாற்றுபவன் காப்பாற்றப்படுவது ஆகிய தொடர்பு
3. சேஷ சேஷி சம்பந்தம் —அடிமை ஆண்டான் தொடர்பு
4. பர்த்ரு பார்யா சம்பந்தம் —கணவன் மனைவி தொடர்பு
5. ஞேய ஞாத்ரு சம்பந்தம் —அறியப்படுவது அறிபவன் ஆகிய தொடர்பு
6. சுவ சுவாமி சம்பந்தம் —உடைமை உடையவன் தொடர்பு
7. ஆதார ஆதேய சம்பந்தம் —தாங்குவது தாங்கப்படுவதாகிய தொடர்பு
8. சரீர சரீரீ சம்பந்தம் —உடலும் உயிருமாகிய தொடர்பு
9. போக்தா போக்ய சம்பந்தம் —அநுபவிப்பவன் அநுபவிக்கப்படுவதாகிய தொடர்பு

(7) நம்மாழ்வாரின் தனிப்பெரும் சிறப்பை விளக்குதற்கு, அவரை அவயவி யாகவும், ஏனைய ஆழ்வார்களை அவயவங்களாகவும் உருவகம் செய்து வைண்வப் பெரியோர்கள் கூறுவர். அம்முறை வருமாறு:

1. பூதத்தாழ்வார் —தலை
2. பொய்கை யாழ்வார் } —இரு கண்கள்
3. பேயாழ்வார் }
4. பெரியாழ்வார் —முகம்
5. திருமழிசையாழ்வார் —கழுத்து
6. குலசேகராழ்வார் } —இரு கைகள்
7. திருப்பாணாழ்வார் }
8. தொண்டரடிப் பொடியாழ்வார் —மார்பு
9. திருமங்கையாழ்வார் —கொப்பூழ்
10. மதுரகவியாழ்வார் —திருவடி.

(8) ஆசாரியர்கள், அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்கள் என்றும், க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர்கள் என்றும் பொதுவாக இருவகைப்படுவர். சிஷ்யர்கள் பலகால் துவண்டு வேண்ட, அதனால் அநுக்ரஹிப்பவர்கள் அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்கள் ஆவர். சிஷ்யப்ரார்த்தனையைச் சிறிதும் எதிர்பாராமல் தம்முடைய இயற்கை இன்னருளால் தாமாகக் கனிந்து, 'பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான்' என்கிறபடி தம் பேறாக அநுக்ரஹித்தருள்பவர்கள் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர்கள். திருக்கோட்டியூர் நம்பிகள் அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர் என்றும், ஸ்ரீ இராமாநுஜர் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர் என்றும் கூறலாம்.

(9) ஸ்ரீ ராமாயணத்திற்கு ஸ்வாபதேசார்த்தம் போல, முதலியாண்டான் பணித்த சில வார்த்தைகள் வருமாறு:

1. பிராட்டிக்குச் சிறையிருப்பு இன்னாததாக இருந்தாற் போலவே, ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கை இன்னாததாக இருக்கும்.

2. பிராட்டி, இலக்குவன்பால் அபசாரப்பட்டு உடனே இராமபிரானைப் பிரிய நேர்ந்தது; அதுபோல பாகவத அபசாரம் சேதனர்களுக்குத் திருவடியின் தொடர்பை இழந்துவிடச் செய்யும்.

3. பிராட்டிக்கு அசோகவனம் போல, சேதனர்களுக்குப் ப்ரக்ருதி சம்பந்தமான இவ்வுடம்பு விளங்கும்.

4. பிராட்டிக்கு அரக்கிகளின் தொடர்பு போலவே, சேதனர்களுக்கு மனைவி மக்களின் தொடர்பும் ஆகும்.

5. பிராட்டிக்கு மாரீசனுகிய மாய மான் போல, சேதனர்களுக்கு இவ்வுலகப் பொருள் களின் நுகர்ச்சி இருக்கும்.

6. பிராட்டிக்கு ஸ்ரீ ஆஞ்சநேயர் நேர்பட்டாற் போன்றது, சேதனர்களுக்கு ஆசார்யன் நேர்படுதல்.

7. பிராட்டிக்கு ஸ்ரீ ஆஞ்சநேயர் புகழ்ந்துரைத்த இராமபிரானின் பண்புகளைப் போன்றவை, சேதனர்களுக்கு ஆசார்யன் உபதேசிக்கும் கடவுட் பண்புகள்.

8. பிராட்டிக்கு ஸ்ரீ ஆஞ்சநேயர் அடையாளங்கள் கூறிக் கணையாழி அளித்தது போன்றது, சேதனர்களுக்கு இறை அருளை விளக்கி ஆசார்யன் செய்தருளும் திருமந்திர உபதேசம்.

9. பிராட்டி ஸ்ரீ ஆஞ்சநேயர்க்குச் சூடாமணி கொடுத்தருளினுற் போன்றது, ஆசார்யன் விஷயத்தில் 'தலை யல்லால் கைம்மாறு இலேனே' என்று சேதனர்கள் இருக்கும் நிலை.

10. பிராட்டிக்குத் திரிசடையின் நட்பும் பேச்சும் பெருந்துணையாய் இருந்தது போல, பாகவதர்களின் நட்பும் அவர்களின் திருமொழிகளும் சேதனர்களுக்குப் பெருந்துணையாக விளங்கும்.

(10) ''பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழம் உறங்கிற்று......''

எனவரும் திருப்பாவைப் பாடலுக்குப் பின்வருமாறு சிறப்பு நுண் பொருள் கொள்ளப் படும்.

| | | |
|---|---|---|
| 1. | பிள்ளைகள் | —அபிநவ பாகதவர்கள் |
| 2. | பாவைக்களம் | —காலட்சேப கூடம் |
| 3. | வெள்ளி எழுதல் | —பரிசுத்தமான ஞானம் தலை யெடுத்தல் |
| 4. | வியாழம் உறங்குதல் | —அஞ்ஞானம் தலைமடிதல் |
| 5. | புட்கள் சிலம்புதல் | —ஏனைய பாகவதர்களும் விரைந்து முற்படுதல் |
| 6. | நீராடுதல் | —பகவதனுபவம் பண்ணுதல். |

இத்திருப்பாவைப் பாடலில் வரும் 'வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று' என்னும் வரி, மிகவும் சிறப்பு வாய்ந்ததொன்ருகும். இவ்வரியின் துணையைக் கொண்டு மகாவித்துவான் திரு. மு. ராகவையங்கார், திவான்பகதூர் திரு. எல். டி. சுவாமி கண்ணுப்பிள்ளை போன்ற பேரறிஞர்கள், வானநூல் (Astronomy) ஆராய்ச்சியின் துணை கொண்டு பல்வகைகளில் கணக் கிட்டு, ஸ்ரீ ஆண்டாளின் காலத்தை ஆராய்ச்சி முறையில் வரையறை செய்ய முயன்றுள்ளனர். வெள்ளி எழ வியாழம் உறங்கிய காலங்கள் நான்கு ஆதல் வேண்டும் என்று, அவர்கள் கணக் கிட்டுக் காட்டியுள்ளனர்.

| நூற்ருண்டு | கி.பி. வருடம் | மாதந் தேதி | வியா. வெ. தூர அளவு | டிகிரி | மணி |
|---|---|---|---|---|---|
| 7 | 600 | நவம்பர் | 272 | 171 | 3.20 |
| 8 | 731 | டிசம்பர் | 182 | 177 | 3.50 |
| 9 | 885 | நவம்பர் | 252 | 180 | 5.08 |
| | 886 | டிசம்பர் | 142 | 165 | 5.20 |

இவ்வான நூல் ஆராய்ச்சிக் கணக்கின்படி ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் நிலவுலகில் வாழ்ந்திருந்து திருப்பாவை பாடிய காலம் கி.பி. 885 எனக் கூறலாம். இவ்வாராய்ச்சிக்குத் துணை புரிவதனுலும் 'வெள்ளி யெழுந்து வியாழம் உறங்கிற்று' என்னும் தொடர் மிகவும் சிறப்புடையது என்று கூறலாம்.

—ஆசிரியர்.

# எல்லாம் சிவமயம்

(பாலகவி. வயிநாகரம். வே. இராமநாதன் செட்டியார்

(தத்புருஷதேசிகர், தேவகோட்டை)

உலகத்துப் பொருள்கள், சித்து, அசித்து என்னும் இரண்டு வகையுள் அடங்குவன. அசித்தைச் சடமென்றுங் கூறுவார்கள். சித்து அறிவுடையது. சடம் அறிவில்லாதது. அறிவுடைய சித்து, தானே தொழிற்படும் ஆற்றல் உடையது. அறிவில்லாத சடம், அறிவுடைய சித்திஞல் தொழிற்படுத்தப் பெற்ருலன்றித் தானே தொழிற்படும் ஆற்றல் உடையதன்று. சித்தாந்த சைவர்கள் கூறும் அநாதி நித்தியப் பொருள்களாகிய பதி, பசு, பாசம் என்னும் மூன்றில், பாசம் சடம். பசுவும், பதியும் சித்துக்கள். சித்து என்ற வகையில் ஒருபடித்தாயுள்ள பசுவும் பதியும் அறிவு வேற்றுமையால் தனித்தனித் தன்மைகளை உடையனவாயிருக்கின்றன. பதியாகிய சித்து எதையும் யாரும் அறிவிக்க வேண்டாது எல்லாவற்றையும் எந்த உதவியுமின்றித் தானே அறியும் இயற்கையறிவை உடையது. பசுவாகிய சித்து எந்த ஒன்றையும் யாராயினும் அறிவித்தாலன்றி அறிய முடியாத செயற்கை அறிவை உடையது. இதனை ''அறிவிக்கப் படுஞ்சித்து மிவன்ருன், அவன்ருனே அறியுஞ் சித்து'' என்று சிவஞான சித்தியார் அறிவிக்கின்றது.

அறிவித்தாலும் அறியாத பாசத்தின் தன்மையை அறிவிக்காத போதும், அறிவிக்காமலே அறிகின்ற பதியின் தன்மையை அறிவித்த போதும் அடைகின்ற படியால், உயிரைச் ''சித்த சித்து'' என்று கூறுவதுண்டு. உயிரறிவிற்குப் பொருள்களாயிருப்பன பாசமும், பசுவும், பதியுமாகிய மூன்றுமேயாம். இது பற்றியே உயிரறிவைப் பாச அறிவு, பசு அறிவு, பதியறிவு என மூன்று வகைப் படுத்தினர் ஆன்ருேர். அறிவித்தாலன்றி ஒன்றையும்அறிய மாட்டாத உயிருக்கு அதன் மேல் வைத்த பெருங்கருணையால் ஆண்டவன் அதனேடு ஒன்ருகவும் உடனுகவும் ஒருங்கியைந்து நின்று பொருள்களை அறிவிப்பான். அதுவும், உயிர்களின் பக்குவ நிலைகளுக்கேற்பவும் அறியப்படும் பொருள்களின் தகுதிகளுக்கேற்பவும் அவனுல் நிகழ்த்தப்பெறும்.

பதியாகிய இயற்கையறிவினன் பசுவாகிய செயற்கையறிவினனுக்குப் பாசமாகிய சடப் பொருள்களையோ, பசுவும் பதியுமாகிய சித்துப் பொருள்களையோ அறிவிக்கும் தன்மை பல திறப்பட இருக்கும். காண்பானும், காட்டுவானும், காட்சிப் பொருளும் ஒருங்கியைந்து நின்ருலன்றிக் காட்சி நிகழமாட்டாது. உலகத்துப் பொருள்களைக் காண்பதற்குக் காண்பதாகிய கண்ணிந்திரியத்தின் ஒளியும், காட்டுவதாகியகதிரவனதுஒளியும் வேண்டுமாறுபோல, உயிர்கள் பொருள்களை அறிவதற்கு அறிவதாகிய உயிரறிவும், அறிவிப்பதாகிய தலைவனறிவும் வேண்டப்படுவனவாகும்.

இங்ஙனம் அறிகின்ற பசுவுடனும், அறியப் பெறுகின்ற பசு, பாசங்களுடனும் என்றும் நீங்காது நிலைத்து நிற்கின்ற பதியினது பெருந்தன்மையையே ''சர்வ வியாபகம்'' என்று ஞான நூல்கள் கூறுகின்றன. திருவாசகத்தில், ''ஊனுருடல் புகுந்தான் உயிர் கலந்தான்'' என்று சிவபெருமானது சர்வ வியாபகத் தன்மை உணர்த்தப் பெறுகின்றது. ''எல்லாஞ் சிவனென்ன நின்ருய்போற்றி, எரி சுடராய் நின்ற இறைவா போற்றி'' என்பது தாண்டகவேந்தர் திருவாக்கு. ''சர்வம் சிவமயம் ஜகத்'' என்ற வடமொழிப் பிரமாணமும் இங்கே நினைவு கூரத் தக்கதாகும்.

சித்தும் சடமுமாகிய அனைத்துப் பொருள்களிலும் சிவ பரம்பொருளின் நிறைவுண்மையை மெய்ஞ்ஞானிகள் தெளிவாக உணருகின்ருர்கள். எல்லாவற்றிற்கும் தாரகமாயிருக்கும் சிவத்தை அவ் வெல்லாமாக அவர்கள் காணுகின்ருர்கள். தாரகமென்னுஞ் சொல் தாங்குவது என்னும் பொருளை யுடையது. சிவ சகஸ்ர நாமாவளியில் ''தாரகாய நம'' என்பதும் ஒன்று. சடப் பொருள்களில் நிறைந்து நின்று அவற்றிற்குத் தாரகமாய்ச் சிவபெருமான் விளங்குவதைத் திருமூல தேவ நாயனுர் திருமந்திரக் கடவுள் வாழ்த்து, பத்தாவது திருப்பாடலில் உரைத்தருளுகிருர். அத் திருப்பாடல்,

தானே இருநிலம் தாங்கிவிண் ணாய்நிற்கும்
தானே சுடுமங்கி ஞாயிறும் திங்களும்
தானே மழைபொழி தையலு மாய்நிற்கும்
தானே தடவரை தண்கடல் ஆமே

என்பதாகும்.

காட்சிப் பொருள்களுள், பெரும் பெருமையை உடையது நிலம். மிக நுண்மையையுடையதுவெளி. இவற்றின் இடைப்பட்டுநிற்பன நீரும் நெருப்பும் வளியுமாகும். இவ்வைந்தையும் உடன்படுத்தி ஐம்பூதங்கள் என்று நாம் சொல்லுவோம். பருமைப் பூதமாகிய நிலத்திலிருந்து அதி நுண்மைப் பூதமாகிய வெளி வரையுள்ள ஐந்து சடப் பொருள்களும் இடையீடின்றித் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றின் தொழிற்பாடு இவற்றோடு ஒருங்கியைந்து நிற்கின்ற இறைவனது தொடர்பினாலேயே நிகழ்வதாகும்.

காணப் பெறுகின்ற பெரிய பரப்புடைய நிலம், நீரினால் தாங்கப் பெறுவதும், அது நெருப்பினால் தாங்கப் பெறுவதும், அது காற்றினால் தாங்கப் பெறுவதும், அது வெளியினால் தாங்கப் பெறுவதுமாகிய உண்மை காட்சி கருதல், உரை ஆகிய அளவைகளால் அறியப் பெறுவதாகும். ஐம்பெரும் பூதங்களில்ஒன்றை ஒன்று தாங்க இறுதியதாகிய வெளியே ஏனைப் பூதங்கள் நான்கையும் தாங்கும் இயல்புடையது என்னும் பேருண்மையை நினைவு படுத்தி, அங்ஙனம் முன்னைய நான்கு பூதங்களிலும் வெளியாகிய பூதத்திலும், நிறைந்தும் மறைந்தும் நின்று தாங்குபவன் சிவபெருமானே என்பதை இத்திருப்பாடலின் முதல் வரியால் ஆசிரியர் உணர்த்தியருளினார்.

பிரகிருதியிலிருந்து தோன்றிய பூதங்களின் சேர்க்கையால் வந்த உடம்பு கொண்டு வாழ்கின்ற உயிர்களின் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை, அவ்வுடம்பைத் தோற்றுவித்த பூதங்களின் மூலமாகவே இறைவன் வழங்கியருளுகின்றான். ஐம்பெரும் பூதங்களால் நமக்குக் கிடைத்து வருகின்ற உதவிகளே நாம் இந்நிலவுலகத்தில் வாழ்ந்திருப்பதற்கு ஆதாரமானவை. இதனை அறிவுடையார் எவரும் மறுக்க மாட்டார். ஆனால் பூதங்களை இயக்கும் கடவுட் பொருளைப் பற்றி நினைவு கூர்பவர் இக்காலத்தில் மிக மிக அரியராயினர். அதனாலேயே அளவு கடந்த மனித முயற்சியிலும் கூடப் பயன் கிட்டாது போய்விடுகிறது. அறிவற்றதும்—பேராற்றலையுடையதுமாகிய பூதப் பொருள்களைச் சிற்றறிவும்—சிறிய ஆற்றலும் படைத்த மனிதன் வசப்படுத்த முடியாதென்பதும் இத் திருப்பாடலின் முதல் வரியிலிருந்து நாம் உணர வேண்டியனவாகும்.

இனி வாழ்க்கைக்கு இன்றியமையாத சூடு, ஒளி, குளிர்ச்சி ஆகியவற்றை வழங்குகின்ற தீ, கதிரவன், திங்கள் ஆகிய மூன்றும் சிவபெருமானே என்பதும், மழையைப் பொழிவிக்கின்ற அருட் சத்தி அவனே என்பதும் இரண்டாவது மூன்றாவது வரிகளில் உணர்த்தப் பெறுகின்றன. ''நாள் தொறும், அருக்கனிற் சோதி அமைத்தோன் திருத்தகு, மதியில் தண்மை வைத்தோன் திண்டிறல், தீயில் வெம்மை செய்தோன்'' என்னும் திருவாசகப் பகுதி அருக்கனில் உள்ள ஒளியும் திங்களில் உள்ள தண்மையும் தீயில் உள்ள வெம்மையும் சிவபெருமானால் அமைந்தன என்பதை அறிவிக்கின்றது.

முதல் வரியில் பஞ்ச பூதங்களாகிய பொருள்களாக இறைவன் இருக்கின்றானென்பதை உணர்த்திய ஆசிரியர், இரண்டாவது வரியில் பொருள்களின் குணங்களாகவும் அவன் இருக்கின்றானென்னும் உண்மையைப் புலப்படுத்தியருளினார். இது, தீயின் குணமான சூட்டை முன் வைத்துக் காட்டுவதனால் உணரக் கிடக்கின்றது. வெப்ப—தட்பங்களும் ஒளியுமாகிய மூன்றும் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதன என நாமறிவோம். எனவே, அவற்றை வழங்குகின்ற இறைவன் உயிர்களுடன் கொண்டுள்ள தொடர்பும் இதனால் நன்கு விளங்கும். குணிகளாகிய எல்லாப் பொருள்களும் குணங்களாகிய எல்லாப் பொருள்களின் தன்மைகளும் சிவமயமானவையே என்பது முதலிரண்டு வரிகளால் அறியக் கிடப்பதாகும்.

சிவபெருமான் உயிர்களுக்குச் செய்து வரும் உதவிகளில் தலையானது மழை பெய்விப்பது. இதனாலேயே மழையைச் சிவசக்தி என்று பெரியோர் பாராட்டினர். ''கடவுளது ஆணையால் உலகமும் அதற்கு உறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழை'' என்று பரிமேலழகரும், ''வான் சிறப்பு கடவுட் செய்கைத்து'' என்று மணக்குடவரும் கூறுவா. நீரையின்றி உலகியல் அமையாது. வானை

யின்றி அந் நீரொழுக்கு அமையாது என்னும் பொருளையுடைய,

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

என்னும் திருக்குறள் மழைப் பெயலின் இன்றி யமையாமையையும், அது திருவருள் நலத்தால் பெறத் தக்கதென்பதையும் அறிவிக்கின்றது.

சிவசக்தி வடிவமாயிருந்து உயிர்களுக்குப் பேருதவி செய்து வருகின்ற மழையைச் சிவ சத்தியாகவே கொண்டு போற்றுவது பழந்தமிழ் நூல்கள் பலவற்றிற் காணப் பெறுவதாகும். அந்த சிவசக்தி, சிவத்தின் வேறல்லாதவளாத லின், ''தானே மழை பொழி தையலுமாய் நிற்கும்'' என மழைப் பெயல், சிவசத்தி, சிவம் ஆகிய மூன்றையும் ஒன்ருகக் கண்டுரைத் தார். தையலும் என்பதிலுள்ள உம்மை எச்ச வும்மையாய்த் ''தாயுமானவர்'' என்பதிற் போலச் சிவமாயிருப்பது சத்தியாயும் வரும் உண்மையைத் தெளிவித்துக்கொண்டிருக்கிறது.

இறுதியில் பெரிய மலையும் குளிர்ந்த கடலும் சிவமே என்று கூறி மேலுயர்ந்த மலையிலும் கீழாழ்ந்த கடலிலும் சிவத்தைக் கண்டு செய் யுளை முடிக்கின்ருர். நீரால் தாங்கப் பெறு கின்ற நிலம், முதற்கண் மலைகளாக எழுந்து பின்னர் மண்ணுக மாறியதென்பது ''கல் தோன்றி மண் தோன்ருக் காலத்தே'' என்ற பரிமேலழகர் உரைப் பகுதியால் அறியப் படு கின்றது. இது உலகப் படைப்புக்குச் சிவ பெருமான் கர்த்தா என்பதையும் மேலும் கீழு முள்ள எல்லா உலகங்களும் அவற்றிலுள்ள அனைத்துப் பொருள்களும் சிவமயமே என்பதை யும் தெளிவு படுத்துவதாகும்.



ஸ்ரீ பார்த்த ஸாரதி சுவாமி, திருவல்லிக்கேணி

# உள்ளுறை பொருள் ஆராய்ச்சி

( மகாவித்வான் ஸ்ரீமத் P. B. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம் )

## 11. பறவை விசேஷார்த்தம்.

ஆழ்வார்கள் குயிலென்றும் மயிலென்றும் சில பக்ஷி விசேஷங்களைச் சிறப்பித்தெடுத்துக் கூறுவது தவிர பொதுவாக 'நன்னலப் புள்ளினங்காள்!' என்றும், 'புள்ளினங்காள்! புல்லாணி......செப்புமினே' என்றும், 'புள்ளும் சிலம்பினகாண்' என்றும்பக்ஷிஸாமான்யங்களைக் கூறியிருப்பது முண்டாதலால் அதற்குரிய ஸ்வாபதேசார்த்தம் கேண்மின்.

பக்ஷியானது இரண்டு சிறகுகளினாலே உயரப் பறக்குமது. ஆசாரியர்களும் ஜ்ஞானம் அநுஷ்டாநம் என்கிற உபய பக்ஷங்களாலே உயர்கதியைப் பெறுவதும் பெறுவிப்பதுமாயிருப்பார்கள். 'ஞான மனுட்டானமிவை நன்றாகவே யுடையனான குருவையடைந்தக்கால்' என்றார் மணவாள மாமுனிகளும். ஆகவே ஜ்ஞாநுஷ்டாந ஸம்பந்நர்களாய் உச்சிர்கதி ஸமர்த்தர்களாயிருக்கும் மஹநீயர்களையேபக்ஷிகளாக மறைத்துக் கூறின ரெனக் கொள்க. 'உபாப்யாமேவ பக்ஷாப்யாம் ஆகாசே பக்ஷிணாம் கதி: ததைவ ஜ்ஞாநகர்மப்யாம் ப்ராப்யதே புருஷோத்தம:' என்று மஹரிஷிகளும் இந்த ஸ்வாபதேசத்தை ஸூசிப்பித்துள்ளார்கள்.

இங்ஙனே மறைத்துச் சொல்லுவது அலங்கார சாஸ்த்ர மர்யாதையில் மிக மேம்பட்டதாகும். அபநுதியென்றும் ஸமாஸோக்தியென்றும் அப்ரஸ்துத ப்ரசம்ஸை யென்றும் சிலஅலங்காரங்கள் கூறுவர்கள். இவற்றிற்குக் காட்டும் லக்ஷ்யங்கள் ஸ்வாபதேசார்த்தத்தையே உயிராகக் கொண்டிருக்கும். ஒன்று காட்டுவோம்: 'க்ருதீ சகுந்தேஷ்வயோந்யம் சக்ராத் ந யாசதே' என்கிறானொருவன். பக்ஷிகளுக்குள்ளே ஒரு பக்ஷிதான் சிறந்தது; அது வென்னில், தேவேந்திரனைத் தவிர வேறு எவனையும் நோக்கிப் பல்லைக் காட்டாத பக்ஷி எதுவோ அதுவேயாம்—என்பது இந்த ச்லோகத்தின் பொருள். நதி குளம் குட்டை ஏரி முதலிய ஒன்றிலும் வாய் வைக்காமல் நேராக மழைத்தாரையையே பருகி விடாய் தீரும் சாதக பக்ஷியைப் பற்றிக் கூறினவிது, பகவான் தவிர வேறு யாரிடத்திலும் பல்லைக் காட்டாத 'வெண்பல் தவத்தவரான' பரமைகாந்திகளைக் கூறினபடி யென்பது அறிய வெளிது. இங்ஙனே மறைத்துக் கூறுவதில் விசேஷமான ஸ்வாரஸ்யாதிசயமுண்டென்பதை ரஸிகர்கள் அறிவர்கள்.

பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார் 'பள்ளச் செறுவில் கயலுகளப் பழனக்கழனியதனுள் போய், புள்ளுப் பிள்ளைக்கிரைதேடும் புள்ளம் பூதங்குடிதானே' என்றருளிச் செய்தார். கழனிகளில் மீன்களானவை துள்ளித் துள்ளி விளையாடாநிற்க, பறவைகளானவை அங்குச் சென்று தம்தம் குட்டிகளுக்கு உணவாகக் கூடிய மீன்களைத் தேடுமிடம்—என்று தலத்தின் வயல்வளத்தை வருணித்தபடி இது.

முற்காலத்தில் ஆலவாயுடையான் என்பானொரு தமிழன் பட்டரிடம் வந்து இப்பாட்டில் ஒரு கேள்வி கேட்டானாம்; 'பள்ளச் செறுவில் கயலுகள' என்ற போதே அவ்விடத்து வயல்களில் மீன்கள் அளவற்றுக் கிடக்கின்றமை வெளி வந்து விட்டதன்றோ; அப்படியிருக்க மேலே 'புள்ளுப் பிள்ளைக்கு இரை தேடும்' என்று எங்ஙனே சொல்லலாம்? மீன் அருமைப் பட்டிருந்தா லன்றோ இரை தேடவேண்டும். கொள்வார் தேட்டமாம்படி அவை குறையற்றுக் கிடக்கும்போது அவற்றைத் தேடிப் பிடிப்பதாகச் சொல்லுவது பொருந்ாதன்றோ? ஆகவே 'இரைதேடும்' என்ற விது எங்ஙனே பொருந்தும்? என்றானாம். இதற்குப் பட்டர் அருளிச் செய்ததாவது, 'பிள்ளாய்! நீ கற்றவனாயினும் சொற்போக்கு அறிந்திலை; 'இரை தேடும்' என்று இவ்வளவே யில்லையே; 'பிள்ளைக்கு இரைதேடும்' என்றிருப்பது கண்டாயே. அங்குள்ள மீன்கள் நிலமிதியாலே தூணும் துலாமும் போலே தடித்திருக்கும்; அவை குட்டிகளின் வாய்க்குப் பிடிக்கமாட்டா வாகையால் உரிய சிறுமீன்கள் தேடிப் பிடிக்க வேண்டு

மத்தனே யன்றோ? என்றாராம். இதனால், மிகவும் கடினமான சாஸ்த்ரார்த்தங்களைக் கொள்ள மாட்டாத சிஷ்யர்களுக்குத் தகுதியாக (அவரவர்களின் அதிகாரா நுகுணமாக) லலிதமான அர்த்தங்களை யெடுத்துரைக்கும் சாதுரிய முடையவர்களாகிய தன்மை விவக்ஷிதம்.

## 12. அறுகால சிறுவண்டு விசேஷார்த்தம்:

ஆழ்வார்கள் பலவிடங்களிலும் வண்டாகக் கூறுவது பகவத் விஷயாநுபவ நிரதர்களான மஹநீயர்களை யென்க.

1. வண்டு மதுவ்ரத மென்று பேர் பெற்றிருக்கும். தேன் தவிர வேறொன்றைக் கொள்ளாது என்றபடி. அதுபோல, 'உளங்கனிந் திருக்குமடியவர் தங்களுள்ளத்துள் ஊறிய தேனை' என்றும், 'எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே' என்றும், 'தேனைநன்பாலைக் கன்னலை யமுதை' என்றும் பலவிடங்களிலும் தேனாகச் சொல்லப்பட்ட பகவத் விஷயத்தை விரும்பி, 'தவாம்ருதஸ்யந்திநி பாதபங்கஜே நிவேசிதாத்மா கதமந்யதிச்சதி, ஸ்திதேரவிந்தே மகரந்த நிர்ப்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே' என்று ஆளவந்தாரருளிச் செய்தபடியே மற்றொன்றைக் கண்ணெடுத்துப் பாராமல் இதனையநுபவிப்பதையே விரதமாகக் கொண்டிருப்பாரைச் சொல்லுகிறது.

2. 'வரிவண்டு தேதென வென்றிசைபாடும்' 'யாழினிசை வண்டினங்கள் ஆளம் வைக்கும்' 'வண்டினங்கள் காமரங்களிசை பாடும்' என்கிறபடியே எப்போதும் முரல்வதே வண்டுகளுக்குப் பணி. அதுபோல 'மச்சித்தா மத்கதப்ராணா: போதயந்த: பரஸ்பரம், கதயந்தச்ச மாம் நித்யம் துஷ்யந்திச ரமந்தி ச' என்று கீதாசார்யன் பணித்தபடியே அநவரதமும் எம்பெருமானைச் சொல்லிப் பாடுவதையே போது போக்காகக் கொண்டவர்களும் 'யாழினிசை வேதத்தியலான' திருவாய்மொழியைப் பாடிக் களிப்பவர்களுமான பாகவதர்களைச் சொல்லுகிறது. 'அறுகால் வரி வண்டுகள் ஆயிர நாமஞ் சொல்லிச் சிறுகாலைப் பாடும்' என்றும், 'எல்லியம்போது இருஞ்சிறை வண்டு எம்பெருமான் குணம்பாடி' என்றும் அருளிச் செய்த பெரியாழ்வார் ஸ்வாபதேசப் பொருளையே ஒருவாறு வெளியிட்டருளினாராயிற்று. எம்பெருமானுடைய திருநாமங்களையும் திருக்குணங்களையும் பாடுகின்ற வண்டு காட்டில் திரியும் வண்டாக இருக்க முடியாதன்றோ.

3. வண்டு சஞ்சரீக மென்று பேர் பெற்றிருக்கும்; ஓரிடத்தில் தங்கியிராது மதுவுள்ள இடமெங்கும் பறந்து திரியும். அதுபோல, 'கண்டியூரரங்கம் மெய்யம் கச்சிபேர்மல்லை' யென்கிற திருப்பதிகள் தோறும் மண்டி, 'எண்டிசையும்பேர்த்தகரம் நான்குடையான் பேரோதிப் பேதைகாள்! தீர்த்தகரராமின் திரிந்து' என்று பூதத்தாழ்வார் நியமித்தபடியே 'கொங்குங் குடந்தையும் கோட்டியூரும் பேருமெங்குந் திரிந்து' பதியே பரவித் தொழும் தொண்டர்களாயிருக்கும் அவர்களைச் சொல்லுகிறது.

4. வண்டு எந்த ஸமயத்தில் எங்குச் செல்ல வேணுமென்று நினைத்தாலும் அதற்குத் தடை கிடையாது. ஸந்நிதிகளில் கர்ப்பக்ருஹங்களினுள்ளும் எம்பெருமான் திருமுடிமீதும் தாராளமாகப் புகக் காணாநின்றோம். அதுபோல, 'பின்னிட்ட சடையானும் பிரமனுமிந்திரனும் துன்னிட்டுப் புகலரிய' என்றும், 'சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க' என்றும் சொல்லுகிறபடியே, திருவாசல்களிலே ஸேவாபரரானவர்கள் நிறைந்து தலை நுழைக்க வொண்ணாதபடி நெருக்க, அதிகாரச் செல்வத்துடனே தடையும் சங்கையுமொன்று மின்றிக்கே உள்ளே புகுந்து ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்து வாழ்பவர்கள் விவக்ஷிதர்கள். இங்ஙனே மற்றும் காண்க.

(தொடரும்)

# ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை

(திரு. கே. பட்சிராஜன், பி.ஏ.,பி.எல்., திருநெல்வேலி)

( முன் இதழ்த் தொடர்ச்சி )

சிற்றெயிற்றுமுற்றல் மூங்கில் மூன்றுதண்டர்களான எழுநூறு ஜீயர்கள் ''நுங்கால்கள் எந்தலைமேல் கெழுமீரோ'' என்கிறபடியே அவ் விமானத்தை எழுவித்துத் தமது தோள்களிலே எழுந்தருளப் பண்ணிக் கொண்டு ஸ்ரீ பாதம் தாங்கி வந்தனர். எழுபத்து நான்கு ஸிம்மாஸனதிபதிகளும் சத்ரசாமரம் முதலிய விருதுகள் சூழ ஒரு பொன் தட்டிலே எம்பெருமானுடைய திருவடி நிலைகளைத் தலையிலே ஏந்தியவராய் ஜய விஜயீபவ முழக்கோடு முன் சென்றனர். மற்றுள்ள சாத்திய சாத்தாத முதலிகளனைவரும் அமுதனார் உடையவர் விஷயமாக அருளிச் செய்த நூற்றந்தாதியை ஒரு மிடறுகப் பெருங்கோஷத்தோடிசைத்துச் சென்றனர். மற்றும் சிலர் கருடக் கொடி அநுமக் கொடி, குடை, சுருட்டி, ஆலவட்டம், பொன் வெள்ளித் தடிகள் இவ்வித எடுபிடிகள் ஏந்தி வந்தனர். சிலர் பூர்ண கும்பமேந்தினர். சிலர் திருவொண்பந்தம் பிடித்தனர். சிலர் உடையவர் பவனி வரும் வீதிகளிலே சென்று தெருவைக் குப்பை மாற்றி, மேடு பள்ளம் நிரப்பிச் செப்பனிட்டனர். சிலர் அவ்விதம் செப்பனிட்ட வீதியிலே குளிர்நீர் தெளித்தனர். சிலர் அங்ஙனம் தெளியுற்ற வீதியெங்கும் மலர் தூவினர். சிலர் பக்கமெங்கும் பசுங்கால் நட்டு இருபுறமிணையத் தோரணங் கட்டினர். சிலர் பொரியை எங்கும் வாரிச் சிந்தினர். சிலர் சிலவிடங்களில் எண்ணெய் சுண்ணம் எதிரெதிர் தூவி மகிழ்ந்தனர். சிலர் உடையவர் விமானத்தைச் சூழ்ந்து கையிலே பற்பல படைகளை ஏந்தியவராய் அவர் திருமேனி காவலராகச் சென்றனர். சங்கம், சின்னம் எக்காளம் பேரி, முருகு முதலியவற்றின் ஓசை வானுறவோங்கியது.

இப்படி கோலாகலத்துடனே எம்பெருமானார் பவனி வருகையில் தெருவிலே ஒவ்வொரு இல்லத்தும் உள்ள சதிரிள மங்கையர் கதிரொளி தீபம் கலசமுடனேந்தி உடையவரை மங்கலமாக வரவேற்றனர். ஆடவர் அனைவரும் ''ஆண்மின்கள் வானகம் ஆழியான்தமர்'' என்று கோஷித்து எம்பெருமானார் திருவடிகளிலே சாஷ்டாங்கமாகத் தெண்டன் சமர்ப்பித்து நின்றனர். எல்லா இல்லங்களின் முகப்பிலும் பன்முகக் குத்து விளக்குகள் ஏற்றி வைக்கப் பெற்றிருந்தன. இளஞ்சிறுர்கள் பெரிய பெருமாள் பெரிய திருநாள் போல அங்கங்கே கூடி நின்று மகிழ்ச்சி பொங்க ஆரவாரித்து விளையாடி நின்றனர்.

வாய்த்த பெரும்பூதூரில் மன்வந்தான்
ஏத்துமிளையாழ்வாரெனும் எம்பிரான்
வந்தான்
வரநாகணை தீர்ந்தவதாரம் செய்நெடிய
வடிவன்வந்தான்
வளையாழி யேந்திய மால்வந்தான்
நளினமுக வெம்பெருமா னெங்கள்எதிராசன்
வந்தான்
உம்பரெலா நோக்கு மிராமாநுசனும் முனி
வந்தான்.
வாக்கிலுயர் சூரியில் மன்னவன்வந்தான்
உடையவராமென்னு மொருமுதல்வன் வந்
தான்
ஸ்ரீபாஷ்யகாரரெனும் ஸ்ரீமான் வந்தான்
திருவரங்கன் திருவுளத்தே சிறந்து நின்றுன்
வந்தான்.

எனப் பலவித வரவேற்புக் கட்டியங்கள் வானை முட்டின. இங்ஙனம் போந்த பவனி அரங்கமா நகரில் ஒரு திருவீதி யொழிவின்றி எழுந்தருளி உடையவர் மடத்தை யடைந்தது. ''என்னையாளுடையான் தோள்நின்றெம்பிரான்'' இறங்குவது போன்று ஓங்கார விமானத்தினின்றும் பொலிவு பெற்ற முகத்தோடு இறங்கினுர் எம்பெருமானர்.

கூடியிருந்தாரனைவரும் ''சீராருமெதிராசர் வாழி திருவரையில் சாத்தியசெந் துவராடை

வாழி'' என்று மங்களா சாஸனம் பண்ணி மகிழ்ந்தனர். அனைவரையும் தமது அருள் நோக்கால் அணைத்தபடியே எம்பெருமானுர் திருமடத்துள்ளே எழுந்தருளி ஆங்கிட்ட பொற் றவிசின்மீதே அமர, அனைவரும் கோஷ்டியாக அமர்ந்தனர். பின்னர் ஒவ்வொருவராகச் சென்று உடையவர் ஸ்ரீபாத தீர்த்தம் பெற் றுக் கொண்டனர். கோஷ்டி யனைத்தும் கிடாம் பியாச்சான் பாலும் பழமும் முடநெய் பெய்து வழிவாரும் பாலடிசிலும் பரிமாற அனைவரும் தொண்டர்க்கமுதான ப்ராஸாதத்தை அமுது செய்துகந்தனர். உடையவர் மட்டற்ற மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு விடை கொடுக்க, அவர்களும் உடையவரை நோக்கி நோக்கித் தயங்கித் தயங்கி வெளிச் சென்றனர்.

உடையவரும் வைஷ்ணவ ஸ்ரீ வளர்ச்சியில் மிகவும் களித்தவராய் ஆழ்வார், ''கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண் டோம்.................வண்டார் தண்ணந்துழா யான் மாதவன் பூதங்கள் மலியப் புகுந்திசை பாடி எங்குமிடங் கொண்டனவே'' என்று தம் உளக்கண்ணில் கண்ட காட்சி நனவாக வெகு நாளில்லை என்ற மனநிறைவோடு திருவரங்கன் திருச் செல்வத்தையும் சீர்த்தியையும் பரப்பிக் கொண்டு எழுந்தருளி யிருந்தார்.

உடையவர் திருவடிகளிலே ஆச்ரயித்த முதலிகளில் பிரதானமானவர்கள்:

(1) கூரத்தாழ்வான் (2) மாட்பூசி ஆழ்வான் (3) சேட்லூர் சிறியாழ்வான் (4) அநந்தாழ்வான் (5) நடாதூ ராழ்வான் (6) எங்களாழ்வான் (7) அரண புரத்தாழ்வான் (8) அகளங்க நாட்டாழ் வான் (9) நெய்யுண்டாழ்வான் (10) உக்கலாழ்வான் (11) கோமடத்தாழ்வான் (12) வேதாந்தி யாழ்வான் (13) நடுவிலாழ்வான் (14) பிள்ளையாழ்வான் (15) மிளகாழ்வான் (16) காராஞ்சி யாழ்வான் (17) ஈயுண்ணியாழ்வான் (18) கோயிலாழ்வான் (19) திருக்கோவலூ ராழ்வான் (20) திருமோகூராழ்வான் (21) முதலியாண்டான் (22) பெரியாண்டான் (23) சிறியாண்டான் (24) அம்மங்கி யாண்டான் (25) மாருதிப் பெரியாண்டான் (26) மாறொன்றில்லா மாருதிச் சிறியாண்டான் (27) ஸோமயாஜியாண்டான் (28) கந்தாடையாண்டான் (29) ஈச்வராண் டான் (30) ஈயுண்ணியாண்டான் (31) பிள்ளையாண்டான் (32) குறிஞ்சியூர்ச் சிறியாண்டான் (33) ஆளவந்தாராண்டான் (34) ஜீயர் ஆண்டான் (35) கிடாம்பியாச்சான் (36) சிறியாச் சான் (37) கணியனூர்ச் சிறியாச்சான் (38) கொங்கிலாச்சான் (39) ஈச்சம்பாடியாச்சான் (40) என்னுச்சான் (41) ஐயப்பிள்ளையாச்சான் (42) தூயபிள்ளையாச்சான் (43) ஆச்சியாச்சான் (44) எச்சான் (45) அருளாளப் பெருமாளெம் பெருமானுர் (46) தொண்டனூர் நம்பி (47) மருதூர் நம்பி (48) மளூர் நம்பி (49) சொட்டை நம்பி (50) குரவை நம்பி (51) திருக்குறுங் குடி நம்பி (52) வங்கிபுரத்து நம்பி (53) முடும்பை நம்பி (54) ஸ்ரீ பராங்குச நம்பி (55) ஸ்ரீ வில்லிபுத்தூர் நம்பி (56) வடுக நம்பி (57) திருக்குருகூர் நம்பி (58) கோமண்டூர்ப்பிள்ளை நம்பி (59) ஸ்ரீ பராசர பட்டர் (60) ஸ்ரீ பராங்குச பட்டர் (61) வரந்தரும் பெரிய பெரு மாள் பட்டர் (62) அழகிய மணவாள பட்டர் (63) ஸ்ரீ வேதவியாச பட்டர் (64) சிறுப்பள்ளி தேவராஜ பட்டர் (65) கோவிந்த பட்டர் (66) திருவரங்க பட்டர் (67) நம்பியாரில் ஸ்ரீ ரங்க ராஜ பட்டர் (68) பெரிய பெருமாள் பட்டர் (69) சட்டம்பள்ளி ஜீயர் (70) ஈச்சம்பாடி ஜீயர் (71) ஸ்ரீ குலசேகர ஜீயர் (72) திருவெள்ளறை ஜீயர் (73) ஆட்கொண்டவில்லி ஜீயர் (74) திருமழிசை ஜீயர் (75) திருவாய்மொழி ஜீயர் (76) திருநாராயணபுர ஜீயர் (77) ஸ்ரீ சாளக்ராம ஜீயர் (78) கோவிந்த ஜீயர் (79) திருமாலிருஞ்சோலை ஜீயர் (80) திருப்புட்குழி ஜீயர் (81) திருக்குடந்தை ஜீயர் (82) திருமுட்டஞ் ஜீயர் (83) திருநின்றவூர் ஜீயர் (84) திரு நாராயணபுரத்தரையர் (85) பெருமாள் கோயில் பெருமாளரையர் (86) ராஜநாராயணப் பெருமாளரையர் (87) திருவரங்க மாளிகையரையர் (88) திருவாய் மொழியரையர் (89) பிள்ளை திருநறையூரரையர் (90) திருக்குறுங்குடியரையர் (91) திருநகரியரையர் (92) திருக் கண்ணபுரத்தரையர் (93) திருமாலிருஞ்சோலையரையர் (94) திருவநந்தபுரத்தரையர் (95) ராஜமஹேந்திரபுரத் தரையர் (96) பிள்ளை விழுப்புத்தூரரரையர் (97) திருவேங்கடத்தரையர்

(தொடரும்)



திருமால்

## பொருளடக்கம்


1. சங்க நூல்களில் இராமாயணம்
2. திருமுருகாற்றுப்படை
3. திருமுருகாற்றுப்படையின் சிறப்பு
4. திருமுருகாற்றுப்படையின் சுவை நலம்
5. திருச்சந்த விருத்தம்
6. ஞான சித்தர்களும் சித்த மருந்தும்
7. கருணை மலை
8. விடை தெரியுமா ?
9. விடை விளக்கம்
10. எல்லாம் சிவமயம்
11. உள்ளுறை பொருள் ஆராய்ச்சி
12. ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை


## சந்தாதார்களுக்கு வேண்டுகோள்

**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் ''திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34'' என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங் களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித் துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்